
இலவசம்

# அரங்கம்

செய்திகள்

கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்புடகம்




வார இதழ்– மட்டுநகரிலிருந்து...

www.arangamnews.com

வெள்ளி, சித்திரை 20, 2018. இதழ் – 09

இலவசம்

# “இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசியலமைப்பு மாற்றத்துக்கு ஒரு புதிய வழி”

## தமிழ் கட்சி ஒன்றின் தலைவர் பரிந்துரைக்கிறார்

சிங்கள கட்சிகள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு காணப்படுகின்றது. இதன் காரணமாக தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை மக்களுக்கும் அதிகாரங்களை வழங்குவதற்கான அரசியலமைப்பு மாற்ற முயற்சிகள் முடங்கிப் போய் கிடக்கின்றன.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு வழங்கிய காலவரையறை குறித்த உறுதிகளும் நிறைவேற்றப்பட முடியாத நிலை உருவாகியுள்ளது.




இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு நோக்கில் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முடக்க நிலையை களைவதற்கான புதிய வழி ஒன்றை முன்வைக்கவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலாளரும், அகில இலங்கை தமிழர் மாகா சபை என்னும் கட்சியின் தலைவருமான டாக்டர். கே. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக உருவாக்கப்படக் கூடிய அரசியல் யாப்பின் தன்மை ( ஒற்றை ஆட்சியா அல்லது கூட்டாட்சியா?) வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு போன்ற விடயங்களில் முன்னணி

அதேவேளை, அண்மைய உள்ளூராட்சி சபை தேர்தல்களை அடுத்து கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக, அரசியலமைப்பு மாற்ற நடவடிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போவதற்கான நடவடிக்கைகள் கிட்டத்தட்ட கிடப்பில் போடப்பட்டுள்ளன. இன்றைய நாடாளுமன்ற சூழ்நிலையில், அப்படியாக ஒரு அரசியலமைப்பு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டாலும், அதனை மூன்றில் இரண்டு பங்கு வாக்கு பலத்துடன் நிறைவேற்ற முடியுமா என்ற கேள்வியும் பலமாகவே இருக்கின்றது.

இந்த நிலையிலேயே தான் இதற்கான ஒரு புதிய வழியை பரிந்துரைக்கப் போவதாக விக்னேஸ்வரன் கூறுகிறார்.

இதன்படி ஏற்கனவே உள்ள அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தில் சில மாற்றங்களை செய்ய வேண்டும் என்று தான் பிரேரித்து, பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வதாக அவர் கூறுகிறார்.

தனது உத்தேச பரிந்துரையின்படி பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் குறித்த மூன்று பட்டியல்களுக்கு ( மத்திய பட்டியல், மாகாணப் பட்டியல், ஒத்திசைவுப்

தொடர்ச்சி... (பக்கம் -02 )




# “அன்னை பூபதியின் பெயரை வைத்து அரசியல் நடத்துகிறார்கள்”

அன்னை பூபதியின் பெயரை வைத்து அரசியல் கட்சிகள் அரசியல் நடத்துவதாகக் கூறி அவரது பிள்ளைகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனால், அவரது நினைவு தின நிகழ்வுகளில் எந்தவொருவரும் அரசியல் கட்சி ரீதியாக கலந்துகொள்ளக்கூடாது என்று அவர்கள் அறிவித்திருந்தனர். தமது நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு வழங்கும்படி அவர்கள் போலிஸ் நிலையத்திலும் பாதுகாப்பு கோரியிருந்தனர்.

அதனையடுத்து அன்னை பூபதியின் 30 வது வருட நிறைவு தினத்தை முன்னிட்ட நிகழ்வுகள் அவர்களது குடும்ப ஏற்பாட்டில் வியாழனன்று நடத்தப்பட்டதுடன், அரசியல் கட்சி ரீதியாக எவரையும் அவர்கள் அங்கு அனுமதிக்கவில்லை.

இந்திய அமைதிகாப்புப் படைக்கு எதிரான விடுதலைப்புலிகளின் போராட்டக் காலத்தில், இந்தியப் படையினரை எதிர்த்து உண்ணாவிரதமிருந்து, உயிர்



நீத்தவர் அன்னை பூபதி. அவரது மறைவு தினத்தை கடந்த காலங்களில் பல தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஒரு நிகழ்வாக அனுட்டித்து வந்தன.

ஆனால், அவர்கள் தமது தாயின் நினைவு தினத்தை வைத்து அரசியல் செய்வதாக அவரது பிள்ளைகள் இப்போது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இது குறித்து எமது பத்திரிகையிடம் பேசிய அவரது ஒரு மகளான சாந்தி லோகேஸ்வரன், சுனாமியால்

தொடர்ச்சி... (பக்கம் -22 )



# சுவிஸ் பஸ் விபத்தில் 12 இலங்கையர் காயம்



சுவிட்சர்லாந்து நாட்டில் சூரிச்சுக்கு அருகே நெடுஞ்சாலை ஒன்றில் இலங்கை சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று டிரக்குகளுடன் மோதியதில், 12 இலங்கையர் உட்பட 15 பேர் காயமடைந்தனர்.

வடக்கு நகரான சூரிச்சுக்கு அருகே 40 பயணிகளுடன் சென்ற இந்த பஸ், இரு டிரக்குகளுடன் மோதியதாக சுவிஸ் பொலிஸார் கூறியுள்ளனர்.

காயமடைந்த 15 பேரில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் இருந்து வந்த சுற்றுலாப்பயணிகளை இந்த பஸ் ஏற்றிச் சென்றதாக ஏடிஎஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

விபத்தின் போது, ஓட்டுனரும், அவருக்கு உதவியாக வந்த பெண்ணும் வண்டிகளுக்குள் அகப்பட்டுக் கொண்டதாகவும், அவர்களை மீட்புப் பணியாளர்கள் வந்து மீட்க வேண்டியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஓட்டுனருக்கு சிறிய காயமே ஏற்பட்ட போதிலும், அந்த பெண் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்.

# பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அன்னை பூபதியின் நினைவுதினம்



இந்திய இராணுவத்தை நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்த அன்னை பூபதியின் 30 ம் ஆண்டு நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை 19 திகதி பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அவரின் சகோதரி கண்ணமுத்து பிள்ளையம்மா மற்றும் பிள்ளைகள் ஈகைச்சுடர் ஏற்ற அனுஷ்டிக்கப்பட்டது. “மட்டக்களப்பு நாவலடியில் உள்ள நினவுத் தூபியில் அரசியல் கட்சிகளோ அல்லது அமைப்புக்களோ நினைவு தின நிகழ்வுகள் நடாத்த அனுமதிக்க முடியாது” என அன்னை பூபதியின் பிள்ளைகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தனர்.

இந்த நிலையில் அன்னை பூபதியின் பிள்ளைகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செய்த ஏற்பாட்டையடுத்து காலை 9.00 மணிக்கு பூபதியம்மாவின் சகோதரி கண்ணமுத்து பிள்ளையம்மா அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஈகைச்சுடரை ஏற்றினார். இதனைத் தொடர்ந்து அவரின் பிள்ளைகள், உறவினர்கள், சில அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வை புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுப்பதற்கு ஊடகவியளாளர்களைத் தவிர ஏனையோருக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாநகர முதல்வரின் மாநகர ஒளிமயமாக்கல் திட்டம்

மட்டக்களப்பு மாநகர முதல்வரின் “மாநகர ஒளியாக்கல் திட்டம்” ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டச் செயற்பாடாக செவ்வாய்க்கிழமை கல்லடிப் பாலத்தில் ஒளிரா நிலையிலிருந்த மின் விளக்குகள் சரிசெய்யப்பட்டன.

மாநகர சபைப்பிரதேசத்தின் ஒவ்வொரு பிரதேசமாக ஒளிரா நிலையில் இருக்கின்ற வீதி மின்குமிழ்களை ஒளிரச் செய்யும் வேலைப்பாடு மட்டக்களப்பு மாநகர சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
கல்லடி, திருச்செந்தூர் பிரதேசங்களில் இந்த நடவடிக்கை முதலில் முன்னெடுக்கப்பட்டது. இச்செயற்பாட்டினை



பார்வையிடுவதற்காக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் அவ்விடம் சென்று நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

அதேபோன்று எதிர்வரும் வாரத்தில் நகரின் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான திட்டமிடல் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமோனியா தாங்கி விபத்தில் 5 பேர் பலி

ஹொரணை பெலப்பிட்டியவில் ரப்பர் தொழிற்சாலை ஒன்றில் அமோனியா தாங்கியில் ஏற்பட்ட விபத்தில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

ரப்பர் தொழிற்சாலையின் அமோனியா தாங்கியில் தொழிலாளி ஒருவர் தவறுதலாக விழுந்துவிட, அவரும், அவரை மீட்க வந்த கிராமவாசிகளும் அமோனியா வாயுவால் மயக்கமடைந்துள்ளனர்.

பின்னர் அவர்கள் ஹொரணை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அவர்களில் 5 பேர் இறந்துவிட்டதாக கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் அகப்பட்ட மேலும் பலர் மயக்கமடைந்துள்ளனர்.

# செங்கலடியில் 200 டெங்கு நோயாளிகள்

மட்டக்களப்பு செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த ஆண்டின் இதுவரை 200 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். ஆனாலும், அதனால் இதுவரை எவரும் உயிரிழக்கவில்லை என சுகாதார வைத்திய அதிகாரி இ. சிறிநாத் தெரிவித்தார்.

டெங்கு நோய் காரணமாக நாட்டில் 8 பேர் மரணமடைந்துள்ளனர். இதில் மட்டக்களப்பில் 3 இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் கூறினார்.



# “இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசியலமைப்பு மாற்றத்துக்கு ஒரு புதிய வழி”

தொடர்ச்சி

பட்டியல்) பதிலாக அவற்றுடன் நான்காவதாக உள்ளூராட்சி சபைகளுக்கான பட்டியல் ஒன்றும் ஏற்படுத்தப்படும் என்று அவர் கூறுகிறார்.

இந்த நான்கு பட்டியல்களில் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைக்கப்பட்டிருக்கும் என்றும், உள்ளூராட்சி பட்டியலில் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் இருக்காது என்றும், மாகாணங்களுக்கான அதிகாரப் பட்டியல் மேலும் வலுவூட்டப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

மொத்ததில் இது 13வது திருத்தத்தை விட மேம்பட்டதாக இது இருக்கும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அதேவேளை, 13வது திருத்தத்தில் இருக்கக்கூடிய 154 ஜி (2) இன்படி மேற்படி மாற்றங்களின் போது, அனைத்து மாகாணசபைகளும் இந்த திருத்தத்தை ஏற்றால், அதனை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் இனிவரும் இரண்டு வருடங்களுக்குள் தற்போதைய அரசாங்கத்தை கொண்டு எதனையாவது செய்ய வேண்டுமானால், எதிர்த்தரப்புக்கு இருக்கக்கூடிய பலத்தை கருத்தில்கொண்டு, சாதாரண பெரும்பான்மையுடன் மாத்திரமே சட்டம் எதனையும் நிறைவேற்ற வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறுகிறார். ஆகவே இந்த புதிய வழியை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம் என்கிறார் விக்னேஸ்வரன்.

குறிப்பாக மாகாணங்களுக்கான அதிகார பட்டியல் வலுப்படுத்தப்படும் என்பதால், மாகாண சபைகளில் இதனை நிறைவேற்றுவதில் சிக்கல் இருக்காது என்று விக்னேஸ்வரன் எதிர்பார்க்கிறார்.

இந்த புதிய திட்டத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு தற்போதைக்கு வழி இருக்காது என்றும் கூறும் அவர், ஏற்கனவே உள்ள நிலைமைகளின்படிகூட, தற்போதைக்கு அதனை செய்வதற்கு தற்போதைய அரசியலமைப்பு பரிந்துரைகளிலும் வழி கிடையாது என்றும் கூறுகிறார்.

அரசின் தன்மை குறித்த விடயத்தில் நிலைமை 13வது திருத்தத்தில் உள்ளபடியே அப்படியே தொடர்வதால், அதனால் சிக்கல்கள் ஏற்படாது என்றும், 13 வது திருத்தம் ஒற்றை ஆட்சியையே குறிப்பிடுகின்ற போதிலும், புதியதில் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு கணிசமாக வழங்கப்படுவதுடன், அதனை மத்திய அரசாங்கம் மீளப் பெற முடியாத நிலைமை வலியுறுத்தப்படும் என்பதால், தமிழ் மக்களின் ஆட்சி அலகுகள் சுயாதீனமாக செயற்பட முடியும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் அரசின் தன்மை குறித்து மாற்றம் இல்லாத காரணத்தால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் தேவையில்லை. மாகாண சபைகள் அனைத்தும் அங்கீகரித்தால் போது.

தனது புதிய திட்டம் குறித்த இறுதிக் கட்ட வடிவமைப்பில் தான் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் அது பூர்த்தியானவுடன் சாதகமான கருத்துக்களை கொண்ட கட்சிகளுடன் சேர்ந்து அதனை முன்வைக்கப்போவதாகவும் அவர் கூறினார்.

உண்மையில் தற்போதைக்கு சாத்தியமல்லாத விடயங்களை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு நில்லாமல், யதார்த்தத்தை உணர்ந்த தற்போதைக்கு கிடைக்கக் கூடியதை பெற்றுக்கொண்டு அதிலிருந்து முன்னேறுவதற்கு தமிழ் கட்சிகள் முயல வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொள்கிறார்.






# தொடர்ந்து மக்கள் ஏமாற்றப்பட்டால் அரசியல் கட்சிகள் புறக்கணிக்கப்படும் நிலைவரும்

போர் முடிந்தாலும் அதன் காயங்களில் இருந்து மக்கள் விடுபடவில்லை என்பது கடந்த 9 வருடமாக பலதரப்பாலும் பேசப்படுகின்ற விடயம்.

இதன் அடிப்படையில் போரில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள், குடும்பத் தலைமையை இழந்த குடும்பங்கள் மற்றும் போரினால் நிரந்தரக் காயங்களுக்கு உள்ளானவர்கள் ஆகியவர்களின் நிலைமை பற்றி அரங்கம் நிறுவனமும் பல தடவைகள் பேசியிருக்கிறது.

பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அரங்கம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட வீடியோ ஆவணப் படங்களில் பலவும் அவற்றையே பேசின. “போராளிகள்”, “பெண் நிலை”, “உயிரிழை” என்ற தலைப்புக்களில் அரங்கம் தயாரித்த வீடியோ ஆவணப் படங்கள் இவற்றை ஆழமாகப் பேசியுள்ளன.

போர் ஏற்படுத்திய காயங்கள் மாத்திரமல்ல, அதன் பின்னர் ஏற்பட்ட பலவிதமான மாற்றங்களும் மக்களை பெரும் சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளன.

இவை குறித்து அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும், போருக்கு உதவிய புலம்பெயர் தமிழர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரங்கம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளது.

நிரந்தரமான அரசியல் தீர்வில் காட்ட வேண்டிய அக்கறையின் அளவுக்கு போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரச்சினைத் தீர்விலும் காட்டப்பட வேண்டும் என்றும் அரங்கம் வலியுறுத்தி வந்தது.

ஆனால், இன்னமும் நிலைமைகளில் போதுமான மாற்றங்க நடந்துவிட்டதாக கூற முடியவில்லை.

அரசாங்கமோ, அரசியல் கட்சிகளோ இந்த விடயத்தில் காட்டும் அக்கறை போதாது என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இப்போது இவற்றுடன் சேர்த்து வேறு குற்றச்சாட்டுக்களும் எழத்தொடங்கியுள்ளன. அதாவது போரில் பாதிக்கப்பட்ட மக்களும் முன்னாள் போராளிகளும் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதான குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், சில அரசியல் கட்சிகள் அவர்களது பெயர்களை வைத்துப் பிழைக்கத் தொடங்கியுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் வலுவாக எழுந்துள்ளன.

அதன் முதல் பகிரங்க வெளிப்பாடாக மாவீரர் தின நிகழ்வுகளில் சில பொதுமக்கள் அங்கு வந்த அரசியல் தலைவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்ததை கூற முடியும். அந்த நிலைமை இன்னமும் தொடர்கிறது.

அதன் ஒரு வடிவமே, தமது அன்னையின் உயிர்த் தியாகத்தை அரசியல் கட்சிகள் விற்றுப் பிழைக்க முயல்வதாக அன்னை பூபதியின் பிள்ளைகள் குற்றஞ்சாட்டியுள்ளமை. இந்த விடயத்தில் தமிழ் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் மீது அவர்கள் கடுமையாக சாடுகிறார்கள். நினைவு தினத்தில் வெறுமனே அரசியல் பேச்சுக்களை நிகழ்த்தி சுய அரசியல் லாபம் தேட இவர்கள் வருவதாக அவரது குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழர் சிலர் மீதும் குற்றச்சாட்டு திரும்பியுள்ளது.

அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் அண்மைய அரசியல் நெருக்கடியை அடுத்து முடக்க நிலையை எட்டியுள்ளன. இந்த நிலையில் போரில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான புனர்வாழ்வில் அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் கவனம் செலுத்தாமல் இருந்தால் அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் அந்நியப்படும் நிலையை எட்டுவார்கள்.

இப்படி கூறுவதால் சில அரசியல் பிரமுகர்களின் வெறுப்புக்கு நாம் உள்ளாவோம் என்பது எமக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால், இவை குறித்து ஒரு பொறுப்பான பத்திரிகை என்ற வகையில் நாம் சும்மா இருக்க முடியாது.

மக்களுக்காக பேசுவதே எமது கடமை. ஆகவே மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து நாம் உரக்கக் குரல் கொடுப்போம். இது தவிர்க்க முடியாதது. எந்தச் சிரமம் வரினும் மக்களுடன் கைகோர்த்துச் செயற்படுவோம். இதுவே எமது ஊடக தர்மம்.

--அன்புடன்
பூபாலரட்ணம் சீவகன்--

# பாடசாலை மாணவர்களுக்கான அரங்கத்தின் போட்டிகள்

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்
பாடசாலை மாணவர்கள் தமது அதிபரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம்.
போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாக நடைபெறும். இரு பிரிவுக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

### போட்டி:

பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று குறித்து 500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுத வேண்டும்.

1) ஏதாவது ஒரு நாடு (இலங்கை அல்லது வேறு ஒரு நாடு) எதிர்கொள்ளும் ஒரு சுகாதார பிரச்சினை அல்லது சுகாதாரச் சவாலின் தாக்கம் குறித்து விபரிக்கவும்.
2) ஒரு நாடு அல்லது ஒரு அமைப்பு பொதுமக்கள் சுகாதாரத்துறை எதிர்கொண்ட சவாலில் தலையிட்ட சம்பவம் குறித்து விபரிக்கவும். அந்த தலையீட்டின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணத்தை விபரிக்கவும்

### விதி

-- ஏனைய ஆதாரங்களில் இருந்து நீங்கள் சேகரித்த விடயங்களுக்கான மூலங்களை குறிப்பிடவும்.
-- கட்டுரையை நீங்களே எழுத வேண்டும்.
-- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர் நேர்முகச் சோதனைச் செவ்விக்கு அழைக்கப்படுவார்.
-- போட்டியில் கலந்துகொள்வோர் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதிபரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
--பிரதி பண்ணப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

### ஆலோசனை

பொதுமக்கள் சுகாதாரத்தை பாதிக்கும் ஒரு நோய் அல்லது சுற்றாடல் பிரச்சினையை தேர்ந்தெடுக்கவும்.
--உங்களுக்கு ஆர்வம் உள்ள விடயத்தை தேர்வு செய்யவும்
--இண்டர்நெட் மற்றும் புத்தகங்களை ஆய்வுக்கு பயன்படுத்தவும்
--ஒரு விடயத்தில் மாத்திரம் நிற்கவும்.
--தேர்ந்தெடுத்த விடயத்தை ஆக்கத்திறனுடன் முயற்சிக்கவும்
--இந்தக் கட்டுரை ஒரு விவாதமாக இருக்க வேண்டும். இருக்கக்கூடிய பல தரப்பட்ட பார்வைகளையும், உங்கள் கருத்தையும் அதில் குறிப்பிடவும்.

### உதாரணமான விடயங்கள் சில

தென்னாபிரிக்காவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் , உலகெங்கும் அல்கஹோலால் வரும் ஈரல் நோய்கள். தெற்காசிய சமூகத்தில் நீரிழிவு நோய்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

## ஓவியப் போட்டி

**போட்டிகளுக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது 31 - மே - 2018 வரை**

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர், உலக சுகாதாரம் எதிர்கொள்ளும் சவால்களைச் சித்தரிக்கும் வகையிலான ஓவியம் ஒன்றை வரைய வேண்டும்.

பொதுமக்களின் சுகாதாரத்தில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த ஓவியங்கள் விபரித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அந்த ஓவியத்தை விபரிக்கும் விளக்கம் ஒன்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும்.

ஏ3 அல்லது ஏ4 காகிதத்தில் அது வரையப்பட்டிருக்க வேண்டும். பென்சில், மை கொண்டு அது வரையப்பட்டிருக்கலாம்.

மூன்று பிரிவாக போட்டி நடைபெறும்.
6-10 வயது
11-14 வயது
15- 18 வயது

மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக
மூன்று பரிசுகள் 5000 ரூபாய், 3000 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்வோரின் வயதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

**தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227, பார் வீதி, மட்டக்களப்பு**

# வடக்கு முதல்வர் பற்றி விவாதிக்கும் தமிழ் தரப்புகள் ஏன் இன்னும் கிழக்கு முதல்வர் பற்றி சிந்திக்கவில்லை?



இப்பொழுது மாவையா, விக்கினேஸ்வரனா, டக்ளஸ் தேவானந்தாவா, சுமந்திரனா, வித்தியாதரனா, வரதராஜப்பெருமாளா அல்லது வேறொரு புதிய முகமா அடுத்த முதலமைச்சர் என்ற விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாகாண சபைத் தேர்தல் வரப்போகிறது என்ற அறிவிப்பு வந்ததை அடுத்து “வடக்கு மாகாணத்துக்கான அடுத்த முதலமைச்சர் யார்?” என்ற ஆராய்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தொடக்கம் ஈழத்தமிழர்களால் நடத்தப்படுகின்ற பெரும்பாலான தமிழ் இணையத்தளங்கள் வரை தமிழ்ப் பொதுவெளி இந்த ஆய்வில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

“அடுத்த முதலமைச்சருக்கான வேட்பாளராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாவை சேனாதிராஜாவை நிறுத்தப்போகிறது” என்றொரு வெடியை சுமந்திரன் எம்.பி கொழுத்திப் போட்டதோடுதான் இந்த விவகாரம் சூடு பிடித்தது.

சுமந்திரனின் அறிவிப்பு விக்கினேஸ்வரனுடைய ஆதரவாளர்களை உஷாராக்கியது. “மாவை சேனாதிராஜாவை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ள



முடியாது. ஆகவே நீங்கள் களமிறங்குங்கள்” என்று விக்கினேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்துக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த விக்கினேஸ்வரன், “கடவுளும் மக்களும் விரும்பினால் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேன்” என்று பதிலளித்தார்.

ஆனால், கிழக்கு மாகாணத்துக்கான அடுத்த முதலமைச்சர் யார்? அங்கே யார் யாரெல்லாம் முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்தப்படலாம் என்பதைப் பற்றி மறந்தும்கூட யாரும் பேசவில்லை. அதைப்பற்றி

சிவராசா கருணாகரன்

அக்கறைப்படுவதாகவும் இல்லை. இதையிட்டு கிழக்கிலே செல்வாக்குச் செலுத்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளோ பிற தரப்பினரோ சிந்திப்பதாகவும் தெரியவில்லை. சிலவேளை சிறையிலிருக்கும் பிள்ளையான் இதைக்குறித்துச் சிந்திக்கக் கூடும். மற்றும்படி இது பேசாப்பொருளாகவே உள்ளது.

வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், வடக்குக் கிழக்கு இணைப்பு அவசியம் என்றெல்லாம் முழக்கமிடுவோரின் சிந்தனையும் அக்கறைகளும் இப்படித்தான் உள்ளது.

இது ஒன்றும் புதியதல்ல. தமிழ் அரசியலே யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய ஒன்றுதான். இதுதான் காலகாலமாக நடந்து கொண்டிருக்கிறது. அது கிழக்கையும் பொருட்படுத்தாது. மன்னாரையும் கவனத்திற் கொள்ளாது. வன்னியைப் பற்றி அக்கறைப்படாது. அதிகம் ஏன், யாழ்பாணத்தின் வாயிற் கடவையில் இருக்கின்ற கிளிநொச்சியைப் பற்றியே சிந்திக்காது.

ஆனால், தமிழீழக்கனவை எப்போதும் கண்டு கொண்டிருக்கும்.

## ஏன் இந்த பாகுபாட்டு மனப்பாங்கு?

அதனுடைய இந்தக் கனவுக்கு மற்ற எல்லாப் பிரதேசத்தவர்களும் தங்களை ஒப்புக் கொடுக்க வேணும்.

இது ஒன்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டல்ல. அல்லது பிரதேசவாதம் பேசிப்

**வடக்கும் கிழக்கும் வேறு வேறுதான் என்பதை தமிழ் அரசியல் சக்திகள் ஏற்றுக்கொண்டுள்ளன என்பதற்கு இது ஒரு சான்றோ?**

பிரிவினையை உண்டாக்கும் சங்கதியுமல்ல. ஏனைய பிரதேசங்களைப் பற்றிப் பொருட்படுத்தாத, யாழ்ப்பாண மையச் சிந்தனையைப் பற்றிய




கவனப்படுத்தலேயாகும்.

இது ஏன் தொடர்கிறது? வடக்கின் முதலமைச்சராக யாரைத் தெரிவு செய்ய வேணும் என்பதில் காட்டப்படும் அக்கறை ஏன் கிழக்கு விடயத்தில்

வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

இதில் யாரும் கேள்விகளை எழுப்ப முடியாது. அப்படி எழுப்பினால், அது பிரிவினையை, பிரதேசவாதத்தை, தமிழின விரோதத்தை வளர்க்கும் செயல் என்று குற்றம்சாட்டப்படும். பழி சொல்லப்படும். ஆகவே இந்தப் பழிப்புரைக்காக அஞ்சி யாரும் இதைப்பற்றிப் பேச முற்படுவதில்லை.

அதற்காக இந்த மாதிரியான புறக்கணிப்பை, பாராமுகத்தை எப்படி ஏற்றுக்கொள்வது? வடக்கிற்கான முதலமைச்சர் வேட்பாளரைப்போல, கிழக்கிற்கான கவனமும் கொள்ளப்பட வேண்டும். அது தொடர்பான உரையாடல்கள் நடத்தப்படுவது அவசியம். இல்லையென்றால், வடக்கும் கிழக்கும் வேறு வேறு பிரதேசங்கள் என்று அரசாங்கம் சொல்வதை ஏற்பதாகவே அமையும். இன்னொரு வகையில் வடக்கும் கிழக்கும் வேறு வேறுதான் என்பதை தமிழ் அரசியற் சக்திகளும் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதற்கு இந்த வேறுபடுத்தல்கள் சான்று.

**இது ஒரு ஆதிக்கச் சிந்தனையே. ஆனால், இது ஒரு பாரம்பரியமாகவே வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது**

கொள்ளப்படவில்லை? முதலமைச்சர் வேட்பாளர் விடயம் மட்டுமல்ல, ஏற்கனவே வடக்கு முதலமைச்சருக்கும் வட மாகாணசபைக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கிழக்கு மாகாணசபைக்குக் கொடுக்கப்படவில்லை. இதுவும் மாற்றான்தாய் மனப்பாங்குடன்தான் அணுகப்படுகிறது.

இதற்குப் பின்னால் இயங்கும் உளவியல் சாதாரணமானதல்ல. எப்போதும் தலைமைத்துவச் சிந்தனை யாழ்ப்பாணத்திலிருந்தே உருவாகும். ஏனைய பிரதேசங்கள் அதை ஏற்று, அனுசரித்து, அதன் வழி நடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் விளைவே இது.

சந்தேகமேயில்லை, நிச்சயமாக இது ஆதிக்கச் சிந்தனையே. ஆனால், இது ஒரு பாரம்பரியமாகவே

அப்படியென்றால், இனிவரும் அரசியல் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது? இதைக்குறித்த உரையாடல்கள் உள்ளடுக்குகளில் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்றன. இனி அது பல அடுக்குகளில் நடக்கும். பகிரங்க வெளியில் நடக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கிழக்கின் தேசியம், கிழக்கின் தனித்துவம், கிழக்கின் வேறுபட்ட பிரச்சினைகள், கிழக்கின் களநிலவரம் குறித்த பன்முக உரையாடல்கள் தேவைப்படுகின்றன. இந்த உரையாடல்களை வடக்கு எப்படிப் பார்க்கும்? என்ற கேள்வியும் உண்டு. ஆனால், எப்படியோ யதார்த்தத்தை எல்லோரும் எதிர்கொண்டுதானாக வேண்டும். அதுவே வரலாற்றை உருவாக்குவது.



**மீண்டும் சந்திக்கும் வரை...**

# மட்டுநகர் மண் தந்த மிகச் சிறந்த பல்துறைக் கலைஞர் இரா. பத்மநாதன் அவர்களின் 13வது ஆண்டு நினைவு

மட்டக்களப்பு மாமாங்கம் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் அது. சுவாமி தீர்த்தமாடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. எங்கும் பக்தர்கள் மற்றும் அடியார்களின் கூட்டம். ஆலயத்தின் முன் மண்டபத்தில் இருந்த சிறிய வட்டம் ஒன்றில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நேரடி



அஞ்சல் குழுவினர், அவர்களுடைய ஒலிபரப்பு உபகரண இத்தியாதிகளுடன் பரபரப்பாக சுழன்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு மத்தியில் இவர்களில் ஒருவராய், ஆனால் மிகவும் அமைதியாக, கையில் ஒலிவாங்கியுடன், நடுத்தர உயரத்தில் மிகவும் சாதுவாக ஒரு மனிதர் நின்று கொண்டிருக்கிறார். சுற்று வட்டாரத்தில் உள்ள எந்தவித பரபரப்பையும் உள்வாங்கிக் கொள்ளாத அவரது வாய் மாத்திரம் மந்திரத்தை உச்சரிப்பது போல் அசைந்து கொண்டிருந்தது.

ஆம், அது உண்மையில் மந்திரந்தான். கிழக்கிலங்கையின் முக்கியமான இந்த ஆன்மீக நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமல் போன, அகில இலங்கை வாழ் அனைத்து இந்துக்களையும், வானொலியை செவிமடுக்க, ஈர்த்து வைத்திருந்த அந்த குரல் அப்போது உரைத்தவை எல்லாம் உண்மையில் மந்திரந்தான். அந்த குரலுக்கு சொந்தக்காரர் திரு இரா. பத்மநாதன் அவர்கள்.

அந்தக்காலத்தில் மட்டக்களப்பை பொறுத்தவரை வானாலிக் கலைஞராக வரவேண்டும் என்ற ஆர்வத்தில் திளைத்திருந்த அனைத்து இளைஞர்களுக்கும் அவர் ஒரு முன்னோடி. இன்று வரை இந்து விழாக்களை அவரைப்போன்று வானொலியில் நேரடி அஞ்சல் செய்ய யாருமில்லை என்று கூறுமளவுக்கு அந்த துறையில் கோலோச்சியவர் அவர்.

அன்று அவரைப் பார்த்தபோது என்னுள் உணர்ந்த விசயம் அவர் நெருங்க முடியாதவர், மிகவும் உயரத்தில் இருப்பவர், அவரை ஒரு தடவை தொட்டுப் பார்த்தால் நன்றாக இருக்கும் என்றுதான்.

அந்த அளவுக்கு அவரது குரலும், திறமையும் அவர் குறித்து ஒரு பிரமாண்டமான அந்தஸ்தை என்னுள் ஏற்படுத்தியிருந்தது. ஆனால் தமிழ் நாட்டில் அவரை சந்தித்த போது நான் பார்த்தது அவரது இன்னொரு பக்கம்.

அது அவரது எளிமையும், பாசத்தையும் மாத்திரம் கொண்டது. குறிப்பாக எனது தந்தையை இழந்து, அவரது இறுதிச் சடங்குக்குக் கூட ஊருக்குப் போக முடியாமல் இருந்த என்னை தேற்றியவற்றில் மிகவும் முக்கியமான பங்கு அவரது அரவணைப்பையே சேரும்.

அன்று ஒலிபரப்பாளராக மிகவும் உயரத்தில் நின்ற அவருக்கும், என்னை தேற்றியபோது அருகில் நின்றவருக்கும் இடையில் இன்றுவரை என்னால் ஒற்றுமையைக் காணமுடியவில்லை. அந்த அளவுக்கு அவர் ஆச்சரியம் மிக்கவராகவே இறுதிவரை இருந்துவிட்டுப் போய்விட்டார்.

ஊடகத்துறையில் எனது பிரவேசம் ஒரு விபத்தாகக் கூட இருக்கலாம். ஆனால் என்னை குட்டிய கைவிரலில் மோதிரம் இருந்தது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்.

ஆம், எனக்கு தொடர்பூடகத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் பத்மநாதன் அங்கிள்தான். புகைப்படக் கருவியில் எனக்கிருந்த ஆர்வத்தை, என்னிடம் நேரடியாக கேட்காமலேயே அறிந்து கொண்டு, திருவான்மியூர் அஷ்டலட்சுமி கோயிலில் வைத்து புகைப்படம் பிடிப்பது எப்படி என்பதை எனக்கு சொல்லிக் கொடுத்தார். அதற்கு முன்னர் எப்போதாவது ஒரு புகைப்படக் கருவியை நான் தொட்டிருக்கிறேனா என்பது எனக்கு ஞாபகமில்லை.

அன்று அந்த புகைப்படக் கருவியின் ஊடாக எனக்கு அறிமுகமானதுதான் எனது தொடர்பூடக வாழ்க்கை. பின்னர் லண்டன் சென்று பிபிசியில் ஒரு ஊடகராக வந்த பின்னரும் அதுதான் என்னுடன் தொடர்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், தொர்பூடகத்துறையில் எனது ஒவ்வொரு படிநிலை முன்னேற்றமும், அவர் தொடர்பில் எனக்கு ஆச்சரியத்தை அதிகரிக்கவே செய்து வந்திருக்கின்றன.

இலங்கை வானொலி, சுதந்திரன் பத்திரிகை மற்றும் தினமுரசு வாரமலர் போன்றவை உட்பட இலங்கை ஊடகங்களுக்கான பத்மநாதன் அங்கிளின் தொடர்பைத்தான் பலருக்கும் தெரியும்.

ஆனால் ஆல் இந்தியா ரேடியோ என்ற இந்திய அரசு வானொலியிலும் சிறிது காலம் அவர் செய்தித் தயாரிப்புத் துறையில் பணியாற்றியிருக்கிறார்.


அப்போதெல்லாம் மேற்கு மாம்பலத்தில் இருந்து அதிகாலையில் 12பி பேருந்தை பிடித்துக் கொண்டு காலை செய்தித் தயாரிப்புக்காக இவர் அவசர அவசரமாக

பூபாலரட்ணம் சீவகன்

ஓடுவது வழக்கம். ரேடியோ சிலோனில் வேலை பார்த்தவர், இப்போது ஆல் இந்தியா ரேடியோவில் வேலை செய்கிறார் என்ற அளவில் மாத்திரமே அவரது வேலையைப்பற்றி அப்போது நான் அறிந்திருந்தேன்.

ஆனால் நான் செய்தித் துறையில் பணியாற்றத் தொடங்கியவுடன்தான் அவர் செய்த இரண்டு வேலைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டின் தாற்பரியம் எனக்கு விளங்கத்தொடங்கியது.

பொதுவாக வானொலியில் சமூக, கலை, கலாச்சார மற்றும் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளை தயாரிப்பது என்பதும், செய்திகளை தேடுவது, தேர்ந்தெடுப்பது



முதல் அதனை ஒரு செய்தியறிக்கையாக தயார் செய்வது என்பதும் வெவ்வேறு திறமைகள் சம்பந்தப்பட்ட விசயங்கள். பொதுவாக இரண்டு துறைகளிலும் ஒரே நேரத்தில் திறமை பெற்றவர்களை கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பான விசயம்.

ஆனால் இவரோ இரண்டு வெவ்வேறான நாடுகளின் அரச வானொலிகளின் தேவைக்கேற்ப, அவை எதிர்பார்க்கும் தரத்துக்கேற்ப, இருவேறு திறமைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகளை தாயாரிப்பதில் ஈடுபட்டார். இலங்கை வானொலியில் இவர் பெரும்பாலும் தயாரித்தவை சமூக, கலை, கலாசார நிகழ்ச்சிகள். ஆனால் ஆல் இந்தியா ரேடியோவில் செய்த பணி செய்தித் தொகுப்பு சம்பந்தப்பட்டது.

தொலைக்காட்சிக்கான



பிரதிகளை எழுதத் தெரியாமலேயே தொலைக்காட்சியில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை எனக்கு நன்கு தெரியும். வனொலிப் பிரதிக்கும், தொலைக்காட்சி பிரதிக்கும் வேறுபாடு தெரியாமல் அந்த பணியில் ஈடுபட்டிருப்பவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் மேடை நாடகம் முதல், வானொலி, தொலைக்காட்சி மற்றும் சினிமாத் தயாரிப்பு வரை அனைத்துக்கும் பிரதிகளை ஆக்கக்கூடிய மிகச் சொற்பமான இலங்கையர்களில் இவரும் ஒருவர்.

இவர் சிறந்த ஒரு நாடகக் கலைஞர். மட்டக்களப்பில் ஒரு காலகட்டத்தில் மேடையேறிய கண்ணகி நாடகத்தில், கண்ணகியாக நடித்தவர் முன்னாள் அமைச்சர் செல்லையா இராசதுரை, அதே நாடகத்தில் மாதவியாக நடித்தவர் பத்மநாதன் அங்கிள். இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

கண்ணகியாக சொல்லின் செல்வர் இராசதுரை அவர்கள் பேசிய வசனங்களுக்கு நிகராக, மாதவியாக பத்மநாதன் அங்கிள் மேடையில் ஆடிய நடனமும் மட்டக்களப்பையே அப்போது கலக்கியது என்று பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

தினமுரசு பத்திரிகையை பொறுத்தவரை, அது ஆரம்பிக்கப்பட்டது முதல் இறுதிவரை அது அரசியல் ரீதியாக ஒரு சர்ச்சைக்குரிய பத்திரிகையாகவே திகழ்ந்தது. வன்முறைகள் தலைவிரித்தாடிய இலங்கை சூழ்நிலையில் அந்தப் பத்திரிகை சந்தித்த சவால்களும் மிகவும் அதிகம். ஆனாலும் அந்தப் பத்திரிகையில் பணியாற்றிக்கொண்டே, இந்த சர்ச்சைகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவராக, அனைவராலும் அவரது எழுத்துப் பணிக்காக மதிக்கப்பட்டவராக இறுதி வரை திகழ்ந்தவர் பத்மநாதன் அங்கிள் என்ற இராஜகுமாரன்.

இன்று ஒரு சிறுவர் இலக்கியமாக பரிமளிக்கும் கோதண்டம் ஏந்திய கே-ாமகனையும், பெரியவர்களுக்கான கிளுகிளுப்பான தொடரான மொனிக்கா என் மொனிக்கா என்ற தொடரையும் எழுதியவர் ஒருவரே என்று சத்தியம் செய்தாலும் எவரும் நம்பமாட்டார்கள். அந்த அளவுக்கு இரு ஆக்கங்களும் எழுத்து நடையில் மிகவும் வேறுபட்டவை.

அற்புதனின் அரசியல் தொடர் எந்த அளவுக்கு தினமுரசு வாசகர்களை கட்டிப் போட்டு வைத்திருந்ததோ,

தொடர்ச்சி பக்கம் - 19

# "பெரும்பான்மையின ஊழியர்களின் மனப்போக்கும் தமிழ் மொழி அமுலாக்கலுக்கு பெருந்தடையாக உள்ளது"

## அரச கரும மொழிகள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சந்திரசேகர செவ்வி

தமிழ் மொழி அறிந்த அரச ஊழியர்களின் பற்றாக்குறையும் பெரும்பான்மையின ஊழியர்களின் மனப்போக்குமே தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக அமுல்படுத்துவதில் பெரும் தடையாக இருப்பதாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சந்திரசேகரை அரங்கம் பத்திரிகையின் சார்பில் செவ்வி கண்டோம். அதற்காக கொழும்பில் உள்ள அவரது வீட்டுக்கு சென்ற போது, கொஞ்சம் தளர்ந்த உடலுடனும், தனக்கிடப்பட்ட பணியின் சவால்களை எதிர்கொள்ள வேண்டுமே என்ற எச்சரிக்கையுணர்வுடனும் எம்முடன் பேசினார் பேராசிரியர் சந்திரசேகரன்.

இலங்கையில் பேசப்படுகின்ற மும்மொழிகளிலும் பரிச்சயம் பெற்ற சந்திரசேகரன் அவர்கள், மலையகத்தை சேர்ந்தவர். பல்கலைக்கழகத்திலும் வெளியேயும் மொழிகள் சம்பந்தப்பட்ட பல துறைகளில் பணியாற்றியவர். அவரிடம் அரச கரும மொழிகள் அமுல்படுத்தலை பொறுத்தவரை இங்கு 1978இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பே தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்றும் அரச கரும மொழிகள் என்று வரையறுத்து விட்டது. ஆகவே சட்டப்படி இங்கு சிக்கல் இல்லை என்றார் சந்திரசேகரன். முன்னைய சிங்கள மட்டும் சட்டத்துக்கு மாறாக இங்கு இந்த அரசியலமைப்பு அரச கரும மொழிகள் குறித்து கூறியிருக்கிறது ஆகவே அது பிரச்சினை இல்லை என்றார் அவர்.

அப்படியாயின் என்ன பிரச்சினை என்று கேட்டபொழுது, உண்மையில் தமிழ் மொழியை அரச கரும மொழியாக அமுல்ப்படுத்த இங்கு தமிழ் தெரிந்த



### அரசாங்க அலுவலகங்களில் போதுமான தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லை

ஆணைக்குழுவின் தலைவராக நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்று அரங்கம் பத்திரிகையின் சார்பில் முதல் கேள்வியை முன்வைத்தோம்.

சிறுபான்மை மக்களின் மொழிகளை

போதுமான ஊழியர்கள் அரச சேவைக-ளில் கிடையாது என்பது ஒரு பெரிய சவால் என்றார் அவர்.

உண்மையில் தற்போதைய சூழ்நிலையில் இங்குள்ள இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை அல்லது சிறுபான்மை மக்கள் தமது மொழியில் அரச அலுவலகங்களில் காரியங்களை ஆற்றிக்கொள்ள முடியவில்லை என்பது ஒன்று. ஆகவே அரச கரும மொ-ழியாக உரிய வகையில் தமிழ் மொழி அமுல்படுத்தப்பட்டால், இனப்பிரச்சினையின் பெரும் பகுதி

### தமிழ் மக்கள் பலருக்கே தமிழ் அரச கரும மொழி என்பது தெரியாது

தீர்ந்துவிடும் என்பது அவரது கருத்து.

ஏற்கனவே போதுமான தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லை, அரசியல் ரீதியிலான நியமனங்களில் கூட பெரும்பாலும் பெரும்பான்மையினத்தை சேர்தவர்களே நியமிக்கப்படுகிறாகள், அவர்களால் தமிழில் சரிவரக் காரியத்தை ஆற்றமுடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த விடயமாக அவர் குறிப்பிடுவது, சிங்கள மொழி ஊழியர்களின் மனப்பாங்கு பற்றியது. அவர்களில் பலருக்கு தமிழ் ஒரு அரச கரும மொழி என்பதே புரியவில்லை என்கிறார் சந்திரசேகரன்.
அப்படி தெரிந்த சில ஊழியர்கள்கூட தமிழ் மொழியை அமுல்படுத்துவதில் எந்தவிதமான ஊக்கமும் இன்றி காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரச கரும மொழிகள் கொள்கையைப் பொறுத்தவரை, அரச அறிவித்தல்களை மூன்று மொழிகளிலும் வரச் செய்தல், அரச விளம்பரப் பலகைகள் மூன்று மொழிகளிலும் சம அளவில் இருக்கச் செய்தல், அரசாங்கத்துக்கான விண்ணப்பங்கள் மூன்று மொழிகளிலும் இருக்கச் செய்தல், ஒவ்வொரு பிரஜையும் இந்த மூன்று மொழிகளில் தான் விரும்பிய மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு பதில்களை பெற வழி செய்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாக திகழ்கின்றன.
ஆனால், அவை சரிவர இங்கு நடப்பதில்லை என்பதுதான் இங்கு பிரச்சினை என்கிறார் பேராசிரியர்.
அரச திணைக்களங்களைப் பொறுத்தவரை அவற்றில் 90 வீதமானவை அரச கரும மொழிகளை அமுல்படுத்துவதில் சாதகமான போக்கையே காண்பிப்பதாகக் கூறும் சந்திரசேகரன், அது ஒரு நல்ல சமிக்ஞையே என்கிறார்.

ஆகவே அவர்களது ஆலோசனைகளையும் இந்த விடயத்தில் பெற்று எப்படியாயினும் இந்த விவகாரத்தில் தான் முன்னேற முயற்சிப்பேன் என்கிறார் அவர்.
அதேவேளை அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கான சட்டத்திலும் சில மாற்றங்கள் தேவை என்கிறார்.
அதற்கான மாற்றங்களை தான் ஆராய்ந்து பிரேரிப்பேன் என்கிறார் அவர்.

அதேவேளை அரசாங்க ஊழியர்களின் மனப்பாங்கில் பெரும் மாற்றம் இந்த விடயத்தில் தேவை என்றும் கூறுகிறார்.

தமிழ் மக்களை பொறுத்தவரை அவர்களில் பலருக்கு தமிழ் ஒரு

தொடர்ச்சி பக்கம் - 22

# விருதுகளைப் பெற்ற வீராங்கனைகள்.

### கலாபூசணம் அரங்கம்
### இரா. தவராஜா

சித்திரை பிறந்து விட்டால் அப் புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் களைகட்டுவது இயல்பு.




இவ்விளையாட்டு போட்டிகளில் முன்பு இடம்பெறும் சில விளையாட்டுக்கள் இன்றய காலங்களில் தவிர்க்கப்பட்டு விட்டன. அதில் முக்கியமானது பெண்களுக்கான சைக்கிளோட்டம்.

நான் இங்கு சொல்வது சுமார் 30 – 40 வருடத்துக்கு முன்னைய கதை.

இச் சைக்கிளோட்டப் போட்டிகளில் ஐந்து மைல், பத்து மைல் என தூரங்கள் நிர்ணயிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன. இந் நிகழ்வு நடைபெறும் நேரத்தில் பங்கு பற்றும் போட்டியாளர்களை உற்சாகப்படுத்த அன்றைய இளைஞர்கள் (எங்கள் வயதுக்காரர்கள்) முண்டியடித்துக் கொண்டு தங்கள் ஆதரவை வழங்குவதைக் காணக்கூடியதாக இருக்கும். அப்படி விழுந்தடித்து ஓடி காயம்பட்ட ஆணழகர்களும் உண்டு. அது பார்வையாளர்களுக்கு சுவாரஸியமாக இருக்கும்.

அன்று நடைபெற்ற பெண்களுக்கான சைக்கிளோட்டங்களில் தங்களின் வெற்றிகளை குவித்து விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். "சைக்கிளோட்ட வீராங்கனைகள்" என்னும் பெயரைப் பொறித்த வீராங்கனைகளில் சிலரின்



பெயர்ப் பட்டியலை இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

1. நிர்மலா தளையசிங்கம்
2. பிறேமிளா தளையசிங்கம்
3. மார்க்கிறேட் தம்பிப்பிள்ளை
4. திரேசா தம்பிப்பிள்ளை
5. ஜனபா மு. நஜிமா(நஜா)
6. இராமையா யோகலட்சுமி
7. றோஜா தவராஜா



8. தேவராஜா தவமணி
9. செல்வி செல்லத்துரை

இவர்களில் பலர் இப்போது பூட்டன், பூட்டிகளோடும், பேரன், போர்த்திகளோடும் இளமைக்கால நிகழ்வுகளை அசை போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்



# புன்னையடி -- நம் மூதாதையர்களின் காலடி

## இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே வங்கியல் அறிந்த தமிழன் வாழ்ந்த பூமி இது

### பால.சுகுமார்
### மேனாள் முதன்மையர்
### கலை கலாசார பீடம்
### கிழக்குப் பல்கலைக் கழகம்



வெருகல் பிரதேச சபைக்கு உட்பட்ட வரலாற்று மூலங்களை தன்னகத்தே கொண்ட முது தமிழ் குடிகள் வாழும் ஈழத் தமிழர் நிலம் புன்னையடி. நம் மூதாதயர்கள் வாழ்ந்த தடங்கள் கொண்ட ஒரு புராதன ஆதாரங்கள் நிறைந்த சிறுகுன்றும் அதன் அருகில் அமைந்த கிராமம் புன்னையடி. தமிழ் எழுத்துக்களாலான கல்வெட்டுக்களும் இடிந்த அகலக் கல், செங்கல் அழிபாடுகளும் புராதன நகரமொன்றின் எஞ்சிய பாகங்களாய் உள்ளன.
மலை நீலி அம்மன் கோயிலும் இங்குதான் உள்ளது. அண்மையில் அந்த கோயிலை இடித்து பௌத்த ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட செய்திகளை நாம் பத்திரிகைகள் மூலம் அறிய முடிந்த கதைகள் பல.
ஒரு கோயிலில் கோயிலைச் சூழ உள்ள ஆறு கல் வெட்டுக்கள் செழித்தோங்கிய ஒரு நாகரிகத்தின் குறிப்புக்களாய் காணப்படுகின்றன. அங்கு இயங்கிய வங்கி அமைப்பும் வர்த்தக நாகரிகத்தின் தகவல்களாக மன்னனும் அமைச்சரும் அதன் நிர்வாகமும் தொடர்புபட்ட விடயங்களை பேசுகிறது. கிட்டத் தட்ட இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரான தமிழ் எழுத்துக்கள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் பிராமி எழுத்துக்களுக்கான "ம" "ழ" போன்ற எழுத்துக்கள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.
கோயில் குன்றின் உச்சியில் அமைதுள்ளது. அந்த இடத்தில் இருந்து பார்க்கும் போது அனைத்து திசைகளையும் கண்காணிக்க கூடியதாக பரந்திருக்கும் வயல் நிலங்களும் விரிந்து செல்லும் கடலும் இயற்கையின் அழகை எடுத்தியம்பும் ஒரு சூழலை உணர்த்தி நிற்கின்றன. கட்டிட இடிபாடுகள் கோயிலா அல்லது அரண்மனையின் எச்ச சொச்சங்களா என்பதிலும் ஒரு சந்தேகம் நிலவுகிறது.
இதனை ஒரு கோயில் என வைத்துக் கொண்டு பார்த்தால் பழைய செங்கல்கள் எல்லா இடங்களிலும் பரந்து காணப்படுகின்றன. கட்டிடத்தின் மீதமிருக்கும் பகுதி சிதைந்த ஆலய விட்டம், அதன் அடிவாரத்தில் சுமார் 50 அடி உயரத்தில் உள்ளது. பலவகையான செங்கற்கள் கோயிலைக் கட்டியெழுப்ப பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பரப்பளவில் வளைந்திருக்கும் செங்கல் பகுதி ஒரு கட்டிட பகுதியாக இருக்கிறது . செங்கல் வகைகள் 1ம் நூற்றாண்டின் பிற்கால கட்ட பாணியைக் குறித்து நிற்கிறது.



செங்கற்களுக்கிடையில் காணப்பட்ட ஒரு தூணின் அடிப்படைக் கல் மற்றும் அழிபாடுகள், கீழே இன்னொரு கட்டிடமும் இருந்ததை யூகிக்க முடிகிறது.
பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள ஒரு விமானம், அதன் மேல் நுழைவது தெற்கே அமைந்துள்ளது.
கோயிலின் வடக்குப்பகுதி ஒரு செங்குத்தாக உள்ளது.
பாறை மீதுள்ள ஆறு கல்வெட்டுகள் இந்த இடத்தில் காணப்படும் மிக முக்கியமான தொல்பொருள் இடிபாடுகள் ஆகும். அவற்றில் மூன்று, ஒன்றுக்கு ஒன்று நெருக்கமாக அமைந்துள்ளன. இந்த கல்வெட்டுகள் அமைந்திருக்கும் பாறகள் மேற்குப் பக்கத்தில் எழுத்துக்கள் அழியும் நிலையில் உள்ளது. தனித் தனி பாறைகளில் அமைந்ததாகவும் தொடர் பாறைக் கல்வெட்டுகளாகவும் அமைந்துள்ளமையயை காணலாம். முதல் மூன்று இடங்களில் முதல் கல்வெட்டு எழுத்துகள் ஒப்பீட்டளவில் தெளிவாக இருக்கின்றன. இந்த இடத்தைப் பற்றியும் தங்க நாணயங்கள் இவ்வாலயத்துக்கு கொடையாக கொடுக்கப்பட்டது பற்றிய செய்திகளையும் மகா நாகன் என்ற மன்னன் பற்றிய குறிப்புகளையும் தருகிறது. இது ஒரு மடாலயம் எனவும் ஊகிக்க முடிகிறது. மன்னர் மகா நாகன் பற்றிய கல்வெட்டுகள் (கிமு 9 முதல் 21 வரை), மன்னனின் பெயருடன் கல்வெட்டுகளின் எண்ணிக்கை கடலுக்கு அருகில் கிழக்குப் பகுதியிலுள்ள பல இடங்களில் காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் எழுதப்பட்ட பிரதியில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம், கடலில் நெருங்கியிருக்கும் கல்வெட்டுகளில் அவர் "நாகா மகாராஜா" என்று குறிப்பிடப்படுகிறார். இது 2000 ஆண்டுகளுக்கும் மேலாக பழமை வாய்ந்ததாக கருதப்படுகிறது.
கல்வெட்டுக்கு ஏற்ப, ராஜா ஆலயத்தை அருகிலுள்ள நீரேந்து பகுதிகளிலிருந்து நீரைப் பெற்று மக்களுக்கான வயல் நிலங்களை தவிர்த்து இக் கோயிலுக்கு



தானமாக ஒரு பகுதி நிலத்தை வழங்கியமையும் தெரிய வருகிறது .மகா நாகன் காலம் கி.மு 9-21 வரை என கல்வெட்டு சான்று பகர்கிறது.
இரண்டாவது கல்வெட்டானது, ராகய்யா என்ற ஒரு அமைச்சர், வங்கியில் ஐந்நூறு தங்க நாணயங்களை கருவூலத்தில் சேர்த்ததாகவும் அது வர்த்தகத்துக்கு பயன்பட்டதாகவும் சொல்கிறது. ஒரு வங்கி அமைப்பு பற்றியதான ஈழத்தில் கிடைக்க கூடிய முதல் தகவலாக இது உள்ளது. ஒரு வர்த்தக வலையமைப்புக் கொண்ட நகராக புன்னையடி விளங்கியமைக்கு ஒரு சான்றாக இந்த கல்வெட்டு பேசுகிறது.
மூன்றாவது கல்வெட்டு தாடவித என்ற பெயரில் ஒரு வணிக நகரத்தைக் குறிப்பிடுகிறது. மன்னாரில் இருந்த வணிக மையம் பற்றியும். மகாசன் என்ற மன்னன் (276-299) தனது சொந்த நாட்டில் இருந்து விளைந்த நெல் இருப்பை பேணும் களஞ்சியங்கள் கொண்டதாக இருந்த நெல் இருப்பு பற்றி பேசுகிறது.
ஏனைய கல் வெட்டுகள் தங்க நாணையங்களின் சேமிப்பு நெல் களஞ்சியங்கள் கோயில் பராமரிப்பு பற்றியே பேசுகின்றன. எல்லா கல் வெட்டுகளுமே புன்னையடியை அடிப்படையாக கொண்ட செழிப்பான ஒரு தமிழர் பண்பாட்டின் இருப்பை பேசுகின்றவையாகவே உள்ளன.
புன்னையடி நம் மூதாதையரின் சுவடுகளின் வழி வந்த காலடிகளே.

# திருகோணமலை எல்லைக் காளி அம்மன் ஆலய நிகழ்வு

பன்குளம், பறையன்குளம் எல்லைக்காளி அம்பாள் ஆலயத்தின் சங்குஸ்தாபனம் புதன்கிழமை 2018.04.18 மதியம் 11.40 மணிக்கு நடைபெற்றது. எதிர்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் ஆலயம் அமைப்பதற்கான முதல் அடிக்கல்லினை நட்டு வைத்தார்.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் இவ்வாலயம் நிர்வகிகப்பட்டு வருகிறது. சோழர் காலத்து ஆலயமாக இது கருதப்படுகின்றது. கடந்த 1983ம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வினைத் தொடர்ந்து ஆலயம் சிதைவுக்கு உள்ளானது.

2014ம் வருடம் தொடக்கம் இவ்விடத்திற்கு வந்த இந்து இளைஞர் பேரவையினர் கொட்டில் ஒன்றினை அமைத்து பௌர்ணமி தோறும்



வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருக்கோணேஸ்வரத்தின் எல்லையில் அமைந்து அருளாட்சி புரிவதால் இதனை எல்லைக்காளி அம்பாள் என அழைத்து வழிட்டு வருகின்றனர்.
திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதீனகர்த்தா



சோ.ரவிச்சந்திரக்குருக்கள் தலைமையில் சங்குஸ்தாபனம் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண முந்நாள் கல்வி அமைச்சரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவருமான சி.தண்டாயுதாணி, திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் முந்நாள் பொதுச் செயலாளர் செ.சிவாதசுந்தரம், எதிர்கட்சி தலைவரின் பிரத்தியேக செயலாளர் ச.குகதாசன், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சு.ரமேஸ்வரன், பொதுச்செயலாளர் செ.விஜயசுந்தரம் ஆகியோர் அடிக்கல்லினை நட்டுவைத்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு வந்திருந்த அடியவர்களும் அடிக்கல்லினை நட்டு வைத்தனர்.
இந்நிகழ்வினைக் காண அருகில் உள்ள நாமல்வத்த என்னும் இடத்தில் இருந்து இஸ்லாமியர்களும் வந்திருந்தனர்.
திருகோணமலை அநுராதரபுரம் வீதியில் பன்குளம் சந்தியில் இருந்து 9கி.மீற்றர் தொலைவில் உள்ள நாமல்வத்தை என்னும் இடத்தை வந்தடைந்து அங்கிருந்து காட்டுப்பாதை வழியாக 7 கி.மீற்றர் சென்று ஆலயத்தை அடைய முடியும். உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் மூலமாக அடியவர்கள் இவ்வாலயத்திற்கு பௌர்ணமி தினங்கள் தோறும் சென்று வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

# நாங்க காடுகட்டி ஆடின கூட்டம் – எங்களுக்கு கார்ட்டுன் காட்டிறாங்க



"புத்தாண்டு வாழ்த்துக்கள்" அலறிய தொலைபேசியை காதில் வைத்தவுடன் எதிர்ப்பக்கம் நண்பனின் குரல். நீண்ட காலத்தின் பின் சீமையில் இருந்து அழைத்திருந்த நண்பன், வழமையான நலன் விசாரிப்புக்களுக்கு பின், விசயத்துக்கு வந்தான்....

- எப்பிடிடா ஊரில வருசம் போச்சிது ?
- வழம போல தாண்டா மருத்து நீர் வெச்சி முழுகி கோயிலுக்கு போய் வந்து ரெலிபோணுக்கு பதில் சொல்றத்திலயே வருசம் முடிஞ்சி பொயித்துடா.

- ஏன்டா "மகிடி" கிகிடி எல்லாம் இப்ப நடக்கிற இல்லையா ?

- நீ என்ன 20 வருசத்துக்கு முந்தின நினைப்புல இரிக்கா போல. அதெல்லாம் இப்ப இல்லாம பொயித்து, 2 வருசத்ததுக்கு முந்தி ஆலடியில ஒண்டு நடந்ததாம் எண்டு கேள்விப்பட்ட நான், இப்ப அதுவும் இல்ல..... அடெய் நம்ம காடுகட்டுறது ஞாபகம் இருக்கா ? அதுவும் உனக்கு கட்டுனது.

- ஹ ஹ ஓம் டா, சீவிராட்டி காட்டுக்குள்ள போய் கிளசெறியா எல்லாம் வெட்டித்து வந்து எண்ட உடம்பு தெரியாத அளவுக்கு, வெச்சிக்கட்டி எனக்கு நீங்க ஊருக்குள்ள கூட்டித் திரஞ்சத மறக்க ஏலாடா ... பரமநயினார் கோயிலடில இருந்து சிவன் கோயிலடி வரைக்கும் மாலையாகிற வரைக்கும் டெல்கி அடிச்சி பாட்டும் படிச்சி கொண்டு நம்ட பார்ட்டி(நண்பர்கள்) எல்லாம் எப்படி திரிஞ்ச நாம என்ன ? நாமதான் காடுகட்டிட தலைக்கு கெல்மட் போட்டு கொஞ்சம் மொடர்ன் (அழனநச஖) காடுகட்டியா ஆக்கின....
என மூச்சு விடாமல் நீண்ட நினைவுகளை பகிர்ந்தான் நண்பன்.



உண்மையில் காடுகட்டி என்பது சித்திரை வருடப்பிறப்பு காலத்தில் நகைச்சுவை உணர்வோடு மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்கான ஓர் களம். சித்திரை வருடப்பிறப்பிற்கு அடுத்துவரும் நாட்களில் ஓர் குறிப்பிட்ட நபரை ஆலையிலைகள், காவுலா, புற்கள், கிளசேறியா போன்ற பற்றைகளைக் கொண்டு உடல் முழுவதும் மறைத்து, குறைந்து ஐந்து பேர் கொண்ட குழுவினர் குறித்த காடுகட்டின நபரை ஒவ்வொரு வீடாக அழைத்துவருவார்கள். அவருக்கு வழிகாட்டுவதற்கு ஒரு கம்பைக்கொடுத்து ஒருவர் முன்னுக்கு

பிரசாத் சொக்கலிங்கம்

நடந்துவர காடுகட்டப்பட்டவர் மெல்ல மெல்ல அசைந்து வரும் போது டோலக், மத்தளம் போன்ற இசை வாத்தியங்கள் அடித்துக்கொண்டு, சினிமாப்பாடல்களையும் பாடி, ஆடி வருவார்கள்.

அவருக்கு பக்க இசையாக மற்றவர்கள் கைதட்டி உற்சாகம் கொடுத்து வருவார்கள். காடுகட்டி ஒவ்வொரு வீட்டிற்கும் போய் நடனமாடி மக்களை மகிழ்விப்பார்கள். முற்காலங்களில் இந்த காடுகட்டி ஆடுவதற்கு கூத்துப்பாடல்களை பாடியதாகவும் பெரியவர்கள் சொல்ல கேட்டு இருக்கின்றோம்.

சித்திரை புத்தாண்டை கொண்டாட ஊஞ்சல், மகிடிக் கூத்து, காடுகட்டி என எத்தனை மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றில் சில ஆங்காக்கு நடைபெற்றாலும் "காடுகட்டி"



நிகழ்வு ஆரையம்பதி பிரதேசத்தில் இப்போதும் தொடர்வது கொஞ்சம் ஆறுதலான செய்திதான். பாரம்பரியம் நிகழ்வுகள் ஒவ்வென்றும் ஏதோ ஒரு வகையில் தொடரப்பட வேண்டும் என்பது இன்று பெரும்பாலானவர்களின் அவா.

சிரிப்பை தொடர்ந்து நண்பன் இன்னுமெரு விடயத்தை கூறினான்...

- நான் லண்டனுக்கு வந்து முதல் முதல் இஞ்ச இரிக்கிற ஒரு பெரிய சுப்பர் மாக்கொட்டில (ளரிநச அயசமநவ) வேல கிடைச்சிது. என்ன வேல எண்டு தெரியுமா ?
- ???
- நாம அங்க காடு கட்டுற மாதிரி இஞ்ச மிக்கிமவுஸ்(அமைந அழரளந ) உடுப்ப போட்டு சுப்பர் மார்க்கெட்டுக்கு முன்னுக்கு நிண்டு ஆடுற, வாற கஸ்டமருக்கு பரிசுகள் குடுக்குற வேலதான், மச்சான். காடுகட்டின அனுபவமே என்னவோ தெரியாடா. 20 வருசத்துக்கு முந்தி, முதல் வேலய கச்சிதமா செயதநான்.

நாம காடுகட்டுறம் இவனுகள் இஞ்ச கார்ட்டுன்(உயசவழழூ) கட்டுறானுகள்... என சிரித்துக்கொண்டு இருக்கும் போதே அவனது தொலைபேசி நிலுவையும் முடிந்து தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது...

# பதின்மூன்று ஒரு வரம்

அதிர்ஷ்டத்திற்கும் 13 எண்ணிற்கும்
எள்ளளவும் தொடர்பில்லை.
இது ஒரு பொது அபிப்பிராயம்.

13ம் திகதியில் பிறந்த எவருமே
நிம்மதியாக வாழ்ந்ததில்லை.
இப்படிச் சொன்னவர்களே அதிகம்.
13 என்பது ஒரு பாவப்பட்ட எண்ணா?
இந்தக் கேள்விக்கு விடை தேடிச்
சிந்தனையை விரிக்கின்றேன்.

கடிகாரத்தின் இலக்கங்கள் 12 மட்டுமே!
13வது இலக்கம் அமையவில்லை.
அல்லது அமைக்கமுடியவில்லை.

வருடத்தில் மாதங்கள் 12 மட்டுமே!
13 வது மாதம் அமையவில்லை.
அல்லது அமைக்க முடியவில்லை.

இராசி மண்டலத்தில் 12 இராசிகளே
உண்டு.
அங்கேயும் 13 அமையவில்லை.
அல்லது அமைக்க முடியவில்லை.

சூரியக்குடும்பங்கள் 12 மட்டுமே!
(4 சூரியன்கள் கணக்கிடப்பட்டுள்ளன.)
தேவார திருமுறைகள் 12 மட்டுமே!
ஆழ்வார்கள் தொகையும் 12 மட்டுமே!

குடமுழுக்கின் சக்தி 12 ஆண்டுகளே!
குறிஞ்சிமலர் பூப்பதுவும் 12
ஆண்டுக்கொருமுறையே!
பால்யப் பருவம் 12 வயதுவரைதானே!
பள்ளிப் படிப்பும் 12 வகுப்புகள்தானே!

தமிழில் உயிரெழுத்துகள் 12
மட்டுமே!
தமிழ்க் கடவுள் முருகனுக்கும் 12
கரங்களே!
இவைகள் யாவுமே
13 ற்குள் நுழைய முடியாமல்
நின்றுவிட்டன.

ரமணி

அல்லது 13 ஐ நிராகரித்துவிட்டன.
காரணம் 13 இராகுவைக் குறிப்பது.
இது இடஞ்சுழி செல்வது!
உலகமோ வலஞ்சுழி சுழல்வது.

உலகத்தை – உலக நடைமுறையை
எதிர்ப்பதும் - போராடுவதும்
புதிய பாதையை வகுப்பதும்
இந்த எண்ணின் இயல்பே!
இந்தத் திகதியில் பிறந்தவர்களை
உலகோர் வெறுப்பதன் காரணம் இதுவே!

ஆனாலும் இந்த எண் வலிமையானது.
எத்தகைய இடர்வரினும்
எதிர்நின்று போராடுந் திறன் மிக்கது.

பிறர் மீது குற்றங்களை அள்ளி வீசும்
குணமுடையது.
தன் எதிரில் நிற்பவரின் தகுதி பாராது
தன்மானம் காக்க மலையோடும்
மோதவல்லது.

இந்த எண்ணில் பிறந்தவர்கள்
சளைக்காமல் போராடும்
இயல்புடையவர்கள்.

அமெரிக்க வல்லரசால் 700
தடவைகளுக்கு மேல்
கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்ட
நபராக விளங்கும்
கியூபாவின் தலைவர் பெடல் காஷ்ரோ
ஆகஸ்ட் 13 1926ல் பிறந்தவர்.
இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர்

இரும்புப் பெண்மணியெனப் புகழப்பட்டவர்
மார்க்கிரட் தாட்சர் 1925 ஒக்டோபர் 13ல்
பிறந்தவர்.

இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய
கவிக்குயில் சரோஜினி நாயுடு பிறந்தது
1879 பெப்ரவரி 13ம் திகதியாகும்.

புகழ்பெற்ற விஞ்ஞானி கிளர்க்பெல்
1831 நவம்பர் 13ல் பிறந்தவராவார்.
ஆன்மீகவாதி சிருங்கேரி சுவாமிகள்
1917 நவம்பர் 13ல் பிறந்தவரே.

மூடநம்பிக்கைகளை விரட்டியடித்து
புரட்சிக் கருத்துகளைக் கவிதையில்
வடித்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
1930 ஏப்பிரல் 13ல் பிறந்தவராவார்.

தற்போதைய கவிஞர் வைரமுத்து
1953 யூலை 13ல் பிறந்துள்ளார்.

நம்நாட்டின் தேசிய கீதத்தை எழுதிய
ஆனந்த சமரக்கோன் லியன்விலவில்
ஜனவரி 13ந் திகதி 1911ம் ஆண்டில்
பிறந்தார்.

அண்மையில் மரணமடைந்த ஸ்ரீதேவி
1963 ஆகஸ்ட் 13ல் பிறந்தவர்
சமகாலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்

பிரபல சுவாமிஜி ஒருவர் 13ந் திகதியில்
பிறந்தவரே!
இதுபோன்று நம் நாட்டில் பலர் உளர்.
உங்களிலும் பலர் இருப்பீர்கள்
(அனுமதியின்றி இணைக்க முடியவில்லை
தகவல் தந்தால் சேர்த்துக் கொள்வோம்.)

இந்த எண் ஆபத்தானது.
அதிர்ஷ்டமில்லாதது.
உல்லாச விடுதிகளில் இந்த எண்ணில்
அறைகளில்லை.
இருந்தாலும் அவை பணந்தேடிக்
கொடுப்பதில்லை.

ஆங்கிலேயருடன் இறுதிவரை போராடிய
கண்டி இராச்சியம். Kandy என்பது 13.
நம்மொழி தமிழ்.
சர்வதேச ஒழுங்கில் ரமில் என்பர்.
Tamil என்பது 13.
முடிவில்லாத போராட்டத்திற்கு ஆயிரங்
காரணம் இருக்கலாம்.
அதில் இதுவும் ஒன்றாக இருக்கும்.

மருத்துவமனையில் 13ம் இலக்கக் கட்டில்
13ம் இலக்க விடுதி இரண்டும் உண்டு.
சிறைச்சாலையிலும் 13ம் இலக்கக் கூடு
உண்டு.

ஆறாம் மாடியில் 13ம் எண் கூட்டில்
அடைக்கப்பட்ட ஒருவர்
அமைச்சர் பதவியுடன் வெளியேறியுள்ளார்.

13ம் இலக்கத்தின் ஆதிக்க நாளில்
நிகழ்ந்த சம்பவங்கள் நிகழ்வுகள்
நன்மையும் தீமையுங் கலந்தே உள்ளன.
ஏனைய எண்கள் போலவே
13ம் விரும்பக்கூடிய ஒன்றே!





# வீட்டுக்கொரு ஊஞ்சல் கட்டி ஆடியவர்கள் நாங்கள்!

## இன்று அது விழாவுக்கு மட்டும் என்றாகியது ஏன்?

படுவான்கரையில் வீட்டுக்கொரு ஊஞ்சல் கட்டி, ஆடி மகிழ்ந்த காலம் ஒன்று இருந்தது. அது ஒரு சுகமான காலம். ஆனால், அது மறைந்து ஊஞ்சல் என்பது விழாவாக ஓர் பிரதேசத்தில் ஓரிடத்தில் மாத்திரம் ஆடுகின்ற நிலைமை உருவாகி விட்டது.

□சித்திரை புதுவருடத்திற்கு ஒரு கிழமைக்கு முன்னமே, உயர்ந்து நிற்கும் மரங்களில் ஊஞ்சல் இட்டு, பாடல் பாடி குதூகலித்த காலமெல்லம் கடந்து, அவை குறித்த நினைவு-களை மட்டும் மீட்டிப்பார்க்கும் நிலை உருவாகியிருக்கின்றது." என்பதனை நினைக்கையில் வேதனையாக இருக்கின்றது." என்று கொக்கட்டிச்சோலை சந்தியில் நின்று சின்னத்தம்பி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

சித்திரைப்புத்தாண்டு பிறந்தால் வீடுகளில் அல்லது பெரிய பெரிய மரங்கள் உள்ள இடங்களில் ஊஞ்சல் இட்டு, அதிலே இரண்டு பேருக்கு மேல் ஏறி, ஊஞ்சல் ஆடி களிப்பில் ஈடுபட்டுவந்தமை வழக்கமாய் இருந்தது. குறிப்பாக படுவான்கரைப்பகுதியில் திரும்பும் திசைக்கெல்லாம் ஊஞ்சல் ஆடுகின்றமை வழமை.

யுத்தம் நடந்தபோதிலும் கிட்டிப்புல், வார்போர், வட்டக்காவடி, கொத்து இழுத்தல், பிள்ளையார்கட்டை போன்ற பல விளையாட்டுக்களே பொழுது போக்காகவும், மகிழ்ச்சி கூடங்களாகவும் இருந்தன.

யுத்தத்தின் பின்னரான காலத்தில், தொலைபேசியின் வருகை, தொலைக்காட்சியின் வருகை என பல்தரப்பட்ட நவீன சாதனங்களின் வருகையினால் படுவான்கரைப் பகுதியில், முகங்களை முகங்கள் பார்த்துச் சிரித்ததும், பேசிய-தும், புத்துணர்வுகளை ஏற்படுத்திய விளையாட்டுக்களும், ஊஞ்சல் போன்ற பண்பாடுகளும் மறைந்து, தொலைபேசியை, தொலைக்காட்சியை பார்த்து சிரிக்கும், பேசும் நிலை உருவாகியிருக்கின்றமை புத்துணர்ச்சியை அகற்றி, மண்ணுலக வாழ்க்கையிலிருந்து விரைவாக விடைபெற்று செல்வதற்கான காலத்தினை உருவாக்கியுள்ளது என்பதே உண்மை.

ஒரு கடப்பினால் (கதவு) ஒருவரின் வீட்டு வளவிற்குள் நுழைந்தால் ஆறு, ஏழு வளவு கடந்து வெளியேறும் காலங்களும் கடந்து பக்கத்து வீட்டில் என்ன



நடைபெறுகின்றது? என்பது தெரியாமலே மதில்களையும், மறப்புக்களையும் கட்டிவருகின்றனர். இவ்வாறான காலப்பகுதியில் சின்னத்தம்பியின் ஊஞ்சல் பற்றிய கதையும் அவசியமானதொன்றே.

கொடிகளையும், திரித்தெடுத்த கயிறுகளையும் ஊஞ்சல் கட்டுவதற்காக பயன்படுத்திய காலங்களும் இருந்தன. கொடிகளின் செல்வாக்கு வீழ்ச்சியுற்ற நிலையில், புதிய கயிறுகள் அவற்றிற்கு ஈடாகின.

> **"தெத்தாத ஊஞ்சல் தெத்தாதா தெத்துப்பலகாரம் சுட்டுத்தாரம்"**

உயர்ந்த மரங்களில் கயிறுகளை இட்டு, அவற்றில் பலகையைக் கோர்த்து, பலகையின் இருபக்கமும் இருவர் ஏறி நிற்க, நடுவில் ஒருவரோ, இருவரோ, இருவருக்கு மேற்பட்டவரோ (மரத்தின், பலகையின், கயிற்றின் தாங்கு திறனுக்கேற்ப) ஏறி அமர்ந்துகொள்ள, பலகையின் இருபக்கமும் கயிற்றுக்கு வெளியே பலகையில் நிற்பவர்கள் இருவரும் ஊஞ்சலை உந்தும் வேகத்திற்கு அமைய ஊஞ்சலும் நெடு தூரம் சென்றுவரும். குறிப்பாக அரைவட்ட வடிவத்திலே ஊஞ்சல் ஆடப்படும். ஆடுகின்ற போது, பல ஊஞ்சல் பாடல்களையும் பாடி மகிழ்ச்சியுறுவதும் வழமை. அதேபோன்று ஊஞ்சல் அங்குமிங்கும் செல்லுமாக இருந்தால் (தெத்துதல்) அந்தவேளை ஊஞ்சலுடன், அங்குமிங்கும் செல்லாமல் நேராக செல், நேராக சென்றால் உனக்கு நாங்கள் பணிகாரம் சுட்டுத்தருகின்றோம். என்று கூறுகின்ற பாடல்களும் பாடுகின்றமையும்

படுவான் பாலகன்

சிறப்புக்குரியது.
குறிப்பாக "தெத்தாத ஊஞ்சல் தெத்தாதா தெத்துப்பலகாரம் சுட்டுத்தாரம்" என்ற பாடல் வரி மறக்க முடியாதது.

ஊஞ்சல் ஆடுகின்ற இடத்தினை சுற்றி அச்சூழலில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விடுவர். ஆடுபவர்கள் மட்டுமல்லாது, பார்த்திருப்பவர்களும் ஊஞ்சல் பாடல்களைப் பாடுவர். இப்பாடல்களை செவி வழியாகவே பலர் கேட்டறிந்து பாடுபவை.

> **கிட்டிப்புல், வார்போர், வட்டக்காவடி, கொத்து இழுத்தல், பிள்ளையார்கட்டை போன்றவையும் மறைந்துவருகின்றன**

ஊஞ்சலில் யார்? அதிக தூ ரம் சென்று வருவதென்பதும் இங்கு போட்டியாகவிருக்கும், அதற்காக பலகையின் இருபக்கமும் கயிற்றைப் பிடித்து உத்துபவர்கள் (உந்துதல்) வேகமாக உத்திக்கொண்டிருப்பார்கள். அவர்களே ஊஞ்சலை இயக்குபவர்களாகவும் இருப்பர். ஊஞ்சலின் உத்துதலை நிறுத்திவிட்டால். ஆட்டத்தின் வேகமும் படிப்படியாக குறைவடைந்து, ஊஞ்சல் ஆடுவது நின்றுவிடும். இவ்வாறு ஊஞ்சல் இட்டு ஆடுவதனைக் கண்ணுறும் சிறுவர்கள் தங்கள் வீடுகளிலும், வளைகளில் (கூரையில் வேயப்பட்ட மரம்) சீலையைக்கட்டி ஊஞ்சல் ஆடுவதுமுண்டு.

அதேவேளை ஆலமரத்தின் விழுதுகளை இணைத்து கட்டி அதில் ஊஞ்சல் ஆடுவதும், விழுதுகளை பிடித்து ஊஞ்சல் ஆடுவதும் இங்கு வழமை.

இவ்வாறான செயற்பாடு ஒன்றுகூடல், பொழுபோக்கு, மகிழ்ச்சி, உடலுக்கான உற்சாகம், சுறுசுறுப்பு, ஊஞ்சலை இயக்கும் தன்மை போன்ற பல்வேறான அனுபவக் கற்றல்களையும், செயற்பாட்டுத்தன்மையும் ஏற்படுத்தி நிற்கும்.

நவீன போக்கிற்கு மனிதர்களின் ஈடுகொடுப்பு, நாகரீக வளர்ச்சி போன்றவற்றினால் இவ்வாறன மகிழ்ச்சிகரமான தருணங்கள் அருகிப்போய், சித்திரை வருடப்பிறப்பு விழாவுக்காக, எமது பிரதேசத்தில் இவ்வாறான நிகழ்வுகள் ஒரு காலத்தில் இடம்பெற்றன என்பதனை எடுத்துக்காட்டுவதற்காக மட்டும் ஊஞ்சல் விழா மாறியிருக்கின்றமை கவலைக்குரியதாகும்.

ஊஞ்சல் ஆடிய மரங்கள் எல்லாம் ஒழிந்துபோய், அந்த நேரங்களை எல்லாம் நவீன சாதனங்களில் செலவு செய்ய ஒதுக்கியமை, மரத்தில் ஊஞ்சல் இட்டு ஆடியதும், ஊஞ்சல் பாடல்களும் இளம்சமூகத்திற்கு தெரியாமலே போகச் செய்துவிட்டன.

மூதாதையர் உருவாக்கிய விளையாட்டுக்களும், கலைகளும், சம்பிரதாயங்களும் மனிதவாழ்வுக்கு தேவை-வயான, மனித உடலுக்கு உறுதியை ஏற்படுத்திக்கொடுக்க கூடிய, அனுபவக்கற்றலை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளேயாகும். அவற்றின்பால் ஈர்ப்பும், ஈடுபாடும் கொள்ளாமையினால் தமிழர்க-ளின் இருப்புக்கான, வரலாற்றுக்கான காலங்களை சுருக்கியுள்ளோம். இதனால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு உதவும், ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக எமது மூதாதையர்கள் எமக்களித்த விடயங்களை தொடர்ந்தும் எமது இளம் சமூதாயத்திற்கு கடத்தி நிற்க அனைவரும் ஒன்று சேரவேண்டுமென்பதே தற்போதைய எதிர்பார்ப்பு.

# கியூபாவில் காஸ்ரோ குடும்ப ஆட்சி முடிவுக்கு வருகிறது



கியூபா அதிபர் ரவுல் காஸ்ட்ரோவின் வலது கரமான மிகேல் டயஸ்-கேனலை ரவுல் காஸ்ட்ரோவுக்கு பிறகு அதிபர் வேட்பாளராக அந்நாட்டு நாடாளுமன்றம் நியமித்ததன் மூலம் காஸ்ட்ரோ குடும்பத்தின் நீண்ட ஆட்சிக்காலம் அங்கு முற்றுப்பெறவுள்ளது.

கடந்த 2006-ஆம் ஆண்டு உடல்நலன் குன்றிய தனது சகோதரர் பிடல் காஸ்ட்ரோவுக்கு பதிலாக ரவுல் காஸ்ட்ரோ கியூபா அதிபராக பதவியேற்றார்.

ஒபாமா அமெரிக்க அதிபராக இருந்தபோது கியூபாவுடனான அமெரிக்காவின் உறவு மேம்பட்டது. ஆனால், டொனால்டு டிரம்ப் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பிறகு, இந்த மேம்பாட்டில் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

பதவி விலகினாலும் கம்யூனிஸ்ட் நாடான கியூபாவில் ரவுல் காஸ்ட்ரோ பலம்பொருந்திய மற்றும் செல்வாக்குள்ள நபராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மிகேலின் புதிய நியமனத்தின் மீது நாட்டின் தேசிய அவை வாக்களித்துள்ள போதிலும், வியாழக்கிழமை வரை முடிவுகள் அறிவிக்கப்படாது.

வியாழனன்று மிகேலிடம் அதிபர் அதிகாரத்தை ரவுல் முறைப்படி அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மூ(த்த)தேவி யார்?



## வி.இ.குகநாதன்

இது என்ன கேள்வி, மூதேவி என்பது ஒரு தீயூழ் (Bad luck ) அல்லது ஒரு வசைச்சொல் என்பதே பலரின் கருத்தாகவிருக்கும், ஆனால் உண்மையில் மூத்த தேவியே மருவி மூதேவியாக மாறியது என்பதும் இந்த மூத்த தேவியே ஒரு காலத்தில் தமிழர்களினதும் மற்றைய பழங்குடியினரதும் முக்கிய தெய்வம் என்பதுமே உண்மை.

மனிதர்கள் ஆதிகாலத்தில் தாய்வழிச் சமுதாயமாகவிருந்தபோது பெண் தெய்வ வழிபாடே முக்கியம் பெற்றிருந்தது. அந்த வகையில் தமிழர்களின் வழிபாட்டுத் தெய்வமாக கொற்றவை எனும் பெண் தெய்வம் (சான்று- தொல்காப்பியம்) வழிபடப்பட்டுவந்தது.

“ முன்னோர் வழிபாடு” மரபிற்கமைய கொற்றவை என்பது தனி ஒரு பெண்ணைக் குறிக்காமல் ஒவ்வொரு குலம் அல்லது இனக்குழுக்களிற்கும் வெவ்வேறான பெண் மூத்தோர்களையே குறிக்கும். இந்த வகையில் உருவான ஒரு பெண் தெய்வ வழிபாடே மூத்ததேவி (தவ்வை எனவும் அழைப்பர்) வழிபாடாகும்.

சங்க இலக்கியங்களில் இவர் மாமுகடி, தவ்வை, காக்கைக் கொடியோள், பழையோள் உட்படப் பல பெயர்களால்



அழைக்கப்படுகிறாள். பெண்களின் கருவளத்தை அடிப்படையாகக்கொண்டு மழை வளத்தைப் பெறுவதற்கும் இத்தெய்வத்தை பழங்குடியினர் வணங்கிவந்தனர். பின்னர் ஏழு கன்னியர்களுள் தவ்வை குழந்தைப் பேறு வழங்கும் தெய்வமாக வழிபடப்பட்டுள்ளார். சமண சமயத்திலும், பிறகு சாக்தத்திலும் தவ்வை வழிபாடு இருந்துள்ளது.

### மூத்ததேவி மூதேவியான கதை:

இவ்வாறு முக்கியமான ஒரு தெய்வமாகவிருந்த மூத்ததேவி வழிபாடு பார்ப்பனப்படையெடுப்புடன் நிலைகுலைந்து போனது.

பார்ப்பனர்கள் தமது வைதீக (இன்றைய இந்து) மதத்தைப் பரப்பும்போது தமது அக்கினி, இந்திரன், சோமன் போன்ற வேதகால கடவுள்களைப் பரப்ப முயன்று, முதலில் தோல்வியுற்ற பின்பு, பழங்குடிகளின் கடவுள்களைத் தமதாக்கினர் (எடுத்துக்காட்டு-முருகன், மாயன்). தமது ஆளுகைக்குள் கொண்டுவரமுடியாத தெய்வங்களைப் புராண மூடநம்பிக்கைக் கதைகள் மூலம் இழிவுபடுத்திக் கேவலப்படுத்தினர். அந்தவகையில் “மூதேவி” ஆக்கப்பட்ட பெண்தெய்வம்தான் மூத்ததேவி.

இவ்வாறான பார்ப்பன புரட்டுகளிற்குப் பின்னரே தேவி தீயூழ் (Bad luck ), வசைபாடல் என்பவற்றுடன் தொடர்புபட்டுப் போனாள். இத்தகைய புரட்டலிற்கு வழக்கம்போல உயர்சாதியினர் இலகுவாகப் பலியானபோதும், அடிமட்ட மக்கள் தமது தவ்வையினை (மூத்ததேவி) தொடர்ந்தும் வழிபட்டேவந்தனர்.

பல்லவர்களின் ஆட்சிகாலமான 8ம் நூற்றாண்டிலும் தமிழர்களின் தெய்வமாக தவ்வை வழிபடப்பட்டுள்ளார். பல்லவர்கள் அமைத்த கோயில்களில் தவ்வைக்குச் சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்றுள்ளது. நந்திவர்ம பல்லவன் தவ்வையைக் குலதெய்வமாக வழிபாடு செய்துள்ளார். பின்னர் பிற்காலச் சோழர் காலத்தில் (பார்ப்பனர்களிற்கான பொற்காலத்தில்) தவ்வை வழிபாடு குறித்த ஒரு சாதியினரின் (வண்ணார்களின்) வழிபாடாக மட்டுமே சுருக்கப்பட்டது.

பொதுவாகவே தமிழரின் மரபுகளைச் சிதைக்கவேண்டுமாயின் அவற்றை குறித்த ஒரு சாதிக்கு மட்டுமென ஒதுக்கிவிட்டுப் பின்னர் குறித்த சாதியினருடன் சேர்த்து அந்த மரபுகளையும் இழிவுபடுத்திவிடுவது பார்ப்பனியத்திற்கு கைவந்த கலை (காட்டு-தமிழரின் தலையாய இசைக்கருவியான பறை). இவ்வாறான பின்புலத்திலேயே வண்ணார்களின் தொழிலுடன் தொடர்புடைய கழுதையானது மூத்ததேவியின் வாகனமாக்கப்பட்டது. இந்த வகையில் தவ்வை வழிபாடு குறித்த சாதியினரிடம் தொடர்ந்து மாடன்- மாடத்தி வழிபாடாக (சுடலை மாடன், நல்ல மாடத்தி) நிலைத்திருக்கிறது. அதேபோன்று பிற சாதியினர் மத்தியிலிருந்த மூத்ததேவி பார்வதிதேவியாகவும், ஐயனார் வழிபாட்டுடனும் உள்வாங்கப்பட்டது.

பிற்காலச் சோழர் காலத்தில் பார்ப்பனியச் சைவம் மூத்ததேவியினை வண்ணாரிற்கு மட்டுமே ஒதுக்கிவிட, வைணவமும் தன்பங்கிற்கு மூத்ததேவியினை சிதைக்கும் வேலையினைச் செய்தது. திருத்தொண்டரடி பொடியாழ்வார் காலத்தில் மூத்ததேவி செல்வம் தருபவளாகவே வழிபடப்பட்டாள். சமசுகிரதத்தில் ஜேஷ்டா தேவி எனவும் அழைக்கப்பட்டாள். ஜேஷ்டா தேவி என்பதற்கு முதல்தேவி என்றொரு பொருளிருக்க, அது இருட்டடிப்புச் செய்யப்பட்டு மற்றொரு பொருளான சேட்டை என்பது கற்பிக்கப்பட்டது. சேட்டை மூதேவியை எதற்கு பூஜை செய்வது, விஷ்ணுவும், லட்சுமியுமே பூஜை செய்ய உகந்த தெய்வம் என்று கூறி, மெல்ல பக்தர்களை நாராயண பெருமானின் சேவையில் சேர்த்துக் கொண்டதாகவும், பரவலான கருத்து உள்ளது.

ஈழத்தினைப் பொறுத்தவரையில்

## மூத்த தேவியே மூதேவி ஆனார்

இந்த மூத்ததேவி வழிபாடானது வீரபத்திரர் வழிபாட்டுடன் கலந்திருக்கலாம் என உய்த்துணர



முடியும், ஏனெனில் வீரபத்திரர் தொடர்புடைய புராணக்கதையும் வண்ணார் சாதியுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அதாவது வீரபத்திரர் சிவனை அவமதித்த தட்சண் எனும் அசுரனைக் கொன்ற பாவத்திற்காக வீரபத்திரர் வழித்தோன்றல்கள் சிவபக்தர்களின் வண்ணம் தோய்த்தலை (வண்ணார் தொழில்) மேற்கொள்ளப் பணிக்கப்பட்டதாகச் செல்கிறது அந்தப் புராணக்கதை.

இவளவு புனைவுகளிற்குப் பின்னர் கூட இந்தியாவில் சில இடங்களில் மூத்ததேவி வழிபாடு தொடர்ந்து நடைபெற்றுவந்தது. (காட்டு-வழூவூரிலுள்ள வீரட்டேஸ்வரர் கோயிலில் மேற்கு திருச்சுற்றிலுள்ள மேடையில் மூத்த தேவி உருவம் வைக்கப்பட்டுள்ளது, குளித்தலை கடம்பவனநாதர் கோயில்).

இந்த நிலையில் பார்ப்பனியம் தனது இறுதி ஆயுதமான கடவுள்களை குடும்பத்திற்குள் அடைக்கும் தந்திரோபாயத்தின்படி மூதேவி சனீசுவரனின் மனைவியாக்கப்பட்டாள். அதேவேளையில் முதல்தேவியின் சமசுகிரத வடிவமான ஜேஷ்டா தேவி சில இடங்களில் வருணனின் மனைவியாகவும் கருதப்படுகிறாள். இவ்வாறு ஒருவரே வெவ்வேறு கடவுள்களிற்கு மனைவியாக்கப்படுவதற்குக் காரணமுண்டு. சங்க காலத்தில் மழைக்காக வழிபடப்பட்ட மூத்ததேவியினை இந்துமத மழைக்கடவுளான வர்ணதேவனுடன் இணைப்பதற்கு ஒரு கதையும், பின்னர் தாமே புனைந்த தீயூழிற்கு (Bad luck) பொருத்தமாக சனீசுவரனுடன் இணைத்து மற்றொரு கதையும் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

### கொடும்பாவியான பாவி (மூத்ததேவி):

அரசியலிலோ அல்லது பொது வாழ்விலோ ஒருவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு வடிவமாக கொடும்பாவி எரித்தல் காணப்படுகிறது. இந்த கொடும்பாவி எரிப்பின் தோற்றுவாய் மேற்கூறிய மூத்ததேவியே. பார்ப்பனப் புனைவிற்கு உட்பட்ட ஒரு மூடநம்பிக்கையாக மழை வேண்டி கொடும்பாவி எரிக்கும் வழக்கம் தோன்றியது. இன்னொரு நம்பிக்கையாக கழுதைக்கும் கழுதைக்கும் திருமணம் செய்துவைக்கும் வழக்கம் காணப்படுகிறது (இங்கு மூத்ததேவியின் வாகனமாக்கப்பட்ட கழுதையினை நினைவிற்கொள்க). மழை வேண்டி கொடும்பாவி எரிக்கப்படும்போது பாடப்படும் ஒரு பாடலைப் பார்ப்போம்.

“கோடை மழை பெய்யாதோ கொடும்பாவி எரியாளோ”

என்று பாடப்படும் பாடலில் குறிப்பிடப்படும் பெண்பாலும், அங்கு எரிக்கப்படும் கொடும்பாவி உருவமும் மூத்ததேவியே. பார்ப்பனத்தின் கெட்டித்தனமும், தமிழரின் முட்டாள்தனமும் இங்குதான் உள்ளது. எந்த தமிழர்கள் மூத்ததேவியினை மழை வேண்டி வழிபட்டார்களோ, அதே தமிழர்களைளைக்கொண்டு மழை வேண்டி அதே மூத்ததேவியின் உருவப்பொம்மையினை கொடும்பாவியாக எரிக்க வைத்துவிட்டார்களே!

\- நன்றி இனியொரு


### சேவை

தெகிவளையில் வயோதிபர்களை அன்புடனும், ஆதரவுடனும் பராமரித்து வைத்திய சேவையும் வழங்கும் அனுபவமுள்ள பெண் தாதிமார்களின் சேவையுடன் சிறந்த சுற்றாடலில் அமைதியான முதியோர் இல்லம்.
தொடர்புகளுக்கு:- 0750252141
Langaa medical mission
**Home for the Elders.**

### வைத்தியம்

இயற்கை வைத்தியம்: உங்கள் இல்லற சுகம் குறைவின்றி இருக்க, ஆண்மை குறைவுக்கு, பாலியல் பலவீனங்களுக்கு 100% சுகம். பக்கவிளைவுகள் எதுவுமில்லாத இயற்கை முறையிலான வைத்தியம்.
Ever sixteen வெள்ளவத்தை.
(65 1/1 மெனிங் பிளேஸ்)
தொடர்புகளுக்கு:- 0750252141
நிரந்தர இல்லற சுகம்.




# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 09

## தமிழ்க்கவி

மட்டக்களப்புப் போராளியளப்பத்தி எங்களுக்கு அப்ப தெரிஞ்சதெல்லாம் கஸ்டப்பிரதேசத்திலயிருந்து வருகினம். நகர வாசனையில்லாத ஊருகளுக்க இருந்ததுகள்; படிப்பும் மிச்சங் குறைவு எண்டதுதான். ஆனா அவையளின்ர பழக்க

**என்ர வாழ்க்கையில் ஒரு பெரிய இடத்தை பிடிச்ச அந்த மட்டக்களப்பான்**

வழக்கம் பேச்சுகள் மட்டும் எங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். அவயளிட்ட அவை வந்தநேரம் நடந்த புதினங்கள கேப்பம்.

“காடுபூந்து வரக்குள்ள நாம வழிமாறிட்டமா அண்ணாக்கள் வெட்டைக்கிறங்கிட்டாங்க“ எண்டால் அவையள் வெளியால வந்திட்டினம் எண்டதுதான் கருத்து.

“மறுகா எங்கள சோதிச்சு வாறாங்க, நாங்க அழுதிட்டு இரிக்கம்“ எங்களுக்க இவயட பேச்சே ஒரு விளப்பமில்லாத பேச்சுத்தான்.

“அட அன்ரிய நான் மதிக்கல்ல இத வேறாரோண்டு போன என்ன“ இந்த மதிக்கல்ல எண்ட சொல்லுக்கு எங்க பக்கம் அர்த்தமே வேற. அவயளுக்கு அத அடையாளங் காணேல்ல எண்டுதான் கருத்து. முதன் முதலா மட்டக்களப்பில போராளியள வச்சிருக்க ஏலாம பெருந்தொகையா யாழ்ப்பாணம் கொண்டு வரவேண்டிய சூழல் வந்ததால, மட்டக்களப்பால கொணந்த புதிய போராளியளுக்கு பயிற்சி முகாமொண்டு எழுதுமட்டுவாள் எண்ட இடத்தில துவக்கிச்சினம்.

அப்பதான் படையணியளுக்கெண்டு பேர்வைக்கிற பழக்கமும் வந்ததால முதல்படையா “சாள்ஸ் அன்ரனி“ இருந்தது. பின்ன மட்டக்களப்பு படையணிக்கு ஜெயந்தன் படையணி எண்டு பேர். சாமி....! நாங்கள் அந்தப்படையில உள்ளவைய அப்ப கண்ணால காண ஏலாது ஏலாதென்ன அந்த திசைக்கே போக முடியாது. வந்து...எல்லாம் சொல்லக் கேள்விதான்.

அதில வந்து அம்பாறைப்பக்கம் அரசியல் வேலை செய்தவையள், வந்திருக்கினம் அவை முன்னமே பயிற்சி முடிச்சு சில பல தாக்குதல்லயும் சண்டைபிடிச்ச வையாம்.

இயக்கத்தில சண்டைதான் பிடிக்காமயும் ஏலாதவை இருப்பினம். கடுமையான பயிற்சியால அப்பிடி நெஞ்சாங்கூட்டுக்க ரத்தங்கட்டி நிரந்தர நோயாளியாப் போனவை இருப்பினம்.

2 பாத்தா வெளிப்பார்வைக்கு ஹீரோ மாதிரி திரிவினம் உள்ளுக்க கோதுதான்; இதைவிட வாற வழியில கடல்ல வரக்க கனோன் அடிச்சு காயப்பட்டு உடல் உறுப்பிழந்தவையும் இருக்கினம். இவை பயிற்சி எடுக்க ஏலாமப்போனாலும் அரசியல் வேலையளுக்கு பழக்கி விட்டினம்.

இந்த படையணியில அப்பிடியானவைதான் பொதுவா அரசியல் வேலைக்க வருகினம். அவைக்கு எழுதப்படிக்க தெரிஞ்சாக்காணும். அதுக்கும் மேல வகுப்புகள் வச்சு வச்சே அவங்கள அரசியலுக்கு பழக்கமாக்கிருவினம் பிறகு ஒரு தம்பி அவயளோட அரசியல் பேசேலாது. மக்களை வசியம் பண்ணுறதிலயும் நல்லா பழக்கப்பட்டிருவினம்.

இவையளுக்குள்ள பள்ளிக்குப்போய் படிச்ச பெடியளும் நிறையப் பேர் இருந்தவைதான். முதன்முதலா பொலிசு அதுதான் காவல்துறையெண்டு வெளிக்கிடயுக்க அதிலயும் மட்டக்களப்பு பெடியள் சேர்ந்தவைதான்.

ஆனா நீதித்துறையெண்டு வரக்க எல்லா மாவட்டத்தாலயும் ஆக்கள எடுக்கினம். அதிலயும் மட்டக்களப்பு பெடியள் வந்திட்டினம். ஒரளவுக்கு மாவீரர் குடும்பத்திலயிருந்து வந்த போராளியளுக்கு முன்னுரிமைதான்.

**இயக்கத்தில மன்னார் சோமாலியா, வவுனியா எரித்திரியா, மட்டக்களப்பு சூடான்**

இதுக்கயும் பொம்பிளப்பிள்ளையளும் வருகினம்.

மட்டக்களப்பிலயிருந்து பல மைல் தூரம் காடுகளுக்கால நடந்து வந்து கடக்கரைக்கு வரதுக்கிடையில ஆமி கண்டானோ... ஒரு சண்டை ரெண்டுமூண்டு சாவு சிலர் காயம். காயத்துக்கு ஆசுப்பத்திரி கிடையாது முள்ளியவளைக்கு எட்டுமட்டும் தப்பினாசரி. அங்கால கடவுள்தான்.

ரெண்டுமூண்டு இடத்தில பெரிய ஆறுகளத்தாண்டணும். மூண்டு இடத்தில பெரிய ரோட்டுக்கடக்கணும்; சிலநேரம் ஆள் பிழக்கம் இருந்தா. நாள்முழுக்க காட்டுக்க தண்ணிவென்னி இல்லாம் கெடக்கணும். சில காலத்தில வெளியில வரேலாம




இலைகுழையளத்திண்டு கொண்டு கண்டல்காடுவழிய கிடந்தகதையும் வழியில ஆத்தக்கடக்கயுக்க முதலை இழுத்த கதையும்கூட நாக்கு அண்ணத்தில ஒட்ட பயந்து கொண்டே கேட்டிருக்கிறம்.

இப்பிடி இவ்வளவு துயரங்களைச்சுமந்து கொண்டும் வன்னிக்கு வர இவையளில கனபேரை பெற்றார்தான் கொண்டுவந்து இயக்கத்திட்ட குடுத்திட்டுப்போனதாம் எண்டா நம்புவியளோ. நம்புங்க அதுதான் உண்மை.

3 அந்தநேரம் வெடலைப்பருவத்துப் பொடியள மட்டக்களப்பில வச்சிருக்கிறது மடியில நெருப்பைக்கட்டிக் கொண்டிருக்கிற மாதிரி எங்கயெண்டாலும் போய் தப்பிப்பெழைச்சுக் கிடந்தா பெறவு பாக்கலாம். எண்டனுப்பினதுதான்.

எண்ணைச்சட்டியிலயிருந்து அடுப்புக்கை விழுந்த பிள்ளையளின்ர சோகக்கதை சொந்தக்கதைய நான் ஒண்டொண்டா சொல்லவோ ஒருமிக்கச் சொல்லவோ? எல்லாம் விலாவாரியா பிறகு பாப்பம்.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூத்து மூண்டு. பத்தாம் மாசம். பூநகரி தவளைத்தாக்குதலுக்கு முதல் வரப்போற இழப்பை ஈடுசெய்ய. தீவிர ஆள் சேர்ப்பு பிரச்சார நடவடிக்கை தொடங்கீட்டுது. இதில யாழ்வட்டத்தில பிரச்சார வேலைக்கு கொஞ்சப்பேர் இறங்கினம். பிரச்சாரத்துக்கு பொறுப்பாளர் ஓராள். பேச்சாளர்கள் ரெண்டுபேர் இதில ஓராள் புதிசா மட்டக்களப்பால வந்த ஒரு பெடியன். மற்றது...நான்தான்.

ஐயோ கடவுளே நான் அப்பிடியெல்லாம் யாழ்ப்பாணத்தை தெரிஞ்ச ஆளில்ல எனக்கு கொடிகாமம் சந்தையும் அதுக்கு கிட்ட இருக்கிற மாமி வீடுந்தான் தெரியும். கலியாணம் முடிச்சபிறகு நீர்வேலி பூதர்மடத்தடி தெரியும். இப்ப தின்னவேலி தெரியும். இவ்வளவுதான் எனக்கு தெரிஞ்ச யாழ்ப்பாணம். அதாவது நான் வன்னி. மற்றவன் மட்டக்களப்பான். பொறுப்பாளருக்கா...செம காண்ட். அவரோ சுத்தபத்தமான யாழ்ப்பாணம். ஏங்களக் கண்ட உடனயே அந்தாள் எங்கட நெத்திக்குநேர,

“இதுகளை வச்சு நான் என்னண்டு மேய்க்கிற“ எண்டிட்டார்.

பின்னாளில் இயக்கத்தில் ஒரு புதுமொழி உண்டு அதாகப்பட்டது, இயக்கத்தில மன்னார் சோமாலியா, வவுனியா எரித்திரியா, மட்டக்களப்பு சூடான். அப்ப நாங்கள் நிமிந்தும் பேசாத மடந்தையள்தான். திரும்பிப்போகவும் வழி தெரியாது. எனக்கா அந்த மட்டக்களப்பு பெடியனயும் முன்னபின்ன தெரியாது. பின்னாளில என்னை உலகறியச் செய்யப்போறவன் அவன்தான் எண்டதை நானப்ப அறியேல்ல. என்ர வாழ்க்கையில ஒரு பெரிய இடத்தைப்பிடிச்ச அந்த மட்டக்களப்பானை பாத்தன் பொறுப்பாளர் சொன்னது எதுகும் தோலுக்கை பூராத மாதிரி புன்னகையோட இருந்தான்.... பொறுங்க ஒருவாய் வெத்தில போட்டிட்டு வாறன். அவண்ட கதைசொல்ல...

# காரைதீவில் கல்விச்சாதனையாளர்கள் கௌரவிப்பு!

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக்கழகம் ஏப்ரல் 15இல் காரைதீவு கனகரெத்தினம் விளையாட்டரங்கில் நடாத்திய சித்திரைப்புத்தாண்டு விழாவில் கடந்தவருடம் நடைபெற்ற க.பொத. உயர்தரத்தில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்தது.

மருத்துவபீடத்திற்கு தெரிவான திருநாவுக்கரசு கோபிநாத், சகாதேவராஜா மைத்ரி, இராசையா டக்சிகா, பொறியியல்



பீடத்திற்குத் தெரிவான ரவிசங்கர் கேதுஜா, கலைப்பிரிவுக்குத் தெரிவான செல்வம் ஆர்த்திகா, ஜெகநாதன் கிருஸ்ணவி, ஜெகநாதன் ஜெயதர்சிகா, புவனேசராசா கிருஸ்காந்த் ஆகிய 07 மாணவமாணவியர் கௌரவிக்கப்பட்டனர்.

வைத்திய அதிகாரி டாக்டர் பி.சுரேஸ்குமார், சொர்ணம் நகைமாட உரிமையாளர் எம்.விஸ்வநாதன், மஞ்சி முகாமையாளர் உள்ளிட்ட பலர் கல்விச்சாதனையாளர்களுக்கு பரிசுப்பொருட்கள் வழங்கினர்.




அரங்கம்
13
வெள்ளி, சித்திரை 20, 2018.
இதழ் – 09

# தென் துருவத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பைவிட கடும் பனி

தென்துருவத்தில் தற்போது நிலவும் பனிப்பொழிவு 200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட கடுமையாக இருப்பதாக அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.





அதாவது 1801-1810 ஆகிய பத்தாண்டுகளில் பெய்த பனிப்பொழிவைவிட 2001-2010 ஆகிய பத்தாண்டுகளில் பெய்த பனிப்பொழிவின் அளவு 27 ஆயிரத்து 200 கோடி தொன் (272 பில்லியன் தொன்) அதிகரித்துள்ளதாக அந்த ஆய்வு கூறுகிறது.

பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே குழுவினர் நடத்திய அந்த ஆய்வு முடிவு-களை, அதில் பங்குபெற்ற லிஸ் தாமஸ், வியன்னாவில் நடைபெற்ற ஐரோப்பிய புவி அறிவியல் ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

அந்தப் பனிக் கண்டத்தில் 79 இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட பனிக்கட்டிகள் மூலம் கடந்த காலங்களில் உண்டான பனிப்பொழிவு குறித்து அவர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வில் கூடுதல் பனி நீரின் அளவு சாக்கடலின் பரப்பளவைப் போல இரு மடங்கு இருப்பதை அவர்கள் கண்டறிந்தனர்.

நியூசிலாந்து நாட்டின் நிலப்பரப்பு முழுவதையும் ஒரு மீட்டர் ஆழமுள்ள நீரில் மூழ்கடிக்க இந்த நீர் போதுமானது.

பருவ நிலையில் வெப்பம் அதிகரிப்பதால் பனிப்பொழிவு அதிகரித்துள்ளதாக லிஸ் தாமஸ் கூறுகிறார்.

1992 முதல் கடல் மட்டம் அதிகரித்தித்தில், தெந்துருவக் கண்டத்தில் உருகிய பனி 4.3 மில்லி மீட்டர் உயர்வுக்கு காரணமாகியுள்ளதாக தங்களின் சிறந்த மதிப்பீடுகள் தெரிவித்துள்ளதாக என்று அவர் கூறுகி-றார்.





கூடுதல் பனிப்பொழிவு கடல் மட்டத்தைத் தாழ்த்தி இருந்தாலும், அண்டார்டிகாவில் ஓரங்களில் உண்டாகும் பனி இழப்பைத் தடுக்கப் போதுமானதல்ல என்று அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

- நன்றி பிபிசி






# அன்டிபயாட்டிக் மருந்துக்கு அடங்காத பக்டீரியாக்கள்



பக்டீரியா மூலம் பரவும் நோய்களுக்கு கொடுக்கப்படும் எதிர்ப்பு மருந்தே அன்டிபயாட்டிக் மருந்துகள் எனப்படுகிறது. சிலவேளை இப்படியான மருந்துகள் பாக்டீரியாக்களுக்கு எதிர்ப்பாக வேலைசெய்வதில்லை. தற்போது உள்ள நிலைமை என்னவென்றால் பாக்டீரியாக்களுக்கு எதிரான அன்டிபயாட்டிக் மருந்துகளை ஏமாற்றி பாக்டீரியாக்கள் அதிகமாகின்றன என்று ஆய்வுகள் சொல்கின்றன.

ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் பக்டீரியா தொற்றுக்கு எதிராக கொடுக்கப்படும் அன்டிபயாட்டிக் மருந்துகள் வேலை செய்யாமல் இறப்பவர்களின் எண்ணிக்கை 23,000 ஆகும். அங்கேயே அப்படியென்றால், ஆசிய நாடுகளை நினைத்துப் பாருங்கள்!

புதிய ஆய்வில் அன்டிபயாட்டிக் மருந்துகளுக்கு எதிர்ப்புக்காட்டும் 221 வித்தியாசமான பாக்டீரியாக்கள் கண்டறியப்பட்டுள்ளன. அப்படியென்றால் நம்மிடம் இருக்கும் மருந்துகளைக் கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்பதே அதன் அர்த்தம்.

சில வருடங்களுக்கு முன்பு இந்த நிலை மிக மிக அரிதாக இருந்த போதிலும், தற்போது அன்டிபயாட்டிக் மருந்துகளுக்கு எதிர்புக்காட்டும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும் அதனால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையும் அசாதாரண அளவில் அதிகரித்து வருகின்றன. இந்த வளர்ச்சி உலக சுகாதார நிறுவனமே எச்சரிக்கை அறிக்கை விடும் அளவிற்கு கொண்டுவந்துள்ளது.

இப்படி எல்லா அன்டிபயாட்டிக் மருந்துகளுக்கும் அல்லது பெரும்பாலான அன்டிபயாட்டிக் மருந்துகளுக்கு எதிர்ப்புக்க் காட்டும் நுண்ணுயிர்கள் அல்லது பாக்டீரியாக்கள் பொதுவாக வி-சேட மரபணுக்களை கொண்டிருக்கின்றன.

இந்த செய்தி உங்களை பாதித்திருந்தால் அடுத்ததாக வரவிருப்பது உங்களை



நிலைகுலையச் செய்யலாம். அதாகப்பட்டது, எந்தவிதமான பாக்டீரியா தொற்றுக்கான அறிகுறிகள் இல்லாத ஆசாமிகளுக்கு செய்யப்பட்ட ஆய்விலும் பத்தில் ஒருவருக்கு இப்படியான அன்டிபயாட்டிக்க்கு




எதிர்ப்புக்காட்டும் பாக்டீரியாக்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதில் இருக்கும் ஒரு நல்ல செய்தி, இந்த ஆய்வகங்கள் ஏற்கனவே இருக்கும் அன்டிபயாட்டிக் மருந்துகளின் வீரியத்தை அதிகரிக்க ஆய்வுகள் செய்வதுடன், புதிதாக அதிசக்திவாய்ந்த அன்டிபயாட்டிக் மருந்துகளையும் உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.


நம்மை அதாவது மனிதனை அழிப்பதற்கு சக்தி பொருந்தியவன் மனிதன் மட்டுமே என்று நாம் நம்புகிறோம், அதனால் தான் அணுவாயுதம், உலகப்போர் என்பவற்றை கட்டுப்படுத்த முனைப்புக் காட்டுகிறோம், ஆனால் மரணத்தின் அரசன் இந்த இயற்கையிலே கண்களுக்கு கூட புலப்படாதளவு சிறிய நுண்ணங்கிகளில் உறங்குகிறான். அவன் எழும்பும் முன் நாம் விழித்துக்கொள்வது எமது சாமர்த்தியம் இல்லையேல் தலைக்குமேல் வெள்ளம் போனால் சாண் என்ன முழம் என்ன என்கிற நிலைதான்.



-- சிறிசரவணா --





# உலகின் தலைசிறந்த நடிகன் சார்லி சாப்ளின்


## தனக்கென தனிப் பாணியை வகுத்து, சாதனை படைத்தவர் பிரிட்டிஷ் நடிகர்

கிழிந்த கோட்டு, தலைக்கு பொருந்தாததால் கையில் வைத்திருக்கும் தொப்பி, வித்தியாசமான நடை, வலிகளை மறைக்கும் புன்னகை என்று தனக்கான அடையாளத்தை சுய-மாக உருவாக்கிக் கொண்டு திரைப்பட உலகில் வலம் வந்தார் சாப்ளின். அவரது 129-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்படும் இந்த நாட்களில் சார்லிஸ் ஸ்பென்சர் சாப்ளின் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் இவை.

1889 ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தார் சார்லி சாப்ளின். கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளாக லண்டனில் உள்ள லேம்பெத் வொர்க் ஹவுஸில் வசித்த பிறகு 1910-இல் அமெரிக்காவுக்கு புறப்பட்டார்.
சிறு வயதில் வறுமையின் பிடியில் இவரது குடும்பம் சிக்கியிருந்தபோது, பூங்காக்களில் உறங்கி பல இரவுகளைக் கழித்தவர் சார்லி சாப்ளின்.
1925, ஜூலை மாதம், டைம்ஸ் வார இதழின் அட்டை படத்தை அலங்கரித்த முதலாவது திரைப்பட உலகைச் சேர்ந்த நாயகன் இவர்.



தனது வாழ்நாளில் நான்கு பெண்களை வெவ்வேறு காலகட்டங்களில் திருமணம் செய்தார். அவரது மனைவிகள் அனைவருமே அவரை விட மிகவும் இளையவர்கள். முதலாவது மனைவிக்கு 16 வயதானபோது அவருக்கு வயது 29. இரண்டாவது மனைவிக்கு 16 ஆன போது இவருக்கு வயது 35. மூன்றாவது மனைவிக்கு 28 வயதானபோது இவருக்கு 47 வயதானது. கடைசியாக நான்காவது முறையாக ஊனா ஓ நீல் என்ற 18 வயது பெண்ணை திருமணம் செய்தபோது அவருக்கு வயது 54.
சார்லி சாப்ளின் மறைவுக்குப் பிறகு, அவரது மிகப்பெரிய ரசிகையான யுக்ரெய்ன் நாட்டு விண்வெளி வீராங்கனை லியூட்மீலா கரச்கினா, ஒரு எரிகல்லுக்கு 3623 சாப்ளின் என்று பெயர் சூட்டினார்.
வெறும் நகைச்சுவை நடிகராக மட்டுமின்றி சிறந்த கதையாசிரியர், இயக்குநர், இசையமைப்பாளர் ஆகிய பணிகளையும் இடைவிடாமல் செய்து வந்தார் சாப்ளின்.
ஹாலிவுட்டுக்கு செல்லும் முன்பு ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் வசித்தார். அங்கு அவரது நினைவாக ஒரு அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.
ஸ்காட்லாந்தில் உள்ள நார்ன் என்ற இடத்தை மிகவும் விரும்பியதால் அங்கு ஆண்டுதோறும் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் சாப்ளின்.
1977, டிசம்பர் 25இல் சாப்ளின் உயிரிழந்த பின்பு, அடுத்த மூன்று மாதங்களில்



அவரது சடலத்தை ஒரு கும்பல் பணம் பறிக்கும் நோக்கத்துடன் திருடியது. பிறகு பதினோரு வாரங்கள் கழித்து அந்த கும்பல் பிடிபட்டது.
விலைமதிப்பற்ற அமைதி, நார்ன் என்ற இடத்தில் மட்டுமே கிடைப்பதாக தனது நெருங்கிய நண்பர்களிடம் கூறினார். சாப்ளின் யார் என்றே தெரியாதவர்கள் வாழ்ந்த அந்த இடத்தில் கூட அவருக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை உருவாக்கி அவர்களுடன் மகிழ்ச்சியாக இருந்தார் சாப்ளின்.

--- நன்றி பிபிசி






# புத்தாண்டின் இரு சந்தைகள் : நல்ல முயற்சிகள்

## மத்திய வீதியில் வணிக இடம் கிடைப்பது ஒரு கனவு!

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு மட்டுநகரில் நடந்த இரு நிகழ்வுகள் மனதைக் கவர்ந்திருந்தன. இரண்டும் வணிகம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள். தொழில் முனைவோரை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டவை.

ஆனாலும் அவற்றில் காணப்பட்ட வேறு சில கூறுகளையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஒன்று மட்டுநகரின் ஃபோரம் சிட்டி செண்டர் நிறுவனத்தின் வளாகத்தில் நடந்த உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான வணிகச் சந்தை குறித்தது. உள்ளூர் பாரம்பரியப் பொருட்களை உற்பத்தியாளர்கள்



தாமே நேரடியாக தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான, விற்பனை செய்வதற்கான ஒரு வாய்ப்பாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் 15 வரையிலான உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதில் கலந்துகொண்டார்கள்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டிலான இந்த முயற்சிகளுக்கு ஃபோரம் சிட்டி செண்டர் நிறுவனம் தமது வளாகத்தை கொடுத்து அனுசரணை செய்திருந்தது.

### வணிகத்தில் வீழ்ந்து அடிபட்டவன் அதிலிருந்து எழுந்து வரவேண்டும்

இங்கு விற்பனையான உள்ளூர் உணவு உற்பத்திகள் அனைத்தும், இயற்கை உரத்தை கொண்டு தயாரிக்கப்பட்டவை என்றும், நஞ்சற்ற உணவுப் பொருட்கள்



என்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் கீதா சுதாகரன் கூறினார்.

உண்மையில் அவை செயற்கை உர நஞ்சகற்றலுக்கான ஒரு முயற்சி மாத்திரமல்ல. இலங்கையில் குறிப்பாக கிழக்கில் ஏற்பட்டிருக்கும் இனமுரண் என்னும் நஞ்சை களைவதற்கான ஒரு முயற்சியாகவும் பார்க்கப்பட வேண்டியது.

அங்கு கலந்து கொண்ட பெரும்பான்மையான உற்பத்தியாளர்கள் தமிழர்கள், ஏற்பாட்டுக்கான தளத்தை தந்தது முஸ்லிம்களால் நடத்தப்படும் சிட்டி செண்டர் நிறுவனம்.

மட்டுநகரில் 90 வீதத்துக்கும் அதிகமான கடைகள் முஸ்லிம்களால் நடத்தப்படும் சூழலில், தமிழ் வாடிக்கையாளர்கள் மீது அந்த வணிக சமூகத்துக்கு இருக்க வேண்டிய ஒரு பொறுப்புணர்வு சார்ந்ததாகவும் இந்த ஏற்பாட்டை பார்க்க வேண்டியிருந்தது.



ஒரு பிந்தங்கிய பிரதேசத்தை சேர்ந்த உற்பத்தியாளனுக்கு சந்தை வாய்ப்பு பெரும் பிரச்சினைக்கு உரிய விடயமாக இருக்கின்றது. அப்படியிருக்க நகரின் மையத்தில் அப்படியான ஒரு இடம் சில தினங்களுக்காவது இலவசமாகக் கிடைப்பது ஒரு முக்கிய ஊக்குவிப்பு முயற்சிதான்.

மட்டுநகர் மத்திய வீதியில் ஒரு இடம் கிடைப்பது என்பது தமக்கு ஒரு காலத்தில் பெரும் கனவாக இருந்ததாக ஃபோரம் சிட்டி செண்டர் நிறுவனத்தின் தலைவர் ஏ எல் எம் ஆரிஃப் பேசும் போது குறிப்பிட்டார். அப்படியான ஒரு இடத்தில் கிடைத்த வாய்ப்பை



விரைவில் நிரந்தரமாக்கிக் கொள்ள இந்த உற்பத்தியாளர்கள் முயல வேண்டும்.

"வணிகத்தை பொறுத்தவரை அடிபட்டு விழுந்தால் அதில் இருந்து பாடம் கற்று எழவேண்டும் என்ற தத்துவம் அங்கு யதார்த்தமானது" என்று பேசினார்



ஈஸ்ட்லகூன் ஹொட்டல் நிறுவனத்தின் உரிமையாளரான எம். செல்வராஜா. புது வணிகர்களுக்கு அங்கு அவர் தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

தூர தொலைவில் இருந்து வந்து மட்டுநகரின் மையத்தில் ஒரு இடத்தில் சந்தை வாய்ப்பை பெற்ற புது வணிகர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள். பெரும்பாலானோர் படுவான்கரை பக்கமாக இருந்து வந்து அதில் கலந்து கொண்டமை சிறப்பு. ஓரிரண்டு முஸ்லிம்களும் உணவுப் பொருட்களை



இவர்களோடு சேர்ந்து விற்பனை செய்தமை அழகாகத்தான் இருந்தது.

அடுத்த நிகழ்வு அரசடி மகஜனாக்கல்லூரியில் நடந்த புத்தாண்டை முன்னிட்ட வணிக நிகழ்வு. இதுவும் உள்ளூர் வணிகர்களுக்கு உற்சாகம் தரவேண்டும் என்பதை மையமாகக் கொண்டதுதான். எமது சமூகம் நிறுவனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. ஏற்கனவே நகரில் கடையமைத்திருந்த சில நிறுவனங்களும் இங்கு விற்பனை நிலையங்களை அமைத்திருந்தாலும்,
சிறிய அளவிலான புது முயற்சியாளர்கள் அங்கு விற்பனையில் ஈடுபட்டதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. நல்ல முயற்சி. புதிய தயாரிப்பாளர்கள் சிலரோடு பேசினோம்;

அவர்களிடம் உற்பத்தியில் இருக்கக்கூடிய திறன், வணிகத்தில் இருக்கவில்லை என்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. உண்மையில் இப்படியான நிகழ்வுகள் தொடரும் பட்சத்தில் அவர்களுக்கு வணிக அறிவு அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்றது. இந்த விற்பனை நிறுவனத்தை ஏற்பாடு செய்தவர்கள், வணிக நடவடிக்கையில் தேவையான பயிற்சிகளையும் உற்பத்தியாளர்களுக்கு வழங்க முயற்சிக்கலாம். நல்ல பலன் கிடைக்கும்.

மட்டக்களப்புத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களிடம் இல்லாத ஒன்று என்று பிறரால் சொல்லப்படும் ஒரு விடயம் வணிகத்திறன். இந்தக் கருத்து சரியா, பிழையா என்பதை அறிய பெரும் ஆய்வு தேவைப்படும். ஆனால், இப்படியான வாய்ப்புகள் அவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் பட்சத்தில் அவை விரைவில் நல்ல பலனைத்தரும். முயற்சி திருவினையாக்கும்.

**மணமகள் தேவை**

மட்டக்களப்பு வேளாளர் குல படித்த மணமகனுக்கு பட்டப்படிப்பு படித்த 24 வயதுக்குட்பட்ட வெளிநாட்டு பிரசாவுரிமை பெற்ற மணமகள் தேவை. கனடா, லண்டன், அவுஸ்திரேலியா விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு அரங்கம்.
070-3456800

**மணமகன் தேவை**

லண்டனில் வசிக்கும் படித்த மணமகனுக்கு பட்டப்படிப்பு படித்த ஆங்கிலம் நன்றாக பேசக்கூடிய 25 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு அரங்கம்.
070-3456800

# நீங்கள் கட்டாயம் அறிந்திருக்கவேண்டிய இணையத்தளங்கள்

## இணையம் மிகப்பெரிய கனவுலகம் : அங்கு எல்லாவற்றுக்கும் – எதற்கும் அனுமதி உண்டு



இந்தக் கட்டுரையைப் படிக்கும் உங்களுக்கு ஒருவேளை கணினியையோ கைபேசியையோ பயன்படுத்தத் தெரியாவிட்டாலும் உங்கள் வீட்டில் கணவனோ, மகனோ மகளோ, உறவினரோ யாரோ ஒருவர் இணையத்தைப் பயன்படுத்துவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். கணினி இருந்தால் தான் இணையம் பாவிக்கலாம் என்ற காலம் மலையேறி, இப்போது திறன்பேசிகள் (smartphones) உள்ளங்கைக்குள் இணையத்தைக் கொண்டு வந்து விட்டன.



இன்றைக்கு நம் ஊர்களின் மூலை முடுக்குகள் எல்லாம் இணையம் கோலோச்சுகிறது. ஃபேஸ்புக், வைபர், வட்சப், ஸ்கைப், போன்ற இணையம் சார்ந்த வர்த்தக நாமங்களை உங்களுக்குத் தெரியாவிட்டாலும் சும்மா கேள்விப்பட்டாவது இருப்பீர்கள்.

இணையம் மிகப்பரந்த - மிகப்பெரிய கனவுலகம். அங்கு எல்லாவற்றுக்கும் - எதற்கும் அனுமதி உண்டு. அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இளையதலைமுறையினர் இணையத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது மிகக் கடுமையான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டு வருகிறது. யாரும் இணையத்தில் உலவுகிறார் என்றால், அவர் பாலியல் அல்லது உளப்பிறழ்வான விடயங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதாகவே பொதுமனப்பாங்கும் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, இணையத்தில் என்னென்ன செய்யலாம் என்று தெரியாமலேயே கொஞ்சப்பேர் இணையத்தைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக்கட்டுரையாளனின் நண்பர்களில் பலருக்கு மேலே சொன்ன நான்கே நான்கு பெயர்கள் மட்டுமே இணைய உலகில் தெரியும். ஃபேஸ்புக், வைபர், வட்சப், யூரியூப்.

அரிதாக சிலர் தமிழ் செய்தித்தளங்களை அறிந்திருக்கிறார்கள். அவற்றின் செயலிகளை (apps) தங்கள் கைபேசியில் நிறுவியிருக்கிறார்கள். அவை தவிர வேறெதுவும் தெரியாமலே காலத்தைக் கடத்தும் அப்பிராணிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த இரு தரப்பினருமே எத்தனையோ பயனுள்ள விடயங்களை இணையத்தில் தேடலாம், படிக்கலாம் என்பதைத் தெரிந்து வைத்திருப்பதில்லை. தமிழர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டிய, குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் சென்று பார்த்திருக்கவேண்டிய வலைத்தளங்களை இந்தக் கட்டுரை பட்டியல்படுத்துகிறது. நீங்கள் இணையத்தைப் பயன்படுத்துபவர்கள் என்றால், ஒரு தடவையேனும் இந்த வலைத்தளங்களைச் சென்று பாருங்கள். உங்கள் மகனை மகளை, நண்பர்களை சென்று பார்க்கச் சொல்லுங்கள். அவற்றில் ஓரிரு விடயத்தையாவது கற்றுக்கொண்டோமென்றால், ஏதோ நம்மைப் பெற்று வளர்த்து இந்த நிலையில் வைத்திருக்கும் தமிழ்ச்சமூகத்துக்கு ஒரு கடமையைச் செய்து முடித்திருக்கிறோம் என்று பொருள்.

1. விக்கிப்பீடியா:
https://ta.wikipedia.org/
கூகிளில் நீங்கள் தமிழிலோ ஆங்கிலத்திலோ எந்த விடயத்தைத் தேடினாலும், அது இந்த வலைத்தளத்துக்கே கொண்டு சென்று விடும். விஞ்ஞானமா, சமயமா, வரலாறா, அரசியலா, ஆளுமைகளா எந்த விடயத்தைத் தேடினாலும், அது விக்கிப்பீடியாவில் உண்டு. தமிழ் விக்கிப்பீடியா தற்போது சுமார் ஒன்றேகால் இலட்சம் கட்டுரைகளைக் கொண்டு உலக அளவில் 59ஆம் இடத்தில் இருக்கிறது. இந்திக்கு அடுத்தபடியாக வேகமாக வளர்ச்சியடையும் இந்திய மொழி விக்கிப்பீடியா தமிழ் விக்கிப்பீடியா தான்.

2. பாடசாலைக் கல்வி வலைத்தளங்கள்:
இலங்கைப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் நவீன தொழிநுட்பமூலக் கற்றலுக்கும் வழிசமைக்கும் வகையில் பல வலைத்தளங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி, நூலகம் நிறுவனத்தின் துணை அமைப்பான ஈ-பள்ளிக்கூடம் https://ta.wikipedia.org) அத்தகைய வலைத்தளங்களுள் குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்படும் ஈ-தக்சலாவ (http://www.e-thaksalawa. moe.gov.lk) கூட இதே நோக்கத்துக்காக நிறுவப்பட்டதே.
பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளவோ, புதிய வினாத்தாள்கள், குறிப்புகள், கல்வி சார்ந்த விடயங்களை அறிந்துகொள்ளவோ இந்த வலைத்தளங்களுக்குள் பிரவேசிக்கலாம். கான் அகடமி (https://www.khanacademy.org/) உலகளவில் புகழ்பெற்ற ஒரு கற்பித்தல் வலைத்தளம். ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கும், ஓரளவு ஆங்கில அறிவு கொண்ட வளர்ந்தோருக்கும் அறிவியல் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த விடயங்களைக் கற்க அருமையான வலைத்தளம் இது.

வி.துலாஞ்சனன்

3. உயர்கல்வி வலைத்தளங்கள்

இலவசமாகக் கற்பித்து, அதை உறுதிப்படுத்த சான்றிதழ் வழங்கும் வலைத்தளங்களும் இணையத்தில் உள்ளன. தரமான விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் காணொளி வடிவில் கற்பிப்பது, மின்னஞ்சல் வழியான ஒப்படைகள் வழங்குவது, என்று இவற்றின் கற்றல் முழுக்க முழுக்க இணையம் சார்ந்தவை. இலவசமானவை. இவற்றின் சான்றிதழ்கள் தொழில்வாய்ப்புகளுக்கான நேர்முகத்தேர்வுகளில் உதவக்கூடியவை. (சில கற்கைநெறிகளின் சான்றிதழ்களைப் பெற பணம் கட்டவேண்டும்) ஈடிஎக்ஸ் (edx.org), கோர்சரா (courser.org) முதலியவை புகழ்பெற்ற இலவச உயர்கல்வி வலைத்தளங்கள்.




4. வேலைவாய்ப்பு வலைத்தளங்கள்:
வேலையின்மை நம் சமூகத்தின் மிகப்பெரிய சிக்கல். ஆனால் இணையத்திலே பல வேலைவாய்ப்பு வலைத்தளங்கள் உள்ளன என்பது நம்மவர்க்குத் தெரியாது. தமிழ் தெரிந்திருக்கவேண்டும், சாதாரண தர, உயர்தர பெறுபேறுகளே போதுமானவை உள்ளிட்ட சர்வசாதாரணமான நிபந்தனைகளைப் பார்க்கமுடிகின்ற வேலைவாய்ப்புகளும் உண்டு. பகுதிநேர வேலைகள், தற்காலிக வேலைகள், தனியார் வேலைகள் என்று பல பிரிவுகளாக இவை காணப்படுகின்றன. இலங்கையில் ரொப்ஜொப்ஸ் (http://www.topjobs.lk/), எக்ஸ்பிரஸ்ஜொப்ஸ் (https://xpressjobs.lk/) இரண்டும் இந்தவகையில் முக்கியமானவை. அரச வேலைவாய்ப்புகள் மைரியூற்றர் வலைத்தளத்தில் (http://www.mytutor.lk/myjobs/) அடிக்கடி பிரசுரமாவதுண்டு.

5. தமிழில் தட்டச்சு:
இணையத்தைப் பயன்படுத்தும் பலருக்கும் தமிழில் தட்டச்சத் தெரியாது. முறைப்படி தமிழ்த் தட்டச்சு கற்பவர்கள் பாமினி அல்லது கழக எழுத்துருவையே கற்றவர்கள். தற்போதைய இயங்குதளங்கள் யுனிகோட் எனும் எழுத்துருவைப் பயன்படுத்துபவை. கைபேசியில் தமிழில் தட்டச்சும் வசதி வந்துவிட்டாலும், கணினியைப் பயன்படுத்தும் பலரும் தமிழில் தட்டச்ச அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அத்தகையவர்கள் தொடரறா நிலை தமிழ் எழுதிகளைப் பயன்படுத்தலாம். இவற்றில், நாம் தமிழில் குறுஞ்செய்தி அனுப்பும் போது எப்படி தட்டச்சுகிறோமோ, அதே போல் தட்டச்சினால் போதும். உதாரணமாக ammaa என்று தட்டச்சினால் இவை அம்மா என்று மாற்றும். கொஞ்சம் பழகினால் போதும். மிக எளிய வழி இது. சில தமிழ் எழுதிகள்:
1. http://tamileditor.org/
2. http://kandupidi.com/editor/

6. தமிழ் இணையக்கல்விக் கழகம்:
http://www.tamilvu.org/
தமிழக அரசின் துணையுடன் உருவாக்கப்பட்ட இந்த வலைத்தளம், தமிழ் சார்ந்த சகல விடயங்களையும் இணையத்திலே பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள வலைத்தளம். இங்கு பழைய நூல்கள், சங்க இலக்கியம், தமிழ் வரலாறு, இலக்கணம், மின்னூலகம், தமிழ் சார்ந்த தகவல் தொழிநுட்பத் தகவல்கள் என்று பலதரப்பட்ட விடயங்களையும் அறிந்துகொள்ளலாம்.

7. நூலகம் வலைத்தளம்:
http://www.noslaham.org/
இலங்கைத்தமிழன் ஒவ்வொருவனும் அறிந்திருக்கவேண்டிய வலைத்தளம் இது. இலங்கைக்கே தனித்துவமான ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இதில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. கணினியிலோ, கைபேசியிலோ தரவிறக்கி அவற்றை வாசிக்கமுடியும். இவற்றைக் கணினியிலோ கைபேசியிலோ சேமித்து வைத்து, தேவையென்றால், புத்தகமாக அச்சிட்டும் படிக்கலாம். தன்னார்வ இலாப நோக்கற்ற அமைப்பான நூலகம் நிறுவனத்தால் இது பராமரிக்கப்படுகிறது. இதன் துணைப்பகுப்புகளில் ஒன்றான ஆவணகம் (www.aavanaham.org) ஈழத்தமிழர் தொடர்பான பல்வேறு விடயங்களை ஆவணப்படுத்தும்

தொடர்ச்சி பக்கம் - 22



# பழுகாமம் கிராமத்தின் கலகக்காரர் கண்டுமணி

## நம் தமிழ்க் கிராமங்கள் முற்போக்குச்சிந்தனையும் பரந்தமனப்பான்மை கொண்டனவாகவும் மாறவேண்டும் வளரவேண்டும்

மட்டக்களப்பில் எழுத்தாளர் வேலழகனை அறியாதார் இல்லை. பழுகாமத்தைச் சேர்ந்த 75 வயதைத் தாண்டிய அவர் படித்தது இரண்டாம் வகுப்புவரைதான். ஆனால் நிறைந்த அனுபவக் கல்வியைப் பெற்றவர். தனது கற்கும் ஆர்வத்தால் சுயமுயற்சியினால் வாசிக்கப் பழகி, நிறைந்த வாசகராகி, பின்னர் கவிஞர், எழுத்தாளர் எனவிரிந்து, சமூகசேவையாளராக மலர்ந்தவர். திருக்குறளை ஆழமாகப் பயின்று கிராமங்கள் தோறும் திருக்குறள் முன்னணிக் கழகங்கள் நிறுவ முயன்று வருபவர்.
இதுவரை 25 க்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். தம் நூல்களுக்குப் பரிசுகளும் பெற்றவர். அறிஞர், சீர்திருத்தவாதி, புரட்சிக்காரர். பெரியார், அண்ணா, கார்ல்மார்க்ஸ், சிந்தனைகளால் இளம் வயதில் ஈர்க்கப்பட்டவர். அண்மையில் அவர் ஒரு நூல் எழுதிவெளியிட்டார். நூலின்பெயர் சிந்தனைச் சிற்பி





கண்டுமணிப் பெரியார்

யார் இந்தக் கண்டுமணி?
-------------------------------
வேலழகன்போல பழுகாமம் எனும் கிராமத்தில் பிறந்தவர்தான் இந்தக் கண்டுமணி. வேலழகனுக்கு பல மடங்கு வயது மூத்தவர்.
கலகக்காரர், சீர்திருத்தவாதி. அவர் பெயரில் பழுகாமத்தில் ஒருபாடசாலை உண்டு. அப்பாடசாலையின் பெயர் கண்டுமணி மகாவித்தியாலயம்.
அக்கிராமத்தில் பலரை உருவாக்கிய பாடசாலை அது.
அக்கிராமத்தில் ஓர் பாடசாலை எழத் தனக்குரிமையான நிலத்தை வழங்கிய பரோபகாரி கண்டுமணி. இவரது இயற்பெயர் கிருஸ்ணபிள்ளை.
கண்டுமணி என்பது சுவாமி விபுலானந்தர் இவருக்கு இட்டபெயர்.
சிக்கலான ஒருபாட்டின் பொருளைக் கண்டுபிடித்தமையினால் இவரைச் சுவாமி விபுலானந்தர் கண்டுமணி கண்டுபிடித்த மணி என அழைத்தாராம்.
மட்டக்களப்பு அகஸ்தீன் ஆசிரிய கலசாலையில் ஆசிரியப்பயிற்சி பெற்று, ஆசிரியத் தொழில் புரிந்த இவர் ஒரு பண்டிதரும்கூட. முற்போக்குப்பண்டிதர்.
பழுகாமம் மிகப்பழமை வாய்ந்த ஒரு கிராமம். பழுகாமத்தில் இருக்கும் திரௌபதையம்மன் கோவிலும் கிருஸ்ணன் கோவிலும் அக்கிராமத்தின் பண்பாட்டம்சங்கள்.
கண்டுமணி இளமைக்காலத்தில் கிராமத்தில் ஒரு புரட்சிக்காரராக வாழ்ந்திருக்கிறார். சாதி பேதம் காட்டும் சமூக அநீதிக்கு எதிராக வாழ்நாள் முழுதும் போராடியிருக்கிறார்.
சுவாமி விபுலாநந்தரின் சீடனான இவர் சுவாமிகளது சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டவர், சுவாமிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் அருகிலிருந்த திருவேட்களக் கிராமத்திலிருந்த சேரிப்பகுத்திக்கு இரவு நேரங்களில் சென்று அங்கு வாழ்ந்த பிற்படுத்தப்பட்ட சமூகப்பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்டியிருக்கிறார்.
இதனால் சுவாமிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது.
தனது குருநாதராலும் அவரது சாதி எதிர்ப்புக் கருத்துக்களாலும் கவரப்பட்டு கண்டுமணி அவர்கள் தனது கிராமத்தில் பலரது எதிர்ப்புக்கு மத்தியில் 1930-40 களில் சமபந்திப்போசனம் நடத்தியிருக்கிறார்.
அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமனை அழைத்து வந்து கோவில் முன்றலில் பொதுஉடமைச் சமதர்மம் பற்றி உரையாற்ற வைத்திருக்கிறார்.
கிராமத்து இளைஞர்களுக்கு உடல்



வலிமை சேர்க்கும் உடற்பயிற்சிகள் அளிக்க ஒழுங்கு செய்திருக்கிறார்.
கோவில் வேட்டைத் திருவிழாவில் தானே பாத்திரம் தாங்கி நடித்திருக்கிறார்.
அருமையான பாடல்கள் எழுதியிருக்கிறார்.
இன்றும் அக்கிராமத் திரௌபதி அம்மன் கோவிலில் பாடப்படும் திரௌபதி அம்மன் காவியம் அவர் எழுதியது என்பது பலருக்குத் தெரியாது.
ஆற்றொழுக்குப் போன்ற தமிழ்நடை கொண்டது அது.
அதில் அருணகிரிநாதரின் சந்தச் சிறப்பையும், குமரகுருபரரின் சொல் வண்ணத்தையும் காணலாம்.
தமிழ் மக்கள் சமத்துவ சிந்தனையுடையோராய் மாறவேண்டும் என அரும்பாடு பட்டிருக்கிறார் கண்டுமணி. கிராமத்தின் அறிவுக்கண் திறந்தால் பிரிவினைகள் போய், அக்கிராம மக்கள் ஒன்றாகி மானுடகுலம் சமநீதி பெற்றதாக வாழ உதவுவார்கள் என எண்ணிக் கல்விக்கூடம் நிறுவ உழைத்திருக்கிறார்.
வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாக வாழ்ந்திருக்கிறார்.
இதனால் கவரப்பட்ட அக்கிராம முற்போக்கு இளைஞர்கள் அந்தப் பாடசாலைக்குக் கண்டுமணி வித்தியாலயம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.
இச்செயல்களால் அவர் கிராமத்தின் சில சனாதனிகளின் கோபத்திற்கும் உள்ளானார். அவர் இறந்தபோது அவர் மரணவீட்டுக்கு பறை அடிக்க, மரண கிருத்தியங்கள் செய்யவதற்கு தமக்கு ஊழியம் செய்த குடிமக்களைக் கிராமம் அனுமதிக்க இல்லையாம்.
இதனால் அக்கிராமத்து முற்போக்கு இளைஞர்கள் வெளியூரிலிருந்து பறை அறைவிப்போரை அழைத்து கண்டுமணியின் மரண கிருத்தியங்கள் நடத்தினார்களாம்.
புரட்சிக்காரனாக வாழ்ந்து புரட்சிக்காரனாக மடிந்தவர் கண்டுமணி.
இதேபோல அன்று கிராமத்தில் புரட்சிக்காரனாக வாழ்ந்த இன்னொருவரான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் சுவாமி விபுலந்தரின் சமூக நீதிகோரும் கருத்துக்களால் கவரப்பட்டுச் செயற்பட்டவரே.
மட்டக்களப்புக் கிராமங்கள் இத்தகைய கலகக்காரத் தமிழ் அறிஞர்களை அன்று கொண்டிருந்திருக்கிறது போலும்.
கண்டுமணியினது உருவச்சிலையை பாடசாலைக்குள் நிறுவ அரும்பாடுபட்டு, அவர் பற்றி ஒரு நூல் எழுத முயற்சி எடுத்து, அவர் வாழ்ந்த வீதிக்கு கண்டுமணி வீதி எனப் பெயரும் சூட்டபாடும்படிருக்கிறார் வேலழகன்.
கோவில் சடங்குகளுக்குள்ளும் சாதி, குடிப்பிரிவினைகளுக்குள்ளும் சிக்கிக்கிடக்கும் சில கிராமத்து தமிழ் இளம்தலைமுறை கண்டுமணி போன்றோரின் செயல்களை அறிவது நல்லது என அவர் நினைத்திருக்கிறார்.
அப்பெரியாரின் சிலை திறப்புவிழாவுக்கு என்னை வேலழகன் அழைத்திருந்தார்.
அவரது நூலை வெளியிட்டு உரையாற்றும் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்திருந்தார்.
நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்தோர் அனைவருக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.
நூல் வெளியிட்டுப் பேசிய நான் கண்டுமணியின் வாழ்க்கையை விபரித்து அவரது குணாதிசயத்தையும் சமூகப்பணியையும் கூறி தமிழர் சமூகம் சிறந்த பண்பாடுடைய சமூகமாக வாழ அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் எதிர்கொண்ட சவால்களையும் கூறி என் பேச்சை இப்படி முடித்தேன்.
“இலங்கை மக்கள் விடுதலைக்கு சவாலாக இருப்பது இனப்பிரிவினையாகும், தமிழ் மக்களின் விடுதலைக்குச் சவாலாக இருப்பது சாதிப் பிரிவினையாகும். இரண்டையும் நாம் வெல்ல வேண்டும்”




வெள்ளிமலையை அங்கு நான் சந்தித்தேன். வெள்ளிமலை என அழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை அவர்கள் அக்கிராமத்தைச் சேர்ந்தவர் கண்டுமணி போல வேலழகன் போல



சமூக சிந்தனைகள் கொண்டவர். அவரே அன்றைய நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். தனக்கு அளிக்கப்பட்ட தொகையில் அவர் அக்கிராமத்தில் ஓர் அழகான கலை மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறார். என்னை அழைத்துச் சென்று அதன் நிர்மாண வேலைகளைக் காட்டினார். கலாநிலையங்கள் கிராமங்கள் தோறும் தோன்ற வேண்டும்.
கலாநிலையங்கள் மனித மனங்களை வளப்படுதுபவை. தமிழ்க்கிராமங்கள் தோறும் கலா நிலையங்கள் தோன்றவேண்டும்.

# திரைப்படங்களில் நாம் வன்முறையை ரசிக்கப் பழகியது புதிய விடயமல்ல

## எம் இலக்கியங்களும் அதனையே பேசின

யோகநாதன் ஜகேன்





ஊடகங்கள் வன்முறையின் களமாக மாறிவருகின்றன இது இப்படியே போனால் வாழ்க்கைமுறை பெரும் சிக்கலாகும் எனச் சான்றோர் முதல் சாமானியர் வரை கூறுவதைக் கெட்டிருக்கின்றோம். குறிப்பாக திரைப்படங்களையே அதிகமாக வன்முறை சார்ந்து பேசுகின்றோம். பேசுவது உண்மையும் கூட ஆனால் திரைப்படங்கள் வன்முறையைக் காண்பிப்பது திரைப்படம் உருவாக்குபவர்களின் தவறா? அல்லது பார்வையாளர் தவறா? அல்லது இவை மரபுவழி வந்த ஊடகப்பழக்கமா? என்ற வினாக்களுக்கான விடைகளை அலசி பார்த்தோமானால் உண்மை தெளிவாகும்.

எந்த ஒரு நடவடிக்கைக்கும் நீண்ட மரபுத் தொடர்ச்சி இருக்கும் அவ்வாறு இவ்வன்முறை படிந்த சினிமா ஊடகத்திற்கான வன்முறை அடிப்படை எங்கிருந்து தொடங்குகின்றது.

தமிழ்ச் சமூக வரலாறு சங்ககாலம் தொடக்கம் நிலத்தையும் அதிகாரத்தையும் கைக்குள் போட்டுக்கொள்வது தொடர்பான பிரதான பேசுபொருளை கொண்டே கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. போரும் வீரமும் அடிப்படைகளாகி காதல், பக்திநெறி என வாழ்க்கை கொண்டாடப்பட்டுள்ளன. இவ்வாறான தமிழ் சமூகத்தின் வாழ்க்கை முறையானது கல்விச் சமூகத்தினால் நிலையானது, உரிமையுடையது என ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் இவை தொடர்ச்சியான மனித வாழ்க்கை முறையாக மாறிவிட்டன. இத்தன்மை எல்லாவற்றிலும் பிரதிபலிப்பதனால் ஊடகங்களிலும் இவை செல்வாக்கு செலுத்தி உணர்ச்சி விளிம்பில் சமூகத்தை வைத்திருக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

குறிப்பிட்ட ஓரிரு உணர்வு நிலையை மட்டும் பிரதானப்படுத்துவதனால் பண்பாட்டுக் கூறுகளும், இயல்பான வாழ்க்கை முறையும் கொச்சைப்படுத்தப்படுகின்றன. இதன் வளர்ச்சியாய் உடல்கள், இரத்தம், சதை போன்றவற்றை வக்கிரமாகவும் கொடூரமாகவும் கையாளப்பட தூண்டி மனித உறவுகளை பெரும் பாதாளத்தில் தள்ளும் நிலையை அது ஏற்படுத்தியுள்ளது.

இவற்றுக்குள்ளால் காலம் காலமாக வன்முறைகளை மனமார்ந்து ரசிக்கப் பழகியவர்களாக நாம் எங்களை ஆக்கிக் கொள்கின்றோம். எமது கூத்தப் பாரம்பரியத்தில் பேசுகின்றது பிரதான கதைகள் போர், வதம், வெற்றி என்பவற்றையே விரும்பிப் பேசுவனவாகவும், அதனையும் நாம் ரசிக்கவும் பழகிவிட்டோம்.

ஆயிரம் யானைகளைக் கொன்று ரத்த ஆறு ஓடிய “கலிங்கத்துப்பரணி“ யை சிறந்த இலக்கியமாக போற்றுகின்றோம்.



அரசியல் நீதி பிழைத்தமைக்காக இடது முலையைத் திருகி மதுரை நகரை எரித்து கண்ணகியின் கதையை முன்னிலைப்படுத்துகிறோம். ஆணாகப் பிறந்தால் இரத்தக்காயம் (விழுப்புண்) கண்டிப்பாக இருக்க வேண்டும். அதுவே ஆண்மகனின் பெறுபேறு. குழந்தையில் இறந்தாலும் ஆண்மகனுக்கு மார்பில் நெல்லுமணியினால் கீறி புதைக்கும் மரபு வீரப்பண்பாக மதிக்கப்பட்டது. இவை எல்லாம் நமக்கு இலக்கியம் கூறிய வன்முறை பண்பாட்டு விழுமியங்களாகும்.

முன்னோர்களுக்கான ஊடகமாக இலக்கியங்கள், நாடகங்கள், கூத்துக்கள், பாடல்கள் அனைத்திலுமே வீரம் என்ற பெயரில் வன்முறை இறுக்கமாக பிணைந்துள்ளது. பக்திநெறி என்று கோயிலுக்குள் போனால் வில், அம்பு, கேடயம், வாள், துவம்சம், வதம் என வன்முறை தூண்டப்படுகின்றது.

திரைப்படங்களின் பிரதான நோக்கம் உணர்வு நிலையைக் கொந்தளிக்க வைத்து பார்வைச் சமூகத்தை அல்லது இரசனை சமூகத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது.

இன்றைய நவநாகரீக உலகில் நம்மில் பெரும்பாலானோருக்கு குறிப்பாக இளைஞர்களுக்குப் பொறுமையும், சகிப்புத்தன்மையும் மிகக்குறைவு. நினைத்தது நினைத்தபடி நடக்க வேண்டும். திட்டமிட்டது திட்டமிட்டபடி செயற்பட வேண்டும். அதில் சிறு மாற்றம் ஏற்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் அவர்களிடத்தில் காணாமல் போயுள்ளது. எடுத்த மாத்திரத்தில் அற்ப விடயங்களுக்காக வன்முறையில் இறங்குகின்றனர். திரையில் தோன்றும் கதாநாயகர்களைபோன்று தாமும் எல்லா ஆற்றலும், திறமையும், சாணக்கியமும் பெற்றிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இளைஞர்களிடத்தில் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

திரைப்படத்தில் தோன்றுகின்ற நாயகர்களை முன்னுதாரணமாகக் கொள்கின்றனர். நாயகன் வில்லன்களை போட்டு அடிப்பதற்கும் கத்தியால் குத்துவதற்கும் கொலை செய்வதற்கும் திரைக் கதைகளில் காரணங்கள் கூறப்பட்டு, வன்முறைகள் சரியானவை என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டிருக்கும். இவற்றின் உச்ச விளைவே நாயக வழிபாடு, விஜய், அஜித், ரஜனி, கமல், சூர்யா,விகக்ரம் என முன்னணி அக்ஷன் ஹீரோக்களின் புதிய திரைப்பட வெளியீடுகளின்போது உருவப்படங்கள் வானளாவிய அளவில் போஸ்ரர்களாக நிறுத்தப்பட்டு பாலாபிஷேகம் நிகழ்த்தப்படும் இதை திரையரங்கு வாயிலில் ஒருவேளை சாப்பாட்டிற்கு அல்லாடும் பிச்சசைக்காரர்களும் பார்த்து அகம்கிழ்கின்ற ஓர் மந்தமான சிந்தனை முடக்கம் சமூகத்தை ஆட்கொண்டுள்ளது.



இலக்கியங்கள் முதல் திரைப்படங்கள், பாடல்கள், கவிதைகள், என எல்லாவற்றிலும் வன்முறை கலந்திருக்கின்றது. அண்மையில் ஒரு கவிதை படித்திருந்தேன்.

“வீணையில் இருந்து அறுகின்ற
தந்தியைப் போல

என் காதலியை யாராவது...

மென்மையாக கொல்லுங்களேன்“;

என்ற கவிதை முகத்திரை என்ற திரைப்படத்தில் பெருமையாக பேசப்பட்டிருந்தது. கொல்லுதல் என்பது எவ்வளவு அழகாக கூறப்பட்டிருக்கின்றது. மனம் விரும்பும் வண்ணம் வன்முறை செய்தல் என்பது வன்முறையை அட்டகாசமான இன்பத்தை வழங்கும் போதையாக இனம் காட்டுகின்றது.

தனி கதாநாயக மரபுமுறை திரைப்பட உலகை விட்டு போகாதவரை கற்பனை கடந்த வன்முறைச்சிந்தனை என்பவை திரைப்படங்களை விட்டகலாது.

இளைஞர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் திரைப்படங்கள் பற்றிய விமர்சனப் பார்வை ஒவ்வொருவரிடத்திலும் ஏற்பட வேண்டும். பொழுது போக்கிற்காக உருவான திரைப்படம் சம காலத்தில் சமூக சிந்தனை மாற்றங்களை கிளப்பியுள்ளது. சிந்தனை மாற்றம் என்பது வன்முறை பக்கங்களை திறந்து விட்டிருப்பதை அண்மை திரைப்படங்களில் நாம் கண்டுணர முடியும். கத்தி, கேடயம், துப்பாக்கி, பொல்லாதவன், படிக்காதவன், அஞ்சான் போன்ற படங்களின் பெயர்களும் இவர்கள் பால் உள்ள ஈர்ப்பு சிந்தனைகளும் மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் சமூக எண்ணக்கருவும் மாற்றமடைய வாய்ப்புள்ளது.

**மனம் விரும்பும் வண்ணம் வன்முறை செய்தல் என்பது வன்முறையை அட்டகாசமான இன்பத்தை வழங்கும் போதையாக இனம் காட்டுகின்றது.**



## நம்பிக்கை ஒளி அமைப்பின் அனுசரணையில் உருவான கட்டிடம்

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது 2009 ஆம் ஆண்டில் நிர்மூலமான சாளம்பச்சேனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் கட்டிடம், லண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா. உதயகுமார், கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் ராஜ்பாபு மற்றும் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி சா. அருள்மொழி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

மேலும் பல அரச அதிகாரிகளும் புணானை பொலிஸ் நிலைய அதிகாரியும், உயிரிழை அமைப்பின் மூத்த உறுப்பினரான ஒளியனும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## சோல்பரி அறிக்கையிலிருந்து இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க குறிப்புகள்.

## தமிழரின் மூளையும் – முயற்சியும் பற்றி பிரபுவின் கருத்து




இலங்கைத் தமிழர் இலங்கை மண்ணில் பிரிக்க முடியாத சமூகத்தினராக இன்று வாழுகின்றனர். அன்றியும் இலங்கை வாழ்க்கையில் பிரிட்டிஷ் சகாப்தம் ஆரம்பித்ததிலிருந்து இலங்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இலங்கைத் தமிழர் முக்கிய பங்கெடுத்து வருகின்றார்கள். இவர்களிற் பெரும்பான்மையினர் விவசாயத்தில் ஈடுபட்டவர்களாயினும் - விகிதாசாரத்தில் மிகக்குறைந்த தொகையினராயிருந்த போதிலும் கற்றுத் தேர்ந்த பெரும் பதவிகளிலும் - அரசாங்க சேவையிலும் அரசாங்க மந்திராலோசனைச் சபையிலும் இவர்கள் பதவி வகித்துள்ளார்கள்.

இலங்கையின் நல்லாட்சிக்குத் தமிழரின் மூளையும் முயற்சியும் எவ்வளவு உபயோகமாயிருந்தனவோ – வருங்காலத்திலும் இன்றியமையாதனவாயிருக்கும் என்ற உண்மையை நானும் எனக்கு முன்பிருந்த உத்தியோகத்தரும் என்றுமே உணர்ந்திருந்தோம்.

(1933ம் ஆண்டு முதல் 1937ம் ஆண்டு வரை இலங்கைத் தேசாதிபதியாயிருந்த சேர். எட்வர்ட் ஸ்டப்ஸ் இலங்கைத் தமிழரைப் பற்றி மேற்குறிப்பிட்டபடி அபிப்பிராயம் கூறியுள்ளார்.

(சோல்பரி அரசியற் சீர்திருத்தம் விசார-ணைச் சபையின் அறிக்கை அத்தியாயம் VII-121ம் பந்தி)

### மதியீனமானவை

---

எங்கள் சிபார்சுகளுக்குச் சிறுபான்மையினர் காண்பிக்கக் கூடிய எதிர்பார்ப்புகளைப் பற்றியும் நாங்கள் இவ்வறிக்கை முழுவதிலும் மனதிலிருத்திக் கொண்டுதான் எழு-துகிறோம். எவ்வித சந்தேகத்தையோ – பாரபட்சத்தையோ தரக்கூடியதாகச் சிங்கள பெரும்பான்மையினர் நடக்காது சாவதானமாயிருப்பது நன்மை பயக்கும். இச்சந்தர்ப்பத்தில் அரசாங்க சபையிலும் - வெளியேயும் சிங்கள அங்கத்தவர்கள் சிங்களச் சமூகத்தின் உறுதிப்பாடு பற்றியும் - இலங்கைத் தமிழரை அடக்கப் பயமுறுத்தியும் செய்த சில பிரசங்கங்கள் மகா மதியீனமானவை என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஆயினும் சிறு பான்மைச் சமூகத்தவரின் - திருப்தியான மனப்பான்மை – அவர்களுக்கு மாத்திரமல்ல – இலங்கையின் பொது நன்மைக்கே அவசியமென்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதென்று நாங்கள் நம்புகின்றோம். இல்லையெனில் - காலெ-கதியில் நாங்கள் வகுக்கும் எத்தகைய பாதுகாப்பும் நிஷ்பிரயோசனமாயிடும்.

(சோல்பரி அரசியற் சீர்திருத்தம் விசார-ணைச் சபையின் அறிக்கை முடிவுரை 178ம் பக்கம்)

### மாகாண சபை

---

இலங்கையில் ஸ்தலஸ்தாபன ஆட்சியை வளர்ப்பதற்காக மாகாண சபைகள் நிறுவுவதாக ஒரு நோக்கமுண்டென அறிகிறோம். இப்பொழுது மத்திய அரசாங்கத்தால் நடாத்தப்படும் அலுவல்கள் யாவும் இனிமேல் இம் மாகாண சபையினால் தத்தம் எல்லைக்குள் நடாத்தப்படும். இவ்விதமான ஆட்சி முறையில் கண்டி மாகாணங்கள் இழந்த தம் செல்வாக்குச் செழிப்பு யாவையும் பெறப் புணர்நிர்மாணத் திட்டங்கள் ஆக்கிக் கொள்வதற்கு ஏற்ற வசதியான தருணங்கள் கிடைக்கும். இதற்கேற்ற பொருளுதவி கொடுக்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் இத்தகைய மா-காண சபைகட்குப் பணம் கொடுக்கும் முறையில் பல உதவிகள் செய்யுமென்று நாம் நம்புகின்றோம்.

(சோல்-அர-சீர்-விசா-சபை-அறிக்கை 184ம் பந்தி)

### சமஷ்டி ஆட்சி

சிங்களவரால் தோற்றுவிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி ஆலோசனையில் தமிழ் நாடு

கண்டியர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனக் கொண்டுவந்த ஆலோசனையை நாம் தயக்கமில்லாமல் நிராகரிக்கிறோம் - இலங்கையைக் கீழ் நாடு, கண்டி நாடு, தமிழ் நாடு என்று மூன்று சுதந்திர அரசுகளாகப் பிரித்து- இவை-ஒரு மத்திய சமஷ்டியின் கீழிருக்க வேண்டும் என்பதே அந்த ஆலோசனை.

(சோல்-அர-சீர்-விசா-சபை-அறிக்கை 186ம் பந்தி)

### சர்வாதிகாரம்

---

பிரபல அரசியலறிஞராகிய ஜோன் ஸ்டுவர்ட்மில் என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

ஒரு சபையில் பெரும்பான்மை வகுப்பினர் நிரந்தரப் பெரும்பான்மையினராயிருந்து தங்கள் நடத்தைக்கும் - போக்குக்கும் கட்டுப்பாடு இல்லையென்று கண்டால் - சர்வாதிகாரமும் - புறம்போக்குள்ளவர்களாகவே இருப்பார்கள்.

(சோல்-அர-சீர்-விசா-சபை-அறிக்கை 298ம் பந்தி)

மேலே கூறப்பட்டவை கொஞ்சம் கடுமையானவையாக தமிழில் இருந்தாலும் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு சோல்பரி அறிக்கை கூறிய தீர்வுகள் இவை.

### அலுவலக வேலைவாய்ப்பு

தேசிய ரீதியாக நன்கு அறிமுகமான முன்னணி நிறுவனத்தின் வெள்ளவத்தை பிராந்தியத்தில் வேலை வாய்ப்புக்கள். தலைமைத்துவ தகுதியுடன் துடிப்பான இளைஞர், யுவதிகள், இல்லத்தரசிகள் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0778651993

### அலுவலக வேலைவாய்ப்பு

முகாமையாளர், உதவி முகாமையாளர், குழு முகாமையாளர் மற்றும் முகாமைத்துவ பயிற்சியாளர் போன்ற வெற்றிடங்கள் புதிதாக விஸ்தரிக்கப்படவுள்ள. வெள்ளவத்தை கிளைக்கு தேவைப்படுகின்றனர். இல்லத்தரசிகளும் விரும்பத்தக்கது. கல்வித் தகைமை அவசியம். தொடர்புகளுக்கு 0759555772

### பொது வேலைவாய்ப்பு

அத்திடியவில் அமைந்துள்ள ஏற்றுமதி சம்பந்தப்பட்ட பிரபல அச்சக நிறுவனத்தில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உண்டு. சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக மாத வருமானம் SORDZ, SORSZ, மைன்டர் 60000 ரூபாய், உதவி மைன்டர் 45000 ரூபாய், முழுசுனு மைன்டர் 40000 ரூபாய், உதவி மைன்டர் 35000 ரூபாய், CY Linder மைன்டர் 45000 ரூபாய், சகலவிதமான கையுதவியாளர்கள் (ஆண்/பெண்) 30000 ரூபாய் (அனுபவம் உள்ள/இல்லாத) மேலும் அரசாங்க அங்கிகாரம் பெற்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி வழங்கப்படும். தொடர்புகளுக்கு 144.ீ.டீ16 அத்திடிய வீதி, தெகிவளை. வேலை நேரம் 24 மணி நேரம். 0112737289, 0717563348

## மீண்டும் சந்திக்கும் வரை...

அந்த அளவுக்கு இராஜகுமாரன் என்ற புனைபெயரிலும், வேறு பெயர்களிலும் பத்மநாதன் அங்கிள் எழுதியவையும் வாசகர்களை கவர்ந்திருந்தன.

இலங்கை வானொலியில் இவர் நடத்தும் சிறுவர் நிகழ்ச்சிகளை அம்பாறையில் இருந்து ஒலிபரப்பும் ஒலிபரப்பியின் ஊடாக மட்டக்களப்பில் இருந்து கேட்டு வளர்ந்தவர்களில் நானும் ஒருவன். அன்று முதல் அவர் வாழ்ந்த நாட்கள் வரை இந்தச் சிறுவர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் ( எனது மனைவி உட்பட) அவரை மாமா... மாமா... என்று செல்லமாக அழைத்ததை நான் கேட்டிருக்கிறேன். அவருடனான அவர்க-ளது பிணைப்பு எனக்கு அந்த வய-தில் ஒருவகை பொறாமையை தந்தது. அதனாலேயே அவரை நான் மாமா என்று அழைக்காமல், அங்கிள் என்று அழைத்து வந்தேன். அதுவே பழகியும் போய்விட்டது.

இலங்கைத் திருநாட்டின் ஒரு கலை அரங்கம் மட்டக்களப்பு. அங்கு அரங்கேறியவர்களில் அவரும் ஒருவர். அந்த மண் அண்மைக் காலம் வரை சந்தித்த இழப்புக்கள் ஏராளம். அது இழந்தவர்களில் அவரும் அடங்கும்.

என்னைப் பொறுத்தவரை எனது மிக இளவயதில் எனது தந்தையை இழந்தவன் நான். அவரது நண்பர்களில் என்னோடு பழகிய, எனக்கு ஆதரவாக இருந்தவர்கள் மிகச் சிலரே. அவர்களில் முக்கியமானவர் பத்மநாதன் அங்கிள்.

நான் எனது தந்தையின் இறுதிச் சடங்குக்கு போகமுடியவில்லை. எனது தாய் மாமனாரின் இறுதிச் சடங்குக்கும் போக முடியவில்லை. பத்மநாதன் அங்கிள் அந்தப் பட்டியலில் நீங்களும் சேர்ந்துவிட்டீர்கள். பாசத்தை சொல்லிக் கொடுத்த தந்தை, கௌரவத்தை சொல்லிக் கொடுத்த மாமனாரின் வர-ிசையில் நீங்களும் இணைந்துவிட்டீர்கள்.

கொழும்பில் இருந்து பிபிசியில் நான் செய்திகளை முந்திக்கொண்டு சொன்ன போதெல்லாம், தொலைபேசியில் நீங்கள் என்னை பாராட்டத் தவறியதில்லை. ஆனால், நீங்கள் உயிரோடு இருந்தவரை உங்களோடு இடக்கு முடக்காகவும், துடுக்குத் தனத்தோடும்தான் நான் பேசி வந்திருக்கிறேன். எந்த விமர்சனத்தையும் சிரித்த முகத்தோடு நீங்கள் ஏற்பது எனக்கு அப்படிப் பேச வசதியாகவும் இருந்தது.

நீங்கள் மருத்துவமனையில் இருந்தபோது உங்களோடு முதல் தடவை தணிவாக, பரிவாக பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றியது, ஆனால், அதனைக் கேட்கக்கூடிய நிலையில் நீங்கள் இருக்கவில்லை. இறுதிவரை உங்களோடு என்னால் அப்படி பேசமுடியாமலேயே போய்விட்டது. இது எனது இறுதிவரை என்னுள் ஒரு ஏக்கமாகவே தொடரப் போகிறது.

சரி என்ன செய்வது, பரவாயில்லை பல்துறைக் கலைஞரே, தொடர்பூடக வாழ்க்கையில் இதுவெல்லாம் சகஜமோ? ஆகவே வழமைபோல மீண்டும் சந்திக்கும்வரை தற்போதைக்கு விடைபெ-றுவோம்.



# சாமத்தியச் சடங்கும் அதனது சமூகத்தளமும் 02

இன்று தமிழ் சமூகத்தில் ஆகமம் சாராக் கோயில்களிலும் பொது வாழ்வியலிலும் பேணப்படும் சடங்குகள் புராதன வாழ்வின் எச்சங்களாக இருப்பதை மானிடவியலா-ளர்களும் சமூகவியலாளர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். அந்தவகையில் இன்றைய சாமத்தியச் சடங்கு எனும் எச்சம் அன்று எவ்வாறான சமூகச் செயற்பாட்டினுடைய தொடர்ச்சியாக காணப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளுதல் அசியமாகின்றது.

வேட்டையாடல் சமூக நிலையில் மிருகத்துடன் போராடவேண்டியிருந்த மனிதன் விவசாய சமூகநிலைக்கு மாறுகின்றபோது இயற்கையுடன் போராடவேண்டியவனாகின்றான். வேட்டைக்கு உடல் வலிமையும் வேட்டையாடல் திறனுமே தேவையாக



இருந்தது. இத்தேவைக்கேற்ற சடங்குகளே வேட்டைச் சமூகத்தில் நிகழ்த்தப்படடன. ஆனால் விவசாயச் சமூகத்துக்கு மாறிய போது வேட்டைக்காலச் சமூகச் சடங்குகள் பயனற்றுப் போயின.

விவசாயச் சமூகநிலையில் தன்னைவிட புறச் சக்திகளை சார்ந்திருக்கவேண்டியவனானான். மழை, வெயில், வறட்சி, மண்வளம், செழிப்பு, நோய்த்தாக்கங்கள், விலங்குகளிடமிருந்து பாதுகாத்தல், சிறந்த அறுவடை என்பனவெல்லாம் புறக்காரணிகளாக தொழிற்பட்டன. இவற்றை தன்வயப்படுத்தி தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இவற்றுக்கேற்ற சடங்குகளை உருவாக்கினான்.

“ஆநிரைகளை மேயப்பது அவற்றிற்கு உணவு அளிப்பது, அவற்றை விருத்தி செய்வது ஆகிய தொழில்களைவிட விதைப்பு, உழவு, அறுவடை போன்ற தொழில்கள் தாமதமாக இடம்பெறுபவை, கடினமானவை, உறுதியற்றவை, இதற்குப் பொறுமை, தொலைநோக்கு, நம்பிக்கை ஆகியன வேண்டும்.

ஆரம்பகால விவசாயிகளுக்கு இது ஏன் அல்லது எவ்வாறு என்று தெரியாது. விதைப்பதிலிருந்து அறுப்பு வரைக்கும் உள்ள செயல்கள் அவர்களுக்கு மர்மமாகவே இருந்தன. மேலும் பின்தங்கிய உற்பத்திமுறை இடம்பெற்றிருந்தது. எனவே வெற்றி கிடைப்பது என்பது உறுதியற்று இருந்தது. ஆகையினால் இதற்கு பொ-றுமை, தொலைநோக்கு, நம்பிக்கை ஆகியன தேவைப்பட்டன. (மேற்கோள், சட்டோபாத்யாயா தேவி பிரசாத், 2010, பக் - 356 )

விவசாய சமூகத்தில் இந்தத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்பவளாக பெண் கருதப்பட்டாள். இதற்கான காரணம் பற்றி பட்டாச்சார்யா பின்வருமாறு விளக்குகின்றார். “தங்கள் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் தங்களைச் சுற்றியுள்ள பொருள்களை அணுகி வாழ்க்கை குறித்த ஒரு நடைமுறைத் தத்துவத்தைப் பழங்கால மக்கள் உருவாக்கினார்கள். இம் முயற்சியில் அவர்களுக்குக் கிடைத்த ஒரே விதியாக “ஒப்புமை“ அல்லது “ஒத்திசைவு“ விதி (Principle of analogy) அமைந்தது. வேறுபட்ட பொருள்களுக்கிடையில் காணப்படும் சில பண்புக்கூறுகளின் ஒத்த தன்மையினை அடிப்படையாகக் கொண்டே இவ்விதி உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படையில்தான் இயற்கை உற்பத்தியினை மனித உற்பத்தியின் பொருளிலே கண்டார்கள். இதன்படி மானுடத்தாயின் வடிவமாக பூமித்தாய் அமைந்தாள்.

ஒப்புமை விதியின் அடிப்படையில் நிலத்தின் செயற்பாடும் பெண்ணின் செயற்பாடும் இவ்வாறு பொருத்திப் பார்க்கப்பட்டது. குழந்தைப்பேறு என்ற செழிப்பினைப் பெண் வெளிப்படுத்துகிறாள். நிலம் பயிர்களின் செழிப்பிற்கு மூலாதாரமாய் அமைகிறது. எனவே, இருவகைச் செழிப்பின் சின்னமாகவும் பெண் கருதப்பட்டாள். இதன் விளைவாக மானிடச் செழிப்பைத் தோற்றுவிக்கும் பெண், தாவரச் செழிப்பை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவளாகவும் கருதப்பட்டாள்“ (மேற்கோள்,சிவசுப்பிரமணியன். ஆ., 2010,பக்.56)

பெண்களின் கருவளமும் இயற்கையின் வளமும் சமமானவையாக நோக்கப்பட்டன. அதாவது இயற்கையின் விருத்தி பெண்

**சிவரட்ணம் சுந்தரப்பிள்ளை**

இனவிருத்திக்குச் சமமாகப் பார்க்கப்படது. ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதைப் போல ஒரு பெண்ணால் வேளாண்மை செய்து அதன் விளைச்சலைப் பெற்றுத்தர முடியும் என நம்பப்பட்டது.

“வேளான் மந்திரத்தோடு பெண்கள் மட்டுமே தொடர்புடையவர்கள் என்னும் பொதுவான கருத்துநிலையிலிருந்து தொடங்குவோம். பிரிபால்ட் இதனை சுருக்கமாகக் கூறுகிறார்.

“நிலங்களைப்பயிரிடுவதற்கு இயல்பாகவே பெண்களுக்குத் தனித்திறமையுண்டு என்னும் வரையறைக்குள் அவற்றைச் செழிப்பிக்கச் செய்யவேண்டிய நோக்கத்துடன் மந்திரம் சார்ந்த சடங்குகள் செய்யப்பட்டன“

ஏராளமான தகவல்களின் அடிப்படையில் இதனை விவாதிக்கிறார். நாம் ஒரு சில உதாரணங்களைத் தருவோம் சியரோ லியோன் என்ற இடத்திலுள்ள ரருபா பெண்கள் குழுவின் தலையாய வேலை வயலில் தெளிப்பதற்கான மருந்து அல்லது மந்திர வசியத்தைத் தயார் செய்வது ஆகும்; இது செழிப்பைத் தருகிறது. செயன்னஸ்களின் நடனம் பற்றி அவர்கள் கூறுகிறார்கள். இளம், நடுத்தர வயதுப் பெண்கள் வட்டமாக நின்று நடனமா-டினர். இந்த நடனத்துக்குத் தலைமை தாங்கிய பெண் தானியத்தின் புனிதமான கதிர் ஒன்றை கம்பில் கட்டி காதிலிருந்த துளையில் செருகி இருந்தாள். சி-யோக்ஸ் மக்களிடையே ஒவ்வொரு வசந்த காலத்திலும் நிலங்களின் வளமையை உறுதி செய்யும் ஏராளமான சடங்குகளைப் பெண்கள் செய்தனர்.“ (மேற்கோள், மேலது பக் 357-258)

ஓரினகோ இந்தியர்கள், அவர்கள் வீட்டுப் பெண்களை, கொளுத்தும் வெயிலில், குழந்தைகளை மார்பில் அணைத்தவாறு விதை விதைப்பதற்கு அனுப்புவதை ஒரு கத்தோலிக்கச் சாமியார் கண்டித்தார். அதற்கு அங்குள்ள ஆண்கள் பதிலளித்தார்கள். “அருட்தந்தையே, இவை உங்களுக்குப் புரியா, ஆகையினால் நீங்கள் சினமடைகிறீர்கள். பெண்கள்தாம் குழந்தைகளைச் சுமப்பவர்கள். நாங்கள் அல்ல. பெண்கள் விதைக்கும் போது சோளக்கதிர் இரண்டு, நான்காகிறது. யுக்காப்பயிர் ஒரு கூடை நிறையக் கிடைக்கிறது. இதே போன்று எல்லாமே பல்கிப் பெருகுகின்றன. இது ஏன்? ஏனென்றால் பெண்களுக்குத்தான் பிள்ளை பெறத் தெரியும். அவர்களுக்கு விதையை அதிகரிக்கத் தெரியும். அவர்களே விதைக்கட்டும் அவர்களுக்குத் தெரிந்தது எங்களுக்குத் தெரியாது“ மேலது, பக்.374)

விவசாய சமூகத்தில் இரண்டு வித உற்பத்திகளே பிரதானம் பெற்றிருந்தன ஒன்று, உணவு உற்பத்தி, இரண்டு, சந்ததி உற்பத்தி இவை இரண்டுக்கும் அடிப்படையாக பெண் இருந்தாள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

“இருவகைச் செழிப்பின் சின்னமாகவும் பெண் கருதப்பட்டமையாலேயே செழிப்புத் தெய்வங்களாகப் பெண் தெய்வங்கள் அமைந்து தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்ந்தது. அத்துடன் குழந்தை உற்பத்தியுடன் தொடர்புடைய பெண்குறியும் கருப்பையும்



செழிப்பின் குறியீடாகவும் அமைந்தன. இதன் விளைவாக பெண்குறி வழிபாடும் கருப்பையின் குறியீடான பூரணகடா (பூரண கும்பம்) வழிபாடும் தோன்றின.” (சிவசுப்பிரமணியன்.ஆ., 2010,பக்.57)

மனித இனவிருத்தி பெண்களின் மார்பகங்களில் ஆரம்பித்து வயிற்றை அடைந்து பிள்ளையைப் பெறுவதாக புராதன மனிதன் நம்பியிருக்க வேண்டும் இதன் காரணத்தினால் கற்காலத்து சிறிய கற்சிற்பங்களில் பருத்த மார்பும் வயிறும் கொண்டவர்களாக பெண்ணுருவங்கள் படைக்கப்பட்டன. இந்தக் கற்சிற்பங்களைப் படைத்த மனிதனுக்கு இவை கலை என்றோ அல்லது அவற்றின் குறியீட்டுப்பெறுமானங்கள் தொடர்பாகவோ எவ்வித உணர்வும் இருந்திருக்காது. அவை அவனுடைய சடங்குத் தேவையினை பூர்த்தி செய்யும் பெண்தெய்வங்களாக படைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப் படைத்தலில் அவன் தனது உலகியல் நோக்கினை பதிவுசெய்துள்ளான். இவை அவனுடைய வளத்தெய்வங்களாகும்.

“ஆனால் மனித இன விருத்தி பற்றிய இத்தகைய புரிதல் கட்டத்திலேயே மனிதகுலம் நின்றுவிடவில்லை. பெண் பிறப்புறுப்பு இதில் பெறும் பங்கு பற்றி அறிந்து கொள்ளும் நிலைக்கு மனிதன் முன்னேறினான். இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்டத்தில் முக்கியத்துவம் மார்பகங்களில் இருந்து பெண்ணின் பிறப்புறுப்பிற்கு மாறியது. பண்டைக்காலத்து பெண்தெய்வங்களின் பிரபலமான சிறு சிலைகளிலிருந்து இது தெரியவருகிறது.



# உங்களுக்குத் தெரியுமா?

1) மின்மினிப்பூச்சியின் வாலில் ஒளி(வெளிச்சம்) தெரிவது ஏன்?
*பொஸ்பரஸ் இருப்பதால்*

2) தேனீக்கள் தம் கூடுகளை எதனால் கட்டுகின்றன?
*தம் உடம்பில் இருந்து வெளிவரும் சுரப்பி மூலம் பெறும் மெழுகால்.*

3) பிராணிகளில் அதிக காலம் வாழக்கூடியது எது?
*ஆமை (350 ஆண்டுகள்)*

4) மிகத் தடித்த தோல் உள்ள பிராணி எது?
*திமிங்கலம்.*

5) மிகவும் நச்சுத் தன்மை உள்ள பூச்சி எது?
*கரும் சீதனைச் சிலந்தி*

6) நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் எதிலிருந்து பெறப்படுகின்றது?
*பன்றி, பசு என்பவற்றின் உடலில் இருந்து.*

7) கழுதைப்பால் எந்நோய்க்கு உகந்தது?
*கசம்*

8) நண்டிற்கு பற்கள் எங்கே உள்ளன?
*அதன் வயிற்றில்*

9) பந்தயக் குதிரை ஒரு பாய்ச்சலில் எத்தனை அடி தூரம் தாண்டும்?
*30அடி*

10) அப்பிள் பழம் தண்ணீரில் மிதப்பதன் காரணம் என்ன?
*அதில் 25% காற்று இருப்பதால்.*

11) நள்ளிரவில் சூரியன் தோன்றும் நாடு எது?
*நோர்வே*

12) ஆயிரம் ஏரிகளை உடைய நாடு எது?
*பின்லாந்து*

13) கறுப்புக் கண்டம் எனப்படுவது எது?
*ஆபிரிக்கா*

14) காகங்களே இல்லாத ஊர் எது?
*சிங்கப்பூர்*

15) சமயலுக்கு முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட காய் எது?
*அவரைக்காய்*

16) பறக்கும் போதே தூங்கும் பறவை எது?
*ஆல்பட்றாஸ்*

17) நாக்கு இல்லாத ஊர்வன எது?
*முதலை*

18) உலகில் ஆறுகள் இல்லாத நாடு எது?
*சவுதி அரேபியா*

19) உலகில் முதல் முதலில் உருவாக்கப்பட்ட விஞ்ஞானப் பத்திரிகை எது?
*1869ம் ஆண்டு வெளியிடப்பட்ட நேச்சர் பத்திரிகை*

20) கண்களின் மூலம் வியர்வை வெளியேற்றும் உயிரினம்?
*முதலை*

--தனுஷா தர்மேந்திரன்--
தரம்-09
(மட்/வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலை)

# குறுக்கெழுத்துப்போட்டி இல:-01

**அரங்கம் இரா. தவராஜா.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | | 7 | | ■ | |
| | ■ | 8 | | | ■ | |
| 9 | | | | ■ | ■ | |
| | ■ | 10 | | 11 | | ■ |
| ■ | 12 | ■ | ■ | | ■ | 13 |
| 14 | | | | | | |

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 10.05.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி,
மட்டக்களப்பு.
சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.


**இடமிருந்து வலம்:**

01. தமிழுக்கு இப்படியும் ஒரு பெயர்
04. இதில் கால் வைக்கக் கூடாது பொல்லா நிலம்
06. ஒரு மணித்தியாலம் இதைத் திருப்பி வைத்ததால் குழம்பி விட்டது.
08. தலையின் பின் பக்கம்
09. வாலைக் குமரிகளின் இந்தப் பார்வைகளுக்கு கிளுகிளுப்பு. ஆனால் “ண்“ணை இழந்து விட்டது.
10. இவள் கணவனை இழந்தவள்.
14. சிவாஜியும் பத்மினியும் நடித்த தங்கமான படம் குழம்பி விட்டது.

**மேலிருந்து கீழ்:**

01.எட்டுத்திக்கும் புகழ் பரப்பிய மட்டுநகர் சஞ்சிகை
02.அரசின் சிரசை அலங்கரிப்பது.
03.யானையின் உறுப்பொன்று.
04.விக்கிரமாதித்தன்.
05. ப்பு..... இதற்கேன் அதிர்ச்சி.
07. நண்டுக்கும் பனையோலைப் பெட்டிக்கும் இப்படியும் ஒரு பெயர்.
11. மாட்சிமை பொருந்திய சொல்.
13. இது பிரசாரணம் செய்கிறது.
12. இது பார்க்காது கேட்கும் கேட்காமல் போனால் போச்சி.

# கடுகுக் கதை
# கர்வம் ஆபத்தானது.



கோழிச் சண்டையில் சேவல்கள் இரண்டு ஒன்றோடொன்று கடுமையாக மோதிக் கொண்டன.

தோற்றுப்போன சேவல் தன் காயங்களை மறைத்துக் கொண்டு அவமானம் தாங்க முடியாமல், ஒரு மூலையில் பதுங்கி ஒளிந்து கொண்டது.
வெற்றி பெற்ற சேவலோ வீராப்பாக வீட்டுக்கூரையில்

ஏறி நின்று கொண்டு தன் சிறகுகளை அடித்த வண்ணம்



வெற்றிக் களிப்பில் கூவியது.
அவ்வேளை மேலே வட்டமிட்ட பெரிய பருந்து



**கலாபூசணம் . அரங்கம் இரா. தவராசா ஜே.பி**

அதன் கூவலைக் கேட்டு வேகமாக கீழே வந்து

கூவிய சேவலை தூக்கிக் கொண்டு பறந்தது.
தோற்றுப்போய் ஒளிந்திருந்த சேவல் கம்பீரமாக வெளியே வந்து சுற்றும் முற்றும்



பார்த்துவிட்டு

வளவின் வேலியில் உட்சாகமாக உட்கார்ந்து கொண்டது.

**வெற்றிக் கர்வத்தில் கூவி
வீணாய்ப் போனது ஆவி
தோற்றுப் போன கோழியை
தாங்கி நின்றது வேலி.**

## "பெரும்பான்மையின ஊழியர்களின் மனமாற்றமும் தமிழ் மொழி அமுலாக்கலுக்கு பெருந்தடையாக உள்ளது"

தொடர்ச்சி

அரச கரும மொழி என்பதே பெரிதாக தெரிந்திருக்கவில்லை என்று கூறும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர், இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம் என்றும் கூறுகிறார்.

இறுதியாக தன்னால் ஆன அனைத்து வழிகளையும் தமிழ் மொழியின் அமுலாக்கல் விடயத்தில் கையாள்வேன் என்று கூறும் பேராசிரியர் சந்திரசேகரன், தனது மூன்று ஆண்டு பதவிக்காலத்தில் தன்னால் ஆன அனைத்தையும் செய்வேன் என்றும் உறுதி கூறுகிறார்.

## "அன்னை பூபதியின் பெயரை வைத்து அரசியல் நடத்துகிறார்கள்"

தொடர்ச்சி

பாதிக்கப்பட்ட தமது தாயின் நினைவிடத்தை திருத்தித் தருவதாகக் கூறிய தமிழ் அரசியல் தலைவர்கள், அதனைக் கூட செய்யவில்லை என்று கூறினார். அதுபற்றி தாம் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் அதனை இழுத்தடித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே, தமது அன்னையின் நினைவு தினத்தை தாமே தனிப்பட்ட வகையில் அனுட்டிப்பது என்று முடிவு எடுத்ததாகவும், இங்கு வரும் எந்த அரசியல்வாதியும், ஒரு பொதுமகனாக நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாமே ஒழிய, மைக்கில் பேசவோ, வீடியோ பிடிக்கவோ அனுமதிக்கப் போவதில்லை என்று முடிவெடுத்ததாகவும் கூறினார்.

அதற்கமையவே இந்த வருட நிகழ்வை தாம் ஏற்பாடு செய்ததாகவும் அவர் கூறினார். பத்திரிகையாளர் மாத்திரமே படமெடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

உதைபந்தாட்டப் போட்டி

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடாகியிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை கூட தாம் ஆரம்பத்தில் எதிர்த்ததாகவும், ஆனாலும், அதில் பங்கேற்ற இளைஞர்கள் ஏமாற்றமடைந்துவிடக் கூடாது என்பதற்காக தாம் பின்னர் அதற்கு அனுமதி வழங்கியதாகவும் சாந்தி குறிப்பிட்டார்.

புலம்பெயர் தமிழர்

புலம்பெயர் தமிழர் சிலர் தமது தாயின் பெயரைச் சொல்லி நிதி சேகரிப்பதாக கூறிய சாந்தி, அந்த மாதிரியான விடயங்களில் எவரும் ஏமாந்துவிடக் கூடாது என்றும், அப்படியான நிதி சேகரிப்புக்கும் தமக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றும் கூறினார்.

## நீங்கள் கட்டாயம் அறிந்திருக்கவேண்டிய இணையத்தளங்கள்

தொடர்ச்சி

வலைத்தளம். எதிர்காலத்தில் மிகச்சிறந்த பொக்கிஷமாக விளங்கப்போகும்



வலைத்தளம் இது.

8. மதுரைத்திட்டமும் ஆர்கைவ் வலைத்தளமும்:

நூலகம் வலைத்தளத்தின் அதே செயலை தமிழக அளவில் மதுரைத்திட்டமும் (http://projectmadurai.org/index.utf8.html) உலக அளவில் ஆர்கைவ் வலைத்தளமும் (https://archive.org/) செய்து வருகின்றன. மதுரைத்திட்டத்தின் கீழ் பல பழைய - புதிய தமிழ் நூல்களும், ஆர்கைவ் வலைத்தளத்தில் உலகளவில் அரிதான பன்மொழி நூல்களும் இலவசமாகக் கிடைக்கின்றன.

9. நவீன இலக்கியம்:

தமிழின் சமகால இலக்கிய மும்மூர்த்திகளாக மூவரைச் சொல்வார்கள். ஜெயமோகன், சாரு நிவேதிதா, எஸ்.ராமகிருஷ்ணன். மூவருக்குமே வலைத்தளங்கள் உண்டு. அவற்றில் ஜெயமோகனின் வலைத்தளம், பண்பாடு, வரலாறு, அரசியல், இலக்கியம் என்று பல துறைகளிலும் கட்டுரைகளைக் கொண்டது. நவீன இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களுக்கு ஏனைய இருவரின் வலைத்தளங்களும் பயனுள்ளவை. வாசிக்கும் ஆர்வம் கொண்டவர்கள் அவர்களது வலைத்தளங்களை வாசிக்கலாம்.

ஜெயமோகன் - www.jeyamohan.in
எஸ்.ராமகிருஷ்ணன் - http://www.sramakrishnan.com/
சாரு நிவேதிதா - http://charuonline.com/blog/
இலங்கையின் புகழ்பெற்ற புலம்பெயர் எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் வலைத்தளம்: http://amuttu.net/.

இவர்கள் மாத்திரந்தான் தமிழ் எழுத்தாளர் வலைத்தளங்கள் என்று கூறவில்லை. இவர்களுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களும் இருப்பார்கள். இவை சில உதாரணங்கள் மாத்திரமே.

இவை ஒருசோறு பதம் தான். இணையத்தில் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆர்வமிருந்தால் தேடிப்பாருங்கள். உங்களுக்கு ஆர்வமுள்ள பயனுள்ள எவ்வளவோ விடயங்கள் இணையத்தில் உள்ளன. சமூக வலைத்தளங்கள் மட்டுமே இணையம் அல்ல.

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

### கிழக்கிலங்கையிலிருந்து அயர்ச்சியின்றி இயங்கும் இலக்கியவாதி

தொடர்ச்சி

தங்கையைத்தான் கோபாலகிருஸ்ணன் மணம்முடித்திருக்கிறார். அவர் ஆசிரியப்பணியிலிருந்தவர். இவ்வருட இலங்கைப்பயணத்தில் மட்டக்களப்பில் தங்கியிருந்த மூன்று நாட்களும் இவருடன்தான் பயணங்கள் மேற்கொண்டிருந்தேன். நீண்ட நெடிய நேரம் உரையாடியிருப்பதனால் இவரது இலக்கியம் மற்றும் சமூகம் அரசியல் சார்ந்த முகங்களையும் கூடுதலாகத் தரிசிக்க முடிந்தது.

கலை, இலக்கியத்தில் பல தரப்பட்ட ஆளுமைகளையும் சந்தித்து உறவாடியிருக்கும் கோபாலகிருஸ்ணன், அரசியல் வாழ்வில் பல திகில் அனுபவங்களையும் கடந்து வந்திருப்பவர். கூடல் சிறப்பு மலரையும் வெளியிட்டுவரும் கண்ணகி கலை இலக்கியக்கூடல் அமைப்பின் தலைவராகவும் கோபாலகிருஸ்ணன் இயங்கிவருகிறார்.

விளைச்சல் - குறுங்காவியம்

-----------------------------------------------

கிழக்கிலங்கையில் வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் மேற்கே ஊவா மலைக்குன்றுகளையும் எல்லைகளாகக்கொண்டிருக்கும் மட்டக்களப்பு பிரதேசத்தின் கலை, இலக்கிய சமூகப்பாரம்பரியங்களையும் விவாசாயத்தொழில் முறைகளையும் பின்னணியாகக்கொண்டு பல வருடங்களுக்கு முன்னர் கவிஞர் நீலாவணன் வேளாண்மை என்னும் காவியத்தை புனைந்திருக்கிறார். வேளாண்மையில் அதன் முற்றிய முழுவிளைச்சலையும் காணும் முன்பே "கதிர்" பருவத்தில் அவர் விடைபெற்றுவிட்டார்.

இக்காவியம் பற்றி மூத்த எழுத்தாளர் வ.அ. இராசரத்தினம் " இக்காவியத்தின் மூலம் இயந்திர நாகரீகத்தாற் கற்பழிந்துவிடாத மட்டக்களப்பின் குமரியழகையும், மட்டக்களப்பாரின் விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் வெளியுலகிற்கு காட்டத்தான் நீலாவணன் ஆசைப்பட்டிருக்கிறார்" என்று வேளாண்மை காவியத்தின் முதல் பதிப்பில் சொல்லியிருக்கிறார்.

அவரே இந்த நூலை முதலில் 1982 இல் பதிப்பித்தவர். பின்னர் எஸ். பொன்னுத்துரை சென்னையில் தமது மித்ர வெளியீடாக மற்றும் ஒரு பதிப்பை கொண்டுவந்தார்.

நீலாவணனின் புதல்வர் எழில்வேந்தன் உட்பட பலரும் முற்றுப்பெறாத அந்தக்காவியத்தை தொடர்ந்து எழுதுமாறு கோபாலகிருஸ்ணனை கேட்டிருக்கின்றனர். அதனால் தற்பொழுது எமது கைகளில் தவழ்கிறது வேளாண்மையின் தொடர்ச்சியான விளைச்சல் குறுங்காவியம். காசி. ஆனந்தன், சண்முகம் சிவலிங்கம், நு்.மான், மௌனகுரு, ஆகியோர் இந்நூலில் தமது விரிவான கருத்துக்களையும் பதிவிட்டுள்ளனர். இலங்கை, தமிழக படைப்பாளிகள் சிலரும் விளைச்சல் குறுங்காவியம் தொடர்பாக தத்தமது குறிப்புகளை சொல்லியிருக்கிறார்கள்.

"பேச்சோசைப்பாங்கிலான நவீன கவிதைகளின் முன்னோடிகளாகக்கருதப்படும் அமரர்கள் மஹாகவி, நீலாவணன் வரிசையில் வைக்கப்படும் தகுதியைச் செங்கதிரோன் விளைச்சல் காவியத்தின் மூலம் அடைந்துவிட்டார். மட்டக்களப்பு மாநிலத்துக் கிராம மக்களின், குறிப்பாக படுவான்கரைப்பிரதேச மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக்காட்டும் விளைச்சல் குறுங்காவியம் ஈழத்து இலக்கியப்பரப்பில் நின்று நிலைக்கும் என்பது நிச்சயம்" என்று தொல்லியல் மற்றும் இலக்கிய ஆய்வாளரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வி தங்கேஸ்வரி விதந்து பாராட்டியுள்ளார்.

செங்கதிரோன் கோபாலகிருஸ்ணனின் வாழ்வையும் பணிகளையும் இங்கு சுருக்கமாகவே பதிவுசெய்திருக்கின்றேன். இந்தப்பத்தியின் தொடக்கத்தில் குறிப்பிடும் புதிர், வேளாண்மை விளைச்சலில் பெறப்படும் நெல்மணிகள். விவசாய பெருமக்கள் சேற்றில் கால் வைத்தமையால் நாம் சோற்றில் கைவைக்கின்றோம். அவர்களின் காவியத்தை எமக்குத்தந்திருக்கும் நீலாவணனையும் செங்கதிரோனையும் கொண்டாடுவோம்.

(பயணங்கள் தொடரும்)

## செய்தியாளர் சிவராமின் 14ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு



2005ஆம் ஆண்டு கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளரும் இராணுவ ஆய்வாளருமான தர்மரெட்ணம் சிவராமின் 14ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், அரங்கம் ஊடக நிறுவனம், வொயிஸ் ஒப் மீடியா, இலங்கை இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் இணைந்த அனுசரணையுடன் ஏப்ரல் 28ஆம் திகதி இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.


### வாடகைக்கு

வெள்ளத்தையில் Arpico சுப்பர் மார்க்கட்டுக்கு அன்மையில் சகல தளபாடம், AC, Fridge, Cable TV, வசதியுடனான 3 பெரிய படுக்கை அறைகள் கொண்ட (புதிய வீடு) சுபகாரியங்கள், விடுமுறைக்கு வருவோருக்கு (நாள், கிழமை மட்டும்) சிக்கன வாடகைக்கு.. தொடர்புகளுக்கு 0779522173

### வாடகைக்கு

கிழமை, மாதம், வருடம் அடிப்படையில் வெள்ளவத்தையில் அறைகள், வீடுகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 0750252141




## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# கிழக்கிலங்கையிலிருந்து அயர்ச்சியின்றி இயங்கும் இலக்கியவாதி

முருகபூபதி
அவுஸ்திரேலியா

"புதிர்" என்னும் சொல்லுக்கு, எமது தமிழர் வாழ்வில் இரண்டு அர்த்தங்கள். ஒன்று அறிவுபூர்வமாக புரிந்துகொள்ளவோ, விளக்கிக்கூறவோ முடியாத மர்மம் (Mystery). மற்றது வயலில் அறுவடை முடிந்ததும் முதலில் பெறப்படும் நெல் (Newly harvested paddy).

இந்த இரண்டு அர்த்தங்களும் கலந்த வாழ்வின் விழுமியங்களைச் சந்தித்திருக்கும் இலக்கிய நண்பராகவே செங்கதிரோன் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் அவர்களை இனம் காண்கின்றேன்.

இவருடைய அண்மைய வெளியீடு "விளைச்சல்" (குறுங்காவியம்) நூலின் தொடக்கத்தில் தமது அன்னையார் திருமதி கனகம்மா தம்பியப்பா அவர்களுக்கு கவிதை வரிகளில் சமர்ப்பணம் செய்கையில் ஒரு புதிரான தகவலையும் பதிவு செய்கிறார். அன்னையார் 14-11-2003 ஆம் திகதி மறைந்துவிடுகிறார். பதினான்கு வருடங்களாகின்றன. எட்டாம்நாள் சடங்கின்போது உணர்வுரீதியாக செவிப்பறையை ரீங்காரித்துச் செல்லுகிறது மறைந்த அன்னையாரின் ஏவறைச்சத்தம். இத்தகைய பிரமையை நானும் கடந்து வந்திருக்கின்றேன் என்பதனால் அந்த உணர்வோடு கோபாலகிருஸ்ணன் தமது அன்னையாருக்காக பதிவுசெய்துள்ள இதய அஞ்சலி சமர்ப்பணத்தை இங்கு தருகின்றேன்.

" எட்டாம் நாள் சடங்கில் என்
செவிகளில் கேட்ட - உங்கள்
ஏவறைச்சத்தம்!
இன்னும்தான் நினைக்கின்றேன்
எப்படிச்சாத்தியம்?
புதிய அனுபவமொன்றை - என்னுள்
பூக்கவைத்த அம்மாவே!
மரணம் இயற்கையென மனதை நான்
தேற்றுகிறேன்.
என்றோ ஒருநாள் என்னையும் தேடி
இயமன் வருவான்.
அப்பொழுது அம்மா!
ஓடிவருவேன்!
உங்கள் அருகில் துயில்கொள"

இதனை வாசிக்கும் உங்களில் பலருக்கு இதுபோன்று அல்லது வேறு வடிவத்தில் இந்த அனுபவம் கிட்டியிருக்கும். எனக்கும் இந்த வரிகளைப்படிக்கும்போது, பல நினைவுகள் மறைந்த எனது தாத்தா முதல் அம்மா வரையில் நெஞ்சைச் தழுவிச் செல்கின்றன.

கோபாலகிருஸ்ணனின் இச்சமர்ப்பணம் இடம்பெற்றிருக்கும் விளைச்சலும் வயல்சார்ந்த முதல் அறுவடை பற்றியதுதான். அந்த நெல்லுக்கும் புதிர் என்றுதான் அர்த்தம்.

ஒரு காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளிருந்த காரைதீவில் தம்பியப்பா - கனகம்மா தம்பதியருக்கு 1950 ஆண்டில் பிறந்திருக்கும் கோபாலகிருஸ்ணன், இம்மாவட்டத்தின் தென்கோடிக்கிரமமான பொத்துவிலுக்கு பெற்றவர்களுடன் குடிபெயர்ந்து, ஆரம்பக்கல்வியை பொத்துவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் பின்னர், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரவகுப்பு வரையிலும் கற்றவர்.

இந்த வித்தியாலயம்தான் பின்னாளில் கிழக்குப் பல்கலைக்கழகமாகியது.

"செங்கதிரோன்" என்னும் புனைபெயருடனும் சமகால ஈழத்துக் கலை, இலக்கியப்பரப்பில் அறியப்படும் கோபாலகிருஸ்ணனின் ஆரம்பகால இலக்கியப்பிரவேசம், பல தமிழ், முஸ்லிம்



எழுத்தாளர்களின் இளமைக்காலத்துடன் ஒப்பிடத்தக்கது.

ஏழாம்வகுப்பு பயிலும்போது கலையமுதம், உயர்தர வகுப்பில் தேமதுரம் ஆகிய கையெழுத்து இதழ்களின் ஆசிரியராக தனது ஆற்றல்களுக்கு ஆரம்பப்புள்ளிகள் இட்டு இலக்கிய கலைக்கோலம் வரைந்திருப்பவர்.

உயர்கல்வியைத் தொடர்ந்து கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சிக்கல்லூரியில் விவசாயப்பொறியியல் கற்றுத்தேறும்வேளையிலும் இவரது இலக்கியத்தாகம் தணிந்திருக்கவில்லை.

உள்ளார்ந்த கலை, இலக்கிய ஆற்றல் மிக்கவர்கள் எங்கு சென்றாலும் எத்திசையில் வாழநேரிட்டாலும் தமது ஆற்றலை வளர்த்துக்கொள்வது இயல்பு.

குறிப்பிட்ட பயிற்சிக்கல்லூரியில் 1969இல் அச்சுப்பிரதியாக வெளியான அருவி இதழில் இவரது முதல் கவிதை வெளியாகிறது. அதன் பெயர் நற்கவிதை வேண்டும்.

ஆரம்பகாலக் கவிதைகளில் தனது தீவிர தமிழ் உணர்ச்சியைக் காண்பிப்பதற்கு இவர் களமாக்கிக்கொண்டது தந்தை செல்வநாயகம் வெளியிட்ட சுதந்திரன் பத்திரிகைதான். இந்தப்பத்திரிகையில் செ. இராசதுரை, எஸ்.டி. சிவநாயகம், பிரேம்ஜி ஞானசுந்தரன், அ.ந. கந்தசாமி ஆகியோரும் பிற்காலத்தில் கோவை மகேசனும் பணியாற்றியிருக்கிறார்கள்.

தமிழர் உரிமைப்போராட்ட அரசியலில் கோபாலகிருஸ்ணனுக்கு 1968 முதலே ஈடுபாடு தொடங்கியமையால் தமிழரசுக்கட்சியில் அக்காலப்பகுதியிலேயே இணைந்திருக்கிறார்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் உதவிப் பொறியியலாளராக இணைந்துகொண்டபின்னரும் இவரது இலக்கிய அரசியல் பணிகள் நிறுத்தப்படவில்லை.


கலை இலக்கியத்தையும் அரசியல் அறிவியல் துறைகளையும் நாடுபவர்கள் அவற்றை விட்டு மீளுவது அபூர்வம். தம்மை அறியாமலேயே யுஉவளைளைவ ஆகவும் மாறிவிடுவார்கள்.

Activist களினால் Activist களுக்கும் பிரச்சினை மற்றவர்களுக்கும் பிரச்சினை என்று ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கும் அசோகமித்திரனின் கூற்று ஏற்புடையதுதான்.

அதனால் கெடுதி இல்லை. பிரச்சினைகளை எதிர்கொள்பவர்கள்தான் இந்த Activist கள். அவர்களை விமர்சிப்பவர்களும் அதனை எதிர்கொள்வார்கள். பிரச்சினைகள் மலிந்ததுதானே வாழ்க்கை. தப்பிஓடவா முடியும்...?

எழுத்தாளர்கள் எழுதுவதுடன் நின்றுவிடாமல் சமூகம், அரசியல், உரிமைப்போராட்டம் என தமது வாழ்வை விரிவுபடுத்திக்கொள்ளும்போது Activist ஆக மாறிவிடுகிறார்கள்.

கோபாலகிருஸ்ணனின் வாழ்விலும் இதுதான் நடந்திருக்கிறது. 1983இல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவரும் கைதாகி சுமார் ஏழு மாத காலம் தடுப்புக்காவலில் இருந்திருக்கிறார். அதனால் வேலையை இழக்கநேர்ந்திருக்கிறது. பிணையில் வெளிவந்திருந்தாலும் இழந்த வேலையை மீளவும் பெறுவதற்கும் போராட வேண்டியிருந்திருக்கிறது இந்த எழுத்துப்போராளிக்கு. 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட வேளையில் இழந்த வேலையை மீளப்பெற்றுக்கொள்கிறார்.







அரசியல் சித்தாந்த ரீதியாக தன்னை ஒரு இடதுசாரியாக வளர்த்துக்கொண்டவர், இலக்கியத்துடன் நிற்காமல் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிக்கிறார்.

1989 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறையில் திகாமடுள்ள தேர்தல் தொகுதியில் போட்டியிடுகிறார். 1990 இல் இலங்கையில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோன்றியதும் குடும்பத்துடன் தமிழகம் செல்கிறார். மீண்டும் வந்து, இடையில் விட்டுச்சென்ற வேலையில் இணைகிறார். அத்துடன் நிற்கவில்லை.

எழுத்துத்துறைக்கு அப்பால் சமூகச்சிந்தனைமிக்கவராக இருந்தமையால் விட்டகுறை தொட்டகுறை எனச்சொல்லுமாப்போன்று மீண்டும் 1994 நடந்த பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேலையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராஜாவை எதிர்த்து மீண்டும் அம்பாறை மாவட்டத்தில் களம் இறங்குகிறார். அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தின் சுயேட்சைக் குழுவின் தலைமை வேட்பாளராக மாறிய கோபாலகிருஸ்ணன், அந்த அமைப்பின் இணைப்பாளராக இயங்குகிறார்.

2000ஆம் ஆண்டிலும் அதன்பின்னர் இறுதியாக 2015 இலும் இம்மாவட்டத்தில் தேர்தல் களம் கண்ட இவர் சார்ந்திருக்கும் இயக்கம் தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாகவும் பதிவுபெற்றுள்ளது.

தமது அரசியல் அனுபவங்களின் தொடர்ச்சியாக " தமிழர் அரசியலில் மாற்றுச்சிந்தனைகள் " என்ற கட்டுரைத் தொடரை 14 வாரங்கள் கொழும்பிலிருந்து வெளியாகும் தினக்குரலில் எழுதினார்.

இலங்கைத்தமிழர்களின் அரசியல் இன்றும் ஒரு கேள்விக்குறியாகவே இருப்பதனால், அந்தத்தொடர் 2016 இல் நூலாகத்தொகுக்கப்பட்டு வெளியானபோது அதன் அட்டைப்படத்தையும் கேள்விக்குறியுடன் பதிவுசெய்துள்ளார். சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சம்பந்தன் ஆகியோரின் படங்கள் தான் அந்தக் கேள்விக் குறியில் இடம்பெற்றிருக்கின்றன.

எனக்கு இவர் 2010இல் தான் முதல் முதலில் அறிமுகமானார். அப்பொழுது நான் தரிசித்தது இவரது கலை, இலக்கிய முகம் மாத்திரம்தான். இவர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இலக்கியப்பகுதி செயலாளராக இருந்தவேளையில் எனது பறவைகள் நாவல் வெளியீடும் எனது சமூகம் இன்றியே அங்கு நடந்திருக்கிறது என்பதையும் தாமதமாகவே தெரிந்துகொண்டேன்.

புகலிடத்திலிருந்தமையால் இவரது அரசியல் முகம் தெரியாமலேயே உறவைத் தொடர்ந்திருந்தாலும், பின்னாளில் நெருங்கிப்பழகியதும் எனது கருத்தியலுடன் இணையக்கூடிய அரசியலில் இவரும் ஈடுபட்டிருந்தமையால் அந்த உறவு மேலும் நெருக்கமடைந்தது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம், பத்தி எழுத்து, ஆய்வு, இதழியல் முதலான துறைகளில் அயர்ச்சியின்றி தொடர்ந்து எழுதிவரும் கோபாலகிருஸ்ணன், மட்டுநகரிலிருந்து வெளியான வயல் இதழ், கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் ஏடான ஓலை, தேசிய கலை இலக்கியப்பேரவையின் வெளியீடான தாயகம் முதலானவற்றின் ஆசிரியர் குழாமிலும் இருப்பவர்.

2008 முதல் செங்கதிர் என்னும் இலக்கிய இதழையும் மட்டுநகரிலிருந்து வெளியிட்டுவருகிறார்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் பல்வேறு நிலைப்பதவிகளிலுமிருந்த அனுபவம் பெற்றிருக்கின்றமையால் இச்சங்கத்தின் 75 வருட வரலாற்றையும் எழுதும் பாரிய பொறுப்பினையும் ஏற்றுள்ளார்.

காசி. ஆனந்தனின் துணைவியாரின்

தொடர்ச்சி பக்கம் -










**FCC வழங்கும் இவ்வார சிந்தனை!**

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதுமே மண்டியிடுவது இல்லை. --அப்துல் கலாம்--

